06வது மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

# இந்து தருமம்

2023



இந்து மாணவர் சங்கம் 22 - 23

பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிக் குமரனே முருகா முருகா
வறியவர்க்கும் வரம் தருவாய் மருகா மருகா
குறிதவறா கூர்வேலா முருகா முருகா
அறிந்து உந்தன் அருள் பெறுவோம் மருகா மருகா



# சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் முகம்

| | | |
|---|---|---|
| 01. நூல் | : | இந்து தருமம் 2023 |
| 02. இதழாசிரியர்கள் | : | செல்வன் வி.கோபிதாஸ்<br>செல்வன் சி.டனுஜன்<br>செல்வி கு.டர்மி<br>செல்வி தே.தேவாம்பிகை |
| 03. வெளியீடு | : | இந்து மாணவர் சங்கம் 2022 / 2023<br>பேராதனைப் பல்கலைக்கழகம்,<br>பேராதனை. |
| 04. பிரதிகள் | : | 200 |
| 05. பக்கங்கள் | : | X + 139 |
| 06. தாள் | : | 70g |
| 07. அளவு | : | B5 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. பேராதனை - குறிஞ்சிக் குமரன் திருக்கோயில் பிரதான சிவாச்சாரியாரின் ஆசிச்செய்தி

02. பெருந் தலைவரின் வாழ்த்துச் செய்தி

03. பெரும்பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

04. பொறுப்பாண்மைக்குழு, இந்துப் பட்டதாரிகள் சங்க தலைவர் (2022/23) வாழ்த்துச் செய்தி

05. பொறுப்பாண்மைக் குழு, கும்பாபிஷேகக் குழு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

06. இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

07. இந்துமாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துரை

08. இந்துமாணவர் சங்கம் 66 வது செயற்குழு 2022/2023

09. குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் 66வது பொறுப்பாண்மைக்குழு 2022 / 2023

10. இலங்கையில் முருக வழிபாடு

11. "ஓம் நமோ நாராயணாய"மந்திரம் சொல்லுவதன் பயன்

12. பகவத் கீதையின் பெருமை

13. ஈழத்தில் முருகன் வழிபாடு

14. மகாசிவராத்திரி மான்மியம்

15. பாரதம் காட்டிய நட்பு செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு

16. இந்து சமயத்தில் விரதங்களும் பண்டிகைகளும்

17. கோயில் வழிபாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்

18. ஆலயக் கிரியைகள்

19. இறைவனும் ஆன்மாவும்

20. இந்து ஆலய வழிபாடு

21. சமய சின்னங்கள்

22. சமயம் தோற்றமும் வளர்ச்சியும்

23. மனித வாழ்வில் இந்து சமயத்தின் பங்களிப்பு

24. ஆறுபடை வீடுடைய முருகனின் வரலாறு

25. சமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. இந்து சமயத்தின் ஆழமான பாரம்பரியம்
27. இலங்கையில் சைவசமயத்தின் தொன்மையும் வளர்ச்சியும்
28. மகாசிவராத்திரி வரலாறு மற்றும் இரகசியங்கள்
29. இந்து சமயமும் அன்பு நெறியும்
30. இராமாயணத்தில் போற்றப்படா மாவீரன் மேகநாதன்
31. காலத்தின் போக்கினிலே
32. இலட்சியம்
33. ஒழுக்கம் தரும் விழுப்பம்
34. மெய்ஞானமாகி
35. இந்துசமய நன்னெறிகள்
36. இந்து சமயம்
37. புராணங்கள் விளம்பிடும் சிவனவனின் மகிமை
38. சிவனவனே என் சிந்தையுள்
39. சைவ விழுமியங்கள்
40. கந்தஷஷ்டி
41. தன்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே
42. திருக்கைலாயமும் அதன் மீதான நம்பிக்கைகளும்
43. திருமந்திரமும் வாழ்க்கையும்
44. திருமுறைகளின் பெருமை
45. நவராத்திரி கொலுவின் சிறப்பு
46. பஞ்சாங்கம்
47. அறம் செய்ய விரும்பு
48. கர்ம தத்துவம்
49. திருக்கோயிலும் திருவிழாவும்
50. இந்து பண்பாட்டு வளர்ச்சியில் சபாபதி நாவலரின் பணியும் பங்களிப்பும்
51. வாழ்வை நெறிப்படுத்தும் இந்து சமயம்
52. நவராத்திரி விரதம்
53. முருக வழிபாடு
54. சிவன் வடிவம் உணர்த்தும் தத்துவங்கள்
55. தியானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தலங்களின் சிறப்புகள் பற்றி கூறும் தல புராணங்கள்
57. கும்பாபிஷேகம்
58. சிவனவன் பெருமை போற்றிடுவோம்
59. சித்தமெல்லாம் சிவமயம்
60. 2022 / 2023 ஆம் ஆண்டு இந்துமாணவர் சங்க 66வது செயற்குழுவின் ஆண்டறிக்கை
61. 1952 ம் ஆண்டு முதல் இன்று வரை இந்துமாணவர் சங்க பெருந்தலைவர்கள் மற்றும் தலைவர்கள்

## கும்பாபிஷேக சிறப்பு மலர்

62. கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச்செய்தி
63. கும்பாபிஷேகக் குழு தலைவரின் வாழ்த்துச் செய்தி
64. வாழ்நாள் பேராசிரியர் செ.சிவயோகநாதன் அவர்களின் வாழ்த்துரை
65. கும்பாபிஷேகக் குழு - 2022
66. குறிஞ்சிக்குமரனின் திருவடிகளில் மலரும் நினைவுகள்
67. திருமுருகாற்றுப்படை - ஆறுமுகநாவலர் உரை
68. நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனை - குறிஞ்சிக் குமரன் திருக்கோயில் பிரதான சிவாச்சாரியாரின் ஆசிச்செய்தி

"வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறையில்லை"

என்பது முருகனடியார்களின் முழு நம்பிக்கை. மலைப் பிரதேசத்தின் தலைநகராகிய கண்டியை அண்மித்த பேராதனையில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தை சூழ அமைந்து விளங்கும் அழகிய குன்றின் மீது அருளொளி வீசித் திகழும் குறிஞ்சிக் குமரன் கோவில்.

பல சமய கலை கலாச்சாரத்தை கொண்ட பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் இறைவன் திருவருளால் இந்து மாணவர் சங்கத்தை ஆரம்பித்து கோவிலைக் கட்டும் சங்கத்தை ஆரம்பித்து கோவிலைக் கட்டும் பணியில் ஈடுபட்டு பல்வேறு சமூக, சமயப் பணிகளிலும் அர்ப்பணிப்பு செய்து மறைந்த உத்தமர்களின் நற்கதிக்காக பிரார்த்தித்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக குறிஞ்சிக் குமரன் கோவிலை மையமாக கொண்டு சமய, சமூக, கலாசார நடவடிக்கைகளை முன்னெடுத்து இந்து சமய பண்பாடுகளை விருத்தி செய்வோரது முயற்சிகள் மேலோங்கவும் அவர்களது வாழ்வும் மறுவாழ்வும் சிறந்து விளங்க இந்து மாணவர்களின் ஆவணப் புத்தகமாகவும், திறமை, ஆற்றல், ஆதங்கங்களை வெளிக் கொண்டு வரும் நூலாகவும் தொடர்ந்து வெளிவரும் "இந்து தருமம்" நூலானது மென்மேலும் மெருகேறிய நூலாக வெளிவர வேண்டும் என எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரனைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறுவதில் பெருநிறைவு கொள்கிறேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**க.வரதராஜ குருக்கள்**
குறிஞ்சிக் குமரன் கோயில்
பேராதனைப் பல்கலைக் கழகம்
பேராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந் தலைவரின் வாழ்த்துச் செய்தி

கோல மயில் மீது கொலுவுற்று வீற்றிருக்கும் ஞான பண்டிதனை நாவார வாழ்த்தியபடி இம் மடலினைத் தொடங்குகிறேன். கடந்த காலங்களைப் போலவே இவ் வருடமும் இந்து மாணவர் சங்கம் தமது பணியினைச் செவ்வனே செய்து முடித்திருப்பதை இந்து தருமத்தினூடாக கண் கூடாகக் காணமுடிகின்றது. இது அவர்களின் ஆன்மீகக் கடப்பாட்டினையும் அதன்பால் அவர்களின் ஈடுபாட்டினையும் எடுத்துக் காட்டுகின்றது. தங்களது கனமான கல்விப் பயணத்துக்கு மத்தியிலும் ஆலய கருமங்களையும் விழாக்களையும் முன்னின்று நடாத்தி வரும் இந்து மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இத்தகைய கட்டுக் கோப்பான சங்கமொன்றுடன் இணைந்து கடந்த 12 வருடங்களாக செயற்பட்டு வருவதையிட்டு மிகவும் உவகையடைகிறேன். இனிவரும் காலத்திலும் சங்கத்தின் பொது நோக்குக்காக என்னாலான அனைத்து செயற்பாடுகளையும் முன்வைப்பேன் என கூறிக்கொள்வதோடு இந்து தருமம் தொடர்ந்தும் வெளிவர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியவேண்டுமெனப் பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

**பேராசிரியர் த. சிவானந்தவேள்**
பெருந் தலைவர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

கந்தானை மலைச்சாரலில் கந்தபுராணத்தை ஆனையிலேற்றி பவனிவந்து நம் எல்லோரையும் காத்துவரும் குறிஞ்சிக் குமரன் பாதார விந்தங்களைப் பணிந்து. பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினர் வருடா வருடம் மகா சிவராத்திரி தினத்தன்று வெளியிடும் "இந்துதருமம்" மலருக்கு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பல அழிவுகள் கண்டும் பக்தி மணம் கமழ மீண்டும் மீண்டும் எம்பெருமான் அருளொளி வீசிக்கொண்டிருப்பதற்கும் ஆலயம் சிறப்பாக இயங்கிக்கொண்டிருப்பதற்கும் இந்து மாணவர்களின் பங்களிப்பு மகத்தானது. கல்வி சம்பந்தமான பலதரப்பட்ட வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் ஆன்மீக வழிபாட்டில் மட்டுமல்லாது இறைபணிகளிலும் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டு வருடாவருடம் இந்துதருமம் நூலினையும் வெளியிட்டு தமது ஆற்றலை வெளிக்காட்டினர். தற்போதைய கடும் பொருளாதார நெருக்கடி வாய்ந்த சூழ்நிலையிலும் வழமை போன்று இவ்வருடமும் இந்து மாணவர் சங்கம் தமது பணியினை செவ்வனே செய்து முடித்திருப்பதை 66 ஆவது இந்துதருமம் இதழினூடாகக் கண்கூடாகக் காணமுடிவதனால் அது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

"ஆன்மீக வாழ்வானது மனித வாழ்வைப் புனிதமாகப் பேணும்" என்பதற்கு இணங்க, கல்வி சம்பந்தமான வேலைப்பழுக்கள் மட்டுமல்லாது பல வகையான சவால்கள் நிறைந்த இன்றைய காலச்சூழலில், இந்துமாணவர்கள் எமது ஆலயத்திற்கு ஆற்றிவரும் சேவை மகத்தானது. குறிப்பாக, இவ்வருடம் இடம்பெற்ற மகா கும்பாபிஷேகம் மற்றும் ஆலயத்தின் விசேட பூசைக் காலங்களில் எவ்வித தடங்கலும் ஏற்படாது பலரும் பாராட்டும் வகையில் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள் என்பதை எம் கண்கூடாக காண முடிந்தது. இன்று இளைஞர்கள் மத்த பில் இறை சிந்தனை குறைந்துகொண்டு போவதைக் காணக்கூடியதாக இருந்தாலும்கூட, எ மது மாணவர்களின் ஆலயத் தொண்டுகள் அவர்களின் ஆன்மீகக் கடப்பாட்டினையும் இறைவன் மீதுள்ள அவர்களின் ஈடுபாட்டினையுமே எடுத்தியம்புகின்றது.

மதமாற்றங்கள் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் இந்து மதத்தினை மேலும் வலுவடையச் செய்வதும் பாதுகாப்பதும் இளம் தலைமுறையினரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாய கடமையாகும். இதனை எமது மாணவர்களும் இந்து மாணவர் சங்கமும் சிறப்பாக செய்து வருவதையிட்டு மட்டற்ற மகிழ்சியடைகிறோம். இதற்காக சங்கத்தின் பெரும்பொருளாளர் என்ற ரீதியில் ஆலயம் சம்பந்தமாக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு என்னாலான பூரண ஒத்துழைப்பினை வழங்குவேன் எனக் கூறிக்கொள்வதோடு இந்து தருமம் தொடர்ந்து வெளிவரவும் இறைபணி சிறக்கவும் எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரன் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**கலாநிதி. த. விநாயகதாசன்**
பெரும்பொருளாளர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பாண்மைக் குழு, இந்துப்பட்டதாரிகள் சங்கத் தலைவர் (2022/23) வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தீவின் மத்திய மலைநாட்டில் தேசிய பல்கலைக்கழகங்களுள் தரத்தில் முதன்மை வாய்ந்து விளங்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இலங்கையில் வாழும் சகல சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள் என்பது அதன் சிறப்பம்சமாகும். Sir. Ivar Jenings அவர்களின் எண்ணக்கருவில் உருவாகிய இந்தப் பல்கலைக்கழகமானது அவரது சிந்தனைக்கு அமைவாக சகல சமயத்தைச் சேர்ந்த மாணவர்களும் தமது சமய வழிபாடுகளை மேற்கொள்ள வசதியாக இடங்கள் ஒதுக்கப்பட்டது. அந்த வகையில் இந்து மாணவர்கள் தமது சமய வழிபாடுகளைச் செய்வதற்காக உருவானது தான் குறிஞ்சிக் குமரன் ஆலயமாகும்.

இவ்வாலயமானது பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், கண்டி மற்றும் பேராதனைச் சுற்றுச்சூழலில் வாழும் வணிகர்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடனும் இலங்கை உட்பட உலகெங்கும் பரந்து வாழும் இந்துப் பட்டதாரிகள் மற்றும் பொதுமக்களினதும் ஆதரவுடனும் சிறப்பாக தனது பணியை ஆற்றிவருவது யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் நித்திய கருமங்களில் முழுமூச்சாக இயங்கி வரும் இந்து மாணவர் சங்கத்தினரின் வருடாந்த வெளியீடாக வரும் இந்து தருமத்திற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமை கொள்கின்றேன். எனது பல்கலைக்கழகப் பணிக் காலத்தில் இந்த மாணவர் சங்கத்தின் பெருந் தலைவராகவும் பெரும் பொருளாளராகவும் மிகவும் நீண்ட காலம் பணியாற்றியது எனது வாழ்நாளின் முக்கிய தருணங்களாக உணர்கின்றேன்.

இவ்வருடம் வெளிவரும் இந்து தருமத்திற்கு மிகவும் முக்கியமான சிறப்பு உண்டு. ஏனெனில், எம்பெருமான் குறிஞ்சிக் குமரனுக்கு கடந்த 05.09.2022 இல் தான் 6வது மஹா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாகவும் விமர்சையாகவும் நடாத்தி முடிக்கப்பட்டது. அந்த வகையில் அக்கும்பாபிஷேகம் தொடர்பான தகவல்களையும் தாங்கி "கும்பாபிஷேகச் சிறப்பு மலராக வெளிவரும் இந்து தருமத்திற்கு" எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

குறிஞ்சிக் குமரன் எல்லோருக்கும் அருள் பாலிப்பாராக

**வடிவேல்முருகன் தர்மதாசன்**

தலைவர் - பொறுப்பாண்மைக் குழு 2022/23

தலைவர் - இந்துப் பட்டதாரிகள் சங்கம் 2022/23

பொருளாளர் - மஹா கும்பாபிஷேகக் குழு - 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக்குழு, கும்பாபிஷேகக் குழு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

எல்லாம் முருகன் திருவிளையாடல், என்ன பிரச்சினைகள் ஏற்பட்டாலும் தன் ஆலய பணிகளை நிறைவேற்றும் மகிமை கொண்டவர் குறிஞ்சிக் குமரன். 6வது கும்பாபிஷேகத்தினையும் சிறப்பாக நிறைவேற்ற எல்லா வகையிலும் அருள்பாலித்தார். அவர் அருளால் 15 வருடமாக தொடர்ந்தும் பொறுப்பாண்மைக்குழு செயலாளராக 2010 மற்றும் 2022 கும்பாபிஷேகக் குழு செயலாளராக தொண்டாற்ற அருள்பாலித்தார். அவரருளால் இப்பணியை நிறைவேற்றக் கூடியதாயிற்று.

கும்பாபிஷேகத்திற்கு வருகை தந்த சிவாச்சாரியார்கள், கும்பாபிஷேகத்தை நடத்த சகலவழிகளிலும் உதவிய எமது ஆலய சிவாச்சாரியார் வரதராஜக்குருக்கள், அவருக்கு உதவியான சிவாச்சாரியார்கள், நிதி உதவி வழங்கிய கடல்கடந்த பட்டதாரிகள், இந்து பட்டதாரிகள் சங்க அங்கத்தவர்கள், பேராதனைப் பல்கலைக்கழக கல்விசார், கல்விசாரா உத்தியோகஸ்தர்கள், பொறுப்பாண்மைக்குழு, கும்பாபிஷேகக்குழு உறுப்பினர்கள், இந்து மாணவர் சங்க உறுப்பினர்கள், கண்டி, பேராதனை இந்து வர்த்தகர்கள், கோயிலின் உபயக்காரர்கள், பக்தர்கள், நலன்விரும்பிகள், தொண்டர்கள், நிதி பங்களிப்பு செய்தவர்கள், மண்டலாபிஷேகம் செய்தவர்கள் அனைவருக்கும் நன்றிக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நன்றிநவில் செய்தியினை தாங்கி வரும் இந்துதருமம் மாணவர்களால் தொடர்ந்தும் வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது. பல்கலைக்கழகத்தில் சகல சமயத்தவருடனும் ஒற்றுமையுடன் இயங்குவதோடு கோயிலின் புதிய மண்டபம், நீர்த்தாங்கி, கோயிலின் கோமயம், கோசலம், பால், தயிர் மற்றும் கோமாதா வழிபாடுகளுக்கு தேவையான பசு ஒன்றினை வளர்க்க " மாட்டுப்பட்டி", கோயில் வீதி புனரமைப்பு, மின்சார வழங்கி மற்றும் புதிய மூன்று முக மின்னிணைப்பு, புதிய மின் வயரிங், நீர் விநியோக குழாய்கள் புனரமைப்பு, மண்டப சீரமைப்பு, கூரையமைப்பு போன்ற பல வேலைகளையும், நற்பணிகளையும் கும்பாபிஷேக வேலைகளுடன் இனிதே நிறைவேற்றும் வாய்ப்பு கிடைத்தது. இதன் மூலம் குமரன் அருளால் எல்லா வளமும் பெற்ற கோயிலாக இப்பொழுது எமது கோயில் விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் வரும் காலங்களில் சகலரும் உங்கள் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். இதன் மூலம் எங்கள் ஒற்றுமை, உறவுகள் தொடர்புகள் வளர்வதோடு, தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என வேண்டி இதற்காக குறிஞ்சிக்குமரன் அருளையும் வேண்டி நிற்பவனாக விடைபெறுகிறேன்.

**மேன்மை கொள் சைவநீதி**

**விளங்குக உலகமெலாம்**

நன்றி

**ஆர் மகேஸ்வரன்**

செயலாளர், பொறுப்பாண்மைக்குழு

செயலாளர் கும்பாபிஷேகக் குழு – 2010, 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

திகடச் சக்கரம் செம்முகம் ஐந்துளான்

சகட சக்கரத் தாமரை நாயகன்

அகட சக்கர இன்மணி யாவுறை

விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்

என விநாயகனைத் துதித்து மலைகளும் மரங்களும் சூழ்ந்து அழகு நிறைந்த குறிஞ்சிக் குமரனின் பாதங்களையும் வணங்கி இம்மலரின் முன்னுரையைத் தொடங்குகிறேன்.

இன்றைய உலகில் உள்ளத்தை பண்படுத்தும் இறை உணர்வும் நம்பிக்கையும் கல்வியினூடே வளர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு அறிஞர்களையும் தலைவர்களையும் இச் சமூகத்திற்குத் தரும் பல்கலைக்கழகங்களில் ஆன்மீக உணர்வும் மத வழிபாட்டிற்கான வாய்ப்புக்களும் வழங்கப்பட வேண்டியது அவசியமாகிறது. அவ் வழியில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்களின் ஆற்றல்களையும் அறிவையும் வளர்க்கக்கூடிய வகையில் குறிஞ்சிக் குமரன் ஆலயமும் அதன் திருப்பணிகளும் மாபெரும் வாய்ப்பாகவே அமைகிறது.

இவ்வகையில் பலதரப்பட்டோரின். ஆதரவுடனும் உற்சாகத்துடனும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மன்றத்தினால் வெளியிடப்படும் “இந்து தருமம்” எனும் இந்நூல் வாசகர்களின் இந்து சமயம் சார்ந்த அறிவை வளர்க்க பெரும் பணியாற்றுகின்றது. வருடா வருடம் வெளியிடப்படும் இந்நூல் இம்முறை அறுபத்தாறாவது இதழாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்நூல் இறையருளாலும் பேராசிரியர்கள், அறிஞர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலதரப்பட்டோரின் முயற்சியாலும் பலவருடங்களாக வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழ் இந்துசமயம் பற்றி ஆழ்ந்த அறிவுடைய அறிஞர்களது ஆக்கங்களோடு மாணவர்களின் ஆக்கங்களையும் கொண்டுள்ளது.

இறுதியாக இம்மலரை சிறப்பாக வெளியிட அருள் புரிந்த இறைவனுக்கும் இம்மலராக்கத்திற்கு ஆசிகளையும் வாழ்த்துக்களையும் ஆக்கங்களையும் தந்துதவிய அனைவருக்கும் இப்பணி இனிதே முடிவடைய அயராது உழைத்த மலர்குழுவிற்கும் பொறியியல் பீடத்திற்கும் இந்நூலை அச்சிட்டு உதவிய அச்சகத்திற்கும் "இந்து தருமம்" எனும் இம்மலர் சிறப்பாக வெளிவர உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூல் மென்மேலும் சிறந்த பதிப்புக்களை தொடர்ந்தும் வெளியிட இறைவனை பிரார்த்தித்து நிற்கிறோம்

நன்றி

இதழாசிரியர்

**வி. கோபிதாஸ்**

**சி.டனுஜன்**

கு.டர்மி

**தே.தேவாம்பிகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்க தலைவரின் வாழ்த்துரை

இயற்கை எழிலும், பனிமலர் தூவிவரும் இளங்காற்றும் அமையப் பெற்றநகரில் பெருநதியாம் மகாவலிகரையில் அமைந்து விளங்கும் பேராதனை கிராமத்தில் பசுமைநிறைந்த குன்றாம் குறிஞ்சியின் உச்சிதனில் வேல்தாங்கி நிற்கும் குறிஞ்சிக்குமரன் அருளாசியுடன் இந்துமாணவர் சங்கதலைவராக இருப்பதைப் பெரும்பேறாகவே கருதுகிறேன்.

வெவ்வேறு பிரதேசம், வெவ்வேறு கலாசாரங்கள் ஒன்றிணையும் கல்வி கலாசாலையாம் பேராதனை பல்கலைகழகத்தில் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை மையமாக வைத்து செயற்பட்டு வரும் இந்து மாணவர் சங்கம் இந்து மாணவர்கள் மத்தியில் இறைபக்தி, மனஅமைதி, இந்துசமய பண்பாடு போன்றவற்றை விதைப்பதில் பெரும் பங்காற்றுகின்றது. இச்சங்கமானது ஆலயம் சார்ந்த சமய நடவடிக்கைகளில் மட்டுமன்றி கழக நலனிலும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

எமது செயற்குழு சிறந்த முறையில் இயங்குவதற்கு பெரும்தூண்களாக விளங்கிய ஆலய பிரதமகுரு, உதவிக்குருமார்கள், பொறுப்பாண்மைக் குழு, இந்துப் பட்டதாரிகள், கழக உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு மேலும் என்செயற்குழுவுடன் தோளோடு தோள்நின்று உழைத்த என் சகாக்களாகிய பேராதனை மைந்தர்களுக்கும், குறிஞ்சி வாழ் கிராம மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

வருடந்தோறும் எம் மாணவர்களின் கைவண்ணத்தின் பயனாய் வெளிவரும் மணிமுடியாக “இந்து தருமம்” நூலை இம்முறையும் உங்கள் கரங்களில் சேர்ப்பதில் பேரானந்தம் கொள்கின்றோம். இந்நூலானது சிறப்பாக வெளிவர எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரனின் திருவருளை வேண்டி பிராத்திக்கின்றேன்.

“குறிஞ்சி குமரா போற்றி போற்றி”

**க.மாலவன்**
தலைவர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மாணவர் சங்கம் 66வது செயற்குழு
## 2022 / 2023

| | |
|---|---|
| பெருந்தலைவர் | : திரு.த.சிவானந்தவேள் |
| பெரும் செயலாளர் | : கலநிதி.த.விநாயகதாசன் |
| தலைவர் | : திரு.க.மாலவன் |
| உப தலைவர் | : திரு.காருண்யன் |
| இணை செயலாளர்கள் | : திரு.சுபகேதன் |
| | திரு.தனுஜன் |
| பொருளாளர் | : திரு.யாழரசன் |
| இதழாசிரியர்கள் | : திரு.வி.கோபிதாஸ் |
| | திரு.சி.டனுஜன் |
| | செல்வி.தே.தேவாம்பிகை |
| | செல்வி.கு.டர்மி |
| நூலகர் | : திரு.சுஜீதரன் |
| பண்டக முகாமையாளர்கள் | : திரு.ஐங்கரன் |
| | திரு.சுகநந்தன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | : திரு.நேருஜன் |
| | திரு.சஜீபன் |
| | திரு.குகந்தன் |
| இணைப்பாளர் | : திரு.சிவகஜேந்திரன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : திரு.அகிலன் |
| | திரு.அருந்தவன் |
| | திரு.கனுஷ்கர் |
| | திரு.கோகுலராஜ் |
| | திரு.மதுசன் |
| | திரு.மயூரதன் |
| | திரு.மிதுசன் |
| | திரு.சுஜீதன் |
| | திரு.சிவசங்கர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் 66வது
## பொறுப்பாண்மைக் குழு - 2022/2023

| | | |
|---|---|---|
| தலைவர் | - | வடிவேல்முருகன் தர்மதாசன் |
| பொதுச் செயலாளர் | - | இரா.மகேஸ்வரன் |
| நிர்வாகச் செயலாளர் | - | பேராசிரியர் த. சிவானந்தவேள் |
| பொருளாளர் | - | எஸ்.மயூரன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | - | பேராசிரியர் செ. சிவராசசிங்கம் |
| | | து.சிவசுப்பிரமணியம் |
| | | கலாநிதி.த.விநாயகதாசன் |
| | | கலாநிதி.கே.நவரத்தினராசா |
| | | லோ.தசாந்தன் |
| | | த.வெங்கடேஸ்வரன் |
| | | (முழுப் சார்பான நியமன உறுப்பினர்) |
| | | க.மாலவன் |
| | | நா.சுபகேதன் |
| | | ச.யாழரசன் |
| | | சி.டிலக்சன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் முருகவழிபாடு -
### கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்ட ஆய்வு

பழங்காலத் தமிழர்களால் வழிபடப்பட்ட தெய்வங்களுள் முருகன் சிறப்பிடம் பெறுகின்றான். முருகு எனும் சொல் "முருகு" எனும் சொல்லின் அடியாகத் தோன்றியதாகும். முருகு எனும் முதனிலைச் சொல், 'அன்' விகுதியைப் பெற்று, முருகன் என ஆயிற்று. முருகு எனும் சொல் அழகையும், முருகன் என்னும் சொல் முருகக் கடவுளையும் குறிக்கின்றன.

முருகு எனும் சொல் பலபொருளைக் குறிக்குமாயினும், அவற்றுள் நால்வகைப் பொருள்களே மிகவும் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. அவை அழகு, மணம், தெய்வத்தன்மை, இளமை என்பனவாகும். முருகன் எனும் சொல் இவ்வாறு பலபொருளைக் குறிக்குமாயினும், முருகையுடையவன் (அழகையுடையவன்) என்னும் பொருளைச் சிறப்பாகக் கொண்டுள்ளது. முருகு என்னும் சொல் குறிப்பிடும் அழகு, மணம், தெய்வத்தன்மை, இளமை உடையவனே முருகனாவான்.

முருகனின் பெயர்களைப் பிங்கலநிகண்டு தொகுத்துக் கூறுகின்றது.

"குமரன், தெய்வகுஞ்சரிமணாளன்
சிலம்பன், முருகன், சேயே, செவ்வேள்,
கடம்பன், சாமி, கார்த்திகேயன்,
சேந்தன், குறிஞ்சிக்கிழவன், செட்டி,
வேலன், வள்ளிக்கேள்வன், விசாகன்,
தாரகாரி, குகன், சரவணபவன்,
மயில் வாகனனே,வன்னிப் பூக்குமரன்,
ஆறிருகரத்தோன், அரிதிருமகன்,
குழகன், கங்கைமைந்தன், குன்றெறிந்தோன்,
அறுமீன் காதலன், சுரற் றடிந்தோன்,
சேவலங் கொடியோன், சேனாதிபதி,
பாவகியாசன், கலையறிபுலவ,
அரன் மகன், யானைமுகவற்கிளையோ
னினையஅறுமுகம் கடவுள் பெயரே."

தமிழ் நாட்டில் முருகவழிபாடு தொன்றுதொட்டு வந்துள்ளது. ஆனால், முருகனைப் பற்றிய புனைகதைகள் எதுவும் இலக்கியங்களில் குறிப்பிடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், பின் நாட்களில் முருகனைக் கார்த்திகேயனாகவும் சிவகுமாரனாகவும் கொண்டு பலகதைகள் வடமொழியில் தோன்றியுள்ளன. இது தமிழ் நாட்டில் வடமொழி செலுத்திய செல்வாக்கினையே காட்டுவதாகவுள்ளது, வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய ஆரியர்கள் தமிழ்நாடடில் செல்வாக்குப் பெற்றிருந்த முருகவழிபாடு பற்றிய விடயங்களை அறிந்துகொண்டு,அம் முருகவழிபாட்டம்சங்களைத் தமக்குரியதாக்கிக் கொண்டு, அதற்கேற்ற வகையில் தங்களது பண்பாட்டிற்கு ஏற்றவாறு, முருகனது பிறப்பையும் வரலாற்றையும் மாற்றி எழுதியிருக்க வேண்டும். ஆரியரது சமயக் கோட்பாடுகளையும், சடங்குகளையும், புராணங்களையும் ஏற்றுக் கொண்டதமிழ் மக்கள், காலப்போக்கில் அவற்றை வேறுபடுத்தி உணராமல், தமது கொள்கைகளாகவே ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

முருகவழிபாடு தொடர்பாக இரு வேறுபட்ட கருத்துக்கள் அறிஞரிடையே நிலவுகின்றன. முருகன் தமிழ் நாட்டுக்குரிய தெய்வமாகவும் வடநாட்டுக்குரிய தெய்வமாகவும் குறிப்பிடப்படுகின்றான். சு.வித்தியானந்தன் போன்றோர் இவனைப் பழந்தமிழ்க் கடவுள் என்றுகுறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல், இவன் ஆரியகார்த்திகேயனின் தன்மைகளையும் தன்னுடன் இணைத்துக் கொண்ட ஒரு தெய்வம் எனவும் குறிப்பிடுவர். இவர்களின் இத்தகைய கருத்துக்கள் ஒரு கலப்புத் தெய்வமாகவே காட்டுகின்றன.

முருகனைத் தமிழ் நாட்டுக்குரிய தெய்வமாகவும் காட்டுபவர்கள், பலவிதமான ஆதாரங்களைக் காட்டமுயற்சிக்கின்றனர். தமிழ் நாட்டுக்குரிய தெய்வம் என்பவர்கள், அவனைத் திராவிடத் தெய்வமாகக் காட்டுகின்றனர். இத்தகைய முருகனைப் பழங்காலம் தொடக்கம் வழிபடப்பட்ட தெய்வமாகக் குறிப்பிடுவர். இவனே 'வேலன்' என்ற பெயரில் காலங்காலமாக வழிபடப்பட்ட தெய்வம் எனவும் குறிப்பிடுவர்.

திராவிட முருகனுக்குப் புராணக்கதைகள் எதுவுமில்லை என்றும் கூறுகின்றனர். அதேவேளை, இவனின் வழிபாடானது, வெறியாடலுடன் தொடர்புபட்டதாகவும் குறவர் குலமக்களுக்கான (குறிஞ்சிநில) வழிபாடாகவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வழிபாட்டின் போதுஉயிர்ப் பலி கொடுப்பதும் மது படைப்பதும் இடம்பெறுகின்றதெனவும் கூறுவர். மேலும் முருகனின் விபாட்டின் போதுகாந்தள், வேங்கை போன்ற மலர்களைத் தூவியும் வழிபாடு நடத்தப்பட்டதாகக் கூறுவர். அதாவது, ஆகமவிதிக்குட்படாத வேள்விகளுடன் தொடர்புபடாத பாமர வழிபாடாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழிபாடு இடம்பெற்றதாகக் குறிப்பிடுவர். இவ்வழிபாட்டுடன் கூத்துக்களும் தொடர்புபட்டதாகக் கூறுவர்.

முருகவழிபாடானது, ஆரியருக்குரிய வழிபாடெனக் கூறுபவர்கள் இவனைக் 'கார்த்திகேயன்' என்றபெயரில் அழைக்கின்றனர். கார்த்திகேயன் வேதபுராணங்களின் விளக்கப்படி பிரம்மச்சரியாகவோ அல்லதுதேவசேனாவின் கணவனாகவோ காட்டப்படுகின்றான். அதேவேளை, இவனின் பிறப்பைப் பற்றிய ஏராளமான புராணக் கதைகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறானகதைளுடன் தொடர்புபட்ட முருகனைச் சுப்பிரமணியன் எனவும் அழைக்கின்றனர், அதேவேளை, இவனைக் கூத்துக்களுடன் தொடர்புபடுத்தியதாகத் தெரியவில்லை. இவ்வழிபாட்டில் பலியிடல் போன்றவையும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வகையில், இக்கடவுள் பற்றிய உண்மையான விடயங்களைக் கண்டறிய முயலும்போது, ஒருபொதுவானமுடிவுக்குவரலாம். இம்முருகவழிபாடானது, இந்தியத் துணைக் கண்டத்திலே தோன்றியஒருபொதுவானகடவுள் வழிபாடென்பது தெளிவாகின்றது. ஒரு பொதுமையான கடவுள் தான் பிற்பட்ட காலப்பகுதிகளில் இரு வேறுபட்ட அம்சங்களைக் கொண்ட இரு கடவுளராகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்வகையில், நா.வானமாமலையின் கருத்தைஏற்றுக்கொள்ளலாம். அவர், உலகிலுள்ள பெரும்பாலான மதங்களில் முருகனின் அம்சங்கள் காணப்படுகின்றன. என்றும் அதேவேளைமுருகன் எல்லா மதங்களுக்கும் முற்பட்டவன் என்றும் குறிப்பிடுகின்றார்.

முருகவழிபாட்டை இன்னொரு முறையாகவும் நோக்கலாம். சிவனைச் சைவர்கள் பலபெயர்களில் வழிபடுவதுபோல, முருகனையும் வேலன், கார்த்திகேயன் போன்ற பெயர்களில் வழிபட்டிருக்கலாம். பல்வேறு இடங்களில் வாழும் மக்கள் தமதுசமயச் சூழ்நிலை, பண்பாட்டம்சங்களுக்கேற்ப வழிபாட்டுமுறைகளை மாற்றி அமைத்திருக்கலாம்.

வடநாட்டில் வசிப்பவர்கள் எப்போதும் வேள்வி,யாகம், அக்கினிவளர்ப்பு என்பவற்றுடன் தமது வழிபாட்டை மேற்கொள்பவர்கள். தமிழ்நாட்டில் வாழ்பவர்கள் வேள்வி, யாகம் என்பவற்றைத் தவிர்த்து, ஆரம்பகாலங்களில் மலர் கொண்டும் நீர் கொண்டும் சிலசடங்குகளோடு கூடியவழிபாட்டைமேற்கொண்டனர் எனலாம். வழிபாட்டு அம்சங்கள், முறைகள் என்ற முறையில் பல்வேறு பிரதேச வழிபாடுகளும் வேறுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், வழிபடப்பட்ட தெய்வம் ஒன்றாக இருக்கலாம். இவ்வகையில், முருகன் பலபிரதேசங்களில் பல்வேறுவகையான வழிபாட்டுமுறமைகளுக்குட்பட்ட பொதுத் தெய்வமாகக் காணப்பட்டான் என்பதே பொருத்தமானதாகும்.

## • இலங்கையில் முருகவழிபாடு

தமிழகத்தில் விசயநகர-நாயக்கர் காலப்பகுதியில் முருகவழிபாடு சிறப்புற்று விளங்கியதைப் போலவே, இலங்கையில் கந்தனின் வழிபாடு சிறப்புற்றிருந்தமைக்கான ஆதாரமுண்டு. முருகன் இலங்கையரால் 'கந்தன்' என்றபெயரில் வழிபடப்பட்டுள்ளமை தெரியவருகிறது. கந்தபுராணக் கதைகளின் தாக்கத்தினை இங்கு நடத்தப்பட்ட வழிபாடுகள் மூலம் அறியமுடிகிறது. அசுரருடன் முருகன் போர் செய்தமை, அவனுடைய படைத்திறன், உருவத்தோற்றம் என்பன இக்காலப் பகுதியில் இலங்கையில் முருகன் தொடர்பாகஎழுந்த இலக்கியங்களில் காணக்கூடியதாயுள்ளது.

அக்காலப்பகுதியில் இலங்கையை ஆண்ட கண்டி, கம்பளை காலப்பகுதி மன்னர்களின் பாறை சாசனங்களிலும், கோயில்களிலும் முருகனைப் பற்றியகுறிப்புகள் காணப்படுகின்றன. அதேவேளை, கதிர்காமம் என்ற தலம் தனியாகவே முருகனுக்குரிய தலமாக அக்காலத்தில் போற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.
கடலாதெனியாவில் தர்மகீர்த்திதேரரால் குகைக்கோயில் சாசனமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்குகைக்கோயிற் சுவரொன்றில் பிரம்மா, விஷ்ணு, ஸ்கந்தகடவுளரின் ஓவியங்கள் தீட்டப்பட்டு,அவற்றின் கீழ் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன.

## I. கடலாதெனியகல்வெட்டு

இக்கல்வெட்டானது ஸ்ரீ சங்கபோ ஸ்ரீ ஜயவீரபராக்கிரமபாகு (1511) காலத்துக் கல்வெட்டாகக் காணப்படுகின்றது. இக்கல்வெட்டில் முருகன், ஸ்கந்தன், குமார என்று குறிக்கப்பட்டுள்ளான். அத்துடன் அவன் காவல் தெய்வமாகவே காணப்பட்டானெனவும் அறியமுடிகிறது. இதனைப் பின்வரும் சாசன எழுத்துக்களால் அறியலாம்.

விஜயன்- கே. அ
ஜஞாய- கிஹிறலி
உபுல்வன் சமன்
பொக்சல் ஸ்க்
ந்தவிபீஷணா
தேவியன் - கே - ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. திஹாரிய–பாறைக்கல்வெட்டு

இக்கல்வெட்டு பற்றிப் பரணவிதான என்பவர் கருத்துத் தெரிவிக்குமிடத்து, அதுகிரி கண்டசைத்தியம் பற்றிக் கூறுகின்றது என்கின்றார். ஆனால் அதன் தமிழ்ப் பெயர் 'கந்தசாமிமலை' என்பதாகும். எனவே கந்தவழிபாட்டுடன் தொடர்பான மலையாக அக்காலப் பகுதியில் அது காணப்பட்டிருக்கலாம்.

## III. அலுத்நுவரகல்வெட்டு

அலுத்நுவரகல்வெட்டில் உத்பலவர்ணஎன்றகடவுளுடன் இலங்கையில் ஏனைய காவல் தெய்வங்களானசமன்குமார,விபீசண, ஸ்கந்தஆகியநான்குகாவற்தெய்வங்கள் குறிப்பிடப்படுவதாகக் கூறுகின்றார்.

இக்கல்வெட்டுகோட்டையரசன் 6ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் 9ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டானடெடிகமகல்வெட்டைப் போலஉள்ளதெனப் பரணவிதாணகுறிப்பிடுகிறார்.

இக்கல்வெட்டும் விசயநகர- நாயக்கமன்னர்களின் சம காலத்ததாகவே காணப்படுகின்றது. இதன்மூலம் முருகன் காவல் தெய்வமாக அக்காலப் பகுதியில் வழிபடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (பௌத்தசமயமரபில்)

## IV. 05ம் புவனேகபாகுவின் பாறைச்சாசனம்

இப்பாறைச் சாசனமானது,கண்டிமாவட்டத்திலுள்ளபாத்தஹேவாஹெட்டபகுதியில் நுகலியத்தபகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது ஐந்தாம் புவனேகபாகுவின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டதாகும். இதில் முருகனின் பெயர்களில் ஒன்றான 'சண்முக' என்றபெயர் இடம்பெற்றுள்ளது. எனவே இப்பகுதியில் முருகவழிபாடுகாணப்பட்டிருத்தல் வேண்டுமெனக் கருதலாம்.

## V. லங்காதிலகசிங்களபாறைச்சாசனம்

புவனேகபாகுவின் மூன்றாவதுஆட்சியாண்டுக் காலத்தில் லங்காதிலகவிகாரையில் இரண்டு கல்வெட்டுக்கள் காணப்பட்டன. இவ்விரண்டு கல்வெட்டுக்களில் ஒருகல்வெட்டான சிங்களக் கல்வெட்டொன்று முருகனைப் பற்றிய தகவல்களைத் தருகின்றது. அக் கல்வெட்டின் மூலம், அவ்விகாரையில் நான்கு மாடங்களைக் கொண்ட கட்டிடமொன்று கட்டப்பட்டுள்ளதைப் பற்றிஅறிய முடிகிறது. அதேவேளை,அம்மாடங்களில் ஒவ்வோருமாடமும் வெவ்வேறு பிரிவினரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. முதலியார், படைவீரர்கள், சேனாதிலங்காரஆகியோர் முறையேநான்காவது, இரண்டாவது, முதலாவது மாடிகளைக் கட்டுவவதற்குப் பொறுப்பாக இருந்ததாகவும் இக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. 'ராயர்' என்ற சிற்பியே தலைமைச் சிற்பாசாரியரின் மேற்ப்பார்வையாளராக இருந்துள்ளார். அத்துடன்,தென்னிந்தியக் கட்டிடக் கலைஞர்களும் சிற்பிகளும் கட்டிட வேலைகளுக்கு அமர்த்தப்பட்டிருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகின்றது.

மேலும், இச்சாசனத்தில் மைத்ரி, லோகேசுவரநாதர், சுயாம்மா, சந்துஷ்ட, சாகரபிரமா, விஷ்ணு, மகேஸ்வர ஆகியகடவுளரும் காத்தல் கடவுளராகிய உபுல்வன், சமன், விபீசண, ஸ்கந்த, கணபதி ஆகியோரும் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

இக்கல்வெட்டின் வாயிலாகக் கம்பளை இராச்சியக் காலப்பகுதியில் முருகன், ஸ்கந்தன், என்றபெயரில் காவல் தெய்வமாகக் காணப்பட்டான் என்பதும் தெரியவருகிறது, அதேவேளை, இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் முதலியார் என்ற இனத்தவர்கள் தமிழகத்திலும் முருகவழிபாட்டைவளர்த்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால், இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் முதலியார் படையினராக இருத்தல் வேண்டும்.

இலங்கையில் முருகனின் பிறப்புத் தொடர்பான கதைகளும், அவனின் புகழை எடுத்துச் சொல்வதாக அமைந்த நாட்டுப் பாடல்கள் பலவும் காணப்படுகின்றன. அவைதமிழகத்தில் விசயநகர-நாயக்கர்களின் காலத்துக்குச் சமகாலத்தில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். எனவே,அவ்விலக்கியங்கள் பற்றிநோக்குவது பொருத்தமானதாக உள்ளது.

**கலாநிதி சோதிமலர் ரவீந்திரன்,**
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஓம் நமோ நாராயணாய"
## மந்திரம் சொல்வதன் பலன்

எப்பொழுதும் கையிலே தம்புராவும் "ஓம் நமோ நாராயணாய" எனும் மந்திரத்தை உச்சரித்தபடியே மூவுலகையும் வலம் வருபவர் சப்த ரிஷிகளில் ஒருவரான நாரதர். பக்திக்கு உதாரணமாக விளங்கும் நாரதர் எப்பொழுதும் ஓம் நமோ நாராயணாய எனும் மந்திரத்தை ஏன் உச்சரிக்கிறார்.

ஒருநாள் நாரதர் வைகுண்டத்தில் இருக்கும் நாராயணனை நேரில் காணச் செல்கின்றார். அங்கு சென்ற நாரதர் "இறைவனே உன் பக்தர்கள் அனைவரும் உனது பெயரைச் சொல்கின்றார்களே? அப்படி என்ன இருக்கிறது உனது பெயரில், எனக் கேட்டார். உடனே நாராயணன் நாரதரைப் பார்த்து நாரதா அவர்கள் என் பெயரை சொல்லி வேண்டுவதைப் பற்றி நான் உனக்குச் சொல்வதை விட, நீயே நேரில் சென்று தெரிந்து கொள்" என்று கூறி நாரதனை பூலோகத்தில் இருக்கும் வனத்தில் வாழும் ஒரு புழுவிடம் அம்மந்திரத்தை சொல்லுமாறு கூறினார். உடனே நாரதரும் வனத்தை நோக்கிச் சென்று அங்கு இலையின் மீது ஊர்ந்து கொண்டிருந்த புழுவின் அருகில் சென்று அதனிடம் "ஓம் நமோ நாராயணாய" என்று சொன்னார். உடனே அப்புழு செத்து விழுந்தது. நாரதர் குழப்பமடைந்து வைகுண்டம் சென்றார். இறைவனே நான் அப்புழுவிடம் உங்கள் பெயரைச் சொன்னதும் அப்புழு விழுந்துவிட்டது. இதுதான் உங்கள் மகிமையா? என நாரதர் வினாவினார். அதை கேட்ட நாராயணன் "நாரதா நீ மீண்டும் பூலோகம் செல். அங்கு ஒரு பசுமாடு கன்றை ஈனும். அதனிடம் என் பெயருடனான மந்திரத்தைச் சொல் என்றார். மீண்டும் நாரதர் பூலோகம் சென்று இறைவன் கூறியபடி ஈன்ற கன்றின் அருகே சென்று "ஓம் நமோ நாராயணாய" எனும் மந்திரத்தை கூறினார். பிறந்து சில நிமிடங்களேயான கன்று கீழே விழுந்து இறந்தது. நாரதர் திடுக்கிட்டார். சைவர்களாகிய எமது வாழ்விலே பசுவைக் கொல்வது மகா பாவம் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையே. அவ்வாறே நாரதரும் பிறந்து சில நிமிடங்களேயான கன்றினை மந்திரத்தைச் சொல்லி கொன்று விட்டோமே என நினைத்து வருந்தினார்.

உடனே நாரதர் அங்கிருந்து மீண்டும் வைகுண்டம் சென்றார். இறைவனிடம் நான் உங்கள் மந்திரத்தைச் சொன்னவுடன் அக்கன்று இறந்துவிட்டது. எனக் கூற, நாராயணர் நாரதா நீ கவலைப்படாதே மீண்டும் ஒருமுறை பூலோகம் செல். நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுமிடத்தில் ஒரு சிறுவன் விளையாடிக்கொண்டிருப்பான். அவனிடம் மந்திரத்தை சொல் என்றார். நாரதருக்கு மிகுந்த பயமாகி விட்டது. ஏற்கனவே இரு உயிர்கள் இறந்து விட்டனவே என்ற தயக்கத்துடன் மீண்டும் பூலோகம் சென்றார். இறைவன் சொன்ன இடத்தில் சிறுவன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். அவனருகே சென்று இறைவனின் மந்திரத்தை "ஓம் நமோ நாராயணாய"என்று கூறியதும் சிறுவனும் இறந்து போனான். நாரதருக்கு மிகுந்த கவலையாயிற்று. மீண்டும் வைகுண்டம் வந்தடைந்த நாரதர் அங்கு நாராயணனும் மகாலக்சுமியும் அமர்ந்திருக்க அவர்களுக்கு அருகில் ஒரு முனிவர் நிற்பதை அவதானித்தார். மனம் தடுமாறிய நிலையில் வந்த நாரதரை நோக்கி இறைவன் "என்னவாயிற்று" என்று வினவ நாரதர் "இறைவா, இது என்ன சோதனை? நான் தங்களிடம் தங்கள் பெயரிலான மந்திரத்தின் சிறப்பை சொல்லும்படி கேட்டேன். ஆனால் நீங்களோ பூவுலகிற்கு சென்று தங்களுடைய மந்திரத்தை சொல்லிப் பார்க்கச் சொன்னீர்கள். நான் அம்மந்திரத்தைச் சொன்னவுடன் புழுவும், கன்றும், இளம்பாலகனும் இறந்துவிட்டனர். உங்கள் பெயரிலான மந்திரம் இவ்வளவு கொடுமையாக இருக்கிறதே, நான் சிலவேளை தவறாக உச்சரித்துவிட்டேனோ எனக் கேட்டார் நாரதர்.

உடனே நாராயணன் நாரதரைப் பார்த்துச் சிரித்துவிட்டு மீண்டும் ஒரு தடவை அவ் மந்திரத்தை உச்சரிக்கச் சொன்னார். நாரதரும் மனதைத் திடப்படுத்தி அவ் மந்திரத்தை உச்சரித்தார். "ஓம் நமோ நாராயணாய" எனும் மந்திரத்தை உச்சரித்தும் முனிவரின் ஆன்மா உடலை விட்டு இறைவனின் காலடியை அடைந்தது. நாரதர் கலங்கிப் போய்விட்டார். நாராயணன் நாரதரைப் பார்த்து "நாரதா, எனது பெயரை உச்சரித்தால் அனைத்து உயிர்களும் முத்திப்பேறு அடைய முடியும் என்பதை உணர்த்தவே இவ்வாறு உன்னைப் பயன்படுத்திக் கொண்டேன் என்று இறைவன் கூறினார். நாரதர் கூறிய இறைவனின் மந்திரத்தை கேட்டவர்களுக்கே முத்திபேறு கிடைத்திருக்கிறது என்றால் அதை உச்சரிப்பவர்களுக்கு எவ்வளவு பயன்கள் கிடைக்கும். அன்று முதல் நாரதரும் ஓம் நமோ நாராயணாய"என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

இறைவனின் நாமங்களை உச்சரித்து வழிபட்டால் முத்திப்பேறு மட்டுமல்லாது சகல செல்வங்களும் பெற்று வாழ்வில் உயர்ந்திடலாம் என்பதே மறுக்கமுடியாத உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் நமோ நாராயணாய"
இறைவனின் நாமத்தை உச்சரிப்போம்.

ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய

பிறவிதோறும் வினை மிகுந்து
பெருகுகின்ற இருளினை

அகல வைக்கும் அருண தீபம்
ஓம் நமோ நாராயணாய

உலகமெங்கும் முழங்க வேண்டும்
ஓம் நமோ நாராயணாய

மனதில் என்றும் இருக்க வேண்டும்
ஓம் நமோ நாராயணாய

ஜனன மரண பயதரங்க
ஸாகரம் கடத்தியே

உடனே வந்து காக்கும் ஓடம்
ஓம் நமோ நாராயணாய !!

**விமலானந்தன் மதுசாளினி**
பொறியியல் பீடம் (E 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத் கீதையின் பெருமை

ஸ்ரீ கிருஷ்ணரால் அர்ச்சுனனுக்கு குருஷேஷ்திரப் போர்க்களத்திலே, அர்ச்சுனன் போர் செய்யத் தயங்கி நின்ற போது உபதேசிக்கப்பட்டது பகவத் கீதையாகும். இது அர்ச்சுனனுக்கு உபதேசிப்பது போல் முழு மனித குலத்திற்கும் தர்மத்தை உபதேசித்து வியாசரால் எழுதப்பட்ட சாஸ்திரமாகும். பகவத் கீதை என்றால் "பரம் பொருளின் கீதம்"எனக் கொள்ளப்படுகின்றது. அதாவது மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையேயான தெய்வீகக் கருத்துப் பரிமாற்றம் ஆகும். உலகின் அனைத்து நூல்களின் அடிப்படையாக உள்ள உண்மைகளை பகவத் கீதை தனது 18 அத்தியாயங்களிலும், 700 சுலோகங்களிலும் அடக்கியுள்ளது.

பேரண்டத்தின் முழு ஞானமும் கீதையினுள் திணித்து வைக்கப்பட்டுள்ளது. பகவத் கீதையானது வாழ்க்கைக்குத் தேவையான அற்புதமான போதனைகளை வழங்குகின்றது. இது மனம் இறைவனுடன் இணையும் வழியை எடுத்துரைக்கின்றது. இறைவனுடன் உயிரானது இணைகின்ற நெறிகளை யோகமாகக் கூறுகின்றது. அத்துடன் யோகம், துறவு, தியாகம், வேள்வி அனைத்தும் விளக்கப்படுகின்றது.

மேலும் மன அமைதியுடன் வாழும் வாழ்க்கையைப் பற்றியும், மனிதன் எவ்வாறு தனது நியாயமான கடமைகளை பூமியில் நிறைவேற்ற வேண்டும் என்பதையும் கூறுகின்றது. பகவத் கீதையில் கூறப்படும் பாதைகளைப் பின்பற்றுவது அவர்களின் முக்திக்கு வழி கோலும்.

பேரண்டத்தின் முழு ஞானத்தையும் தன்னுள்ளே வைத்திருக்கும் பகவத் கீதையின் பெருமைகளைக் கூற வார்த்தைகள் இல்லை. கீதா சாஸ்திரத்தை ஒருவன் தெளிவாகப் புரிந்து கொண்டு விட்டால் பிற சாஸ்திரங்களில் உள்ள அறிவு தானாகவே வந்துவிடும். பகவத் கீதைக்கு இணையான நூல் இதுவரையில் இல்லை. பகவத் கீதையில் உள்ள ஒவ்வொரு வார்த்தைகளும் மனித குலத்திற்கு நன்னெறி புகட்டுபவையாகவே உள்ளது.

எல்லா சாஸ்திரங்களின் சாரமே பகவத் கீதையாகும். எல்லா சாஸ்திரங்களுக்கும் இது கருவூலம் என்று சொன்னால் மிகையாகாது. பகவத் கீதையில் உள்ள அனைத்து விடயங்களும் உண்மையானவையே. பகவத் கீதையை ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாகப் புரிந்து விட்டால் அவன் வாழ்க்கையில் தர்மத்தை கடைப்பிடிப்பவனாகவும், அற வழியில் நடப்பவனாகவும் விளங்குவான்.

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது"

**செல்வரத்தினம் ஜயவாகினி**
விவசாய பீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தின் முருகன் வழிபாடு

இந்து சமயத்தின் ஆறுவகை சமயப்பிரிவுகளில் ஒன்றாக கௌமாரம் விளங்குகிறது. கௌமாரம் சமயப் பிரிவுக்குரிய முழுமுதற்கடவுளாக முருகப்பெருமான் விளங்குகின்றார். குமரன், கார்த்திகேயன், சுப்பிரமணியன், ஞானபண்டிதன், ஸ்கந்தன் வேலன், சந்நிதியான், நல்லூரான் எனப்பல பெயர்களால் அடியார்கள் முருகனைப் போற்றி வழிபட்டார்கள். "முருகு"என்றால் அழகு அத்துடன் இளமை, மென்மை என்ற கருத்துக்களும் கூறப்படுகின்றது. கலிகால பாவங்களைப் போக்க முருகன் வழிபாடே சிறந்தது என்று "ஸ்கந்த கீர்த......................."எனும் சுலோகம் சொல்கின்றது. முருகனை தமிழ்நாடு, ஈழம் போன்ற நாடுகளில் மிகவும் தொன்மையான முறையில் வழிபட்டதாகப் பல சான்றுகள் கூறுகின்றது.

ஈழத்தில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகளில் ஈழத்தாழிகள். சேவற்சிலை ஆகியன கண்டெடுக்கப்பட்டன. முருகன் வழிபாடு ஈழத்தில் மிகத் தொன்மைக்காலம் தொட்டே சிறப்பிடம் பெற்று இருக்கிறது. அவர்களோடு போரிட்ட தேவர்களைக் காப்பாற்ற வந்த திருமுருகன் கதிர்காமத்திலே பாசறை அமைத்துத் தங்கியிருந்தான் எனவும் கதிர்காமம் ஏமகூடம் என அழைக்கப்பட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இலங்கையின் முதல் சிங்கள மன்னனாகிய விஜயனை அவனுடைய மனைவியாகிய குவேனி கொலை செய்ய மற்பட்டபோது கதிர்காமக் கந்தனே காப்பாற்றியதாக 'இராஜவலிய" இலங்கை வரலாற்று நூல் கூறுகின்றது. தமிழ் அரசனாகிய எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகைமுனு தனது நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்காக அந்தணர்களும் பிக்குகளும் புடைசூழக் கதிர்காமம் சென்று வந்தான் எனக் "கந்தஉபநிடதம்" எனும் சிங்கள நூல் கூறுகின்றது.

கதிர்காமத்தில் முருகனோடு எழுந்தருளிய சக்தி வள்ளி என்பது தூயதமிழ்ப் பெயர் எனவே கதிர்காமத்துக்கும் தமிழருக்கும் இடையேயுள்ள பழமையான தொடர்பு புலனாகின்றது. அருணகிரிநாதர் கதிர்காமத் தலத்தின் பெருமையை "இறவாமல் பிறவாமல்"என்ற பதிகத்தின் ஊடாக வெளிப்படுத்துகிறார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் "அதிரவரு மாணிக்க கங்கை தனில் மூழ்கி"என்ற பாடலில் கதிர்காமத் தலத்தின் பெருமையைத் தெளிவாகக் காட்டுகிறார். இன்றும் வேட்டுவ பரம்பரையினரான கப்புராளைகளே கதிர்காமக் கந்தனின் பூசகராகவும் அறங்காவலராகவும் விளங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகம மரபுக்குட்பட்ட முருக வழிபாடே தமிழகத்தில் பெரிதும் நிலவி வருகின்றது. ஈழத்தில் கிராமிய வழிபாட்டுடன் கூடிய பழைய தமிழ் மரபிலும் ஆகம முறைப்படியும் பெரும்பாலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன. கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் ஆகிய முருகன் ஆலயங்களிலெல்லாம் ஆகம மரபுக்கு உட்படாத பூசைகளே நடைபெறுகின்றன. இந்த ஆலயங்களில் பூசை செய்பவர்கள் எல்லாம் வாயைத் துணியால் கட்டியே பூசை செய்கிறார்கள். கதிர்காமத்தில் பூஜை செய்பவர்கள் வேடர்கள், பரம்பரையில் வந்த கப்புறாளைகள் என்றும் மண்டூர் முருகன் கோயிலில் பூசை செய்பவர்கள் கப்புகர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். அன்னதானக் கந்தன் என்று போற்றப்படும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஈழத்து திருச்செந்தூர் எனப் போற்றப்படுகின்றது. பரதவர் குலத்தைச் சேர்ந்த மருதர் கதிர்காமருக்கு முருகப்பெருமானே நேரில் தரிசனம் கொடுத்து கையிலே வேலைக் கொடுத்து பூசிக்கும்படி கட்டளையிட்டார். கதிர்காமம் வழிவந்தர்கள் அறுபத்து நான்கு ஆலம் இலையில் அமுது படைத்து இன்றும் கிரியைகளை செய்து வருகிறார்கள்.

சோழ இளவரசியாகிய மாருதப்புரவீரவல்லியின் குதிரைமுகம் மாறப்பெற்றமைக்காக சோழ மன்னன் மாவிட்டபுரத்தில் சிறந்ததோர் முருகன் ஆலயத்தைக் கட்டுவித்தான். முருக வாழிபாட்டை நகரத்துச் செட்டிமாரே பல பாகங்களில் பரப்பி வருகின்றனர். கொழும்பு மாநகரத்தில் வருடாவருடம் இவர்கள் சிறந்ததோர் வேல் விழாவை மிக விமர்சையாக நடத்தி வருகின்றார்கள்.

சேகரா டிலுக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசிவராத்திரி மான்மியம்

அம்பிகை சிவபெருமானை மாசிமாதம் தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் வணங்கியதாலேயே இந்த நாளில் மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. இரவு முழுவதும் கண் விழித்து பரமனான ஈசனை வழிபடுவதன் மூலம் சிவனின் அனுக்கிரகத்தைப் பெறலாம் என்கிறது இந்து மதம்.

இந்த நாளின் சிறப்புகள் குறித்து திருவிளையாடற்புராணம், கருட புராணம். கந்த புராணம், பத்ம புராணம், அக்னி புராணம் உள்ளிட்ட பல்வெறு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிவராத்திரி தோன்றிய வரலாறு**

கயிலாய மலையில் வீற்றிருக்கும் அன்னையான பார்வதிதேவி விளையாட்டாக சிவபெருமானின் இரண்டு கண்களையும் தன் கைகளால் மூடினாள். உலகுக்கு ஒளி வழங்கும் சூரிய சந்திரர்களான அவருடைய கண்கள் மூடப்பட்டு எங்கும் காரிருள் சூழ்ந்தது. உலகம் முழுவதும் அந்தகாரம் சூழ்ந்து அச்சமூட்டியது. அப்பொது தனது நெற்றிக்கண்ணான மூன்றாம் கண்ணை திறந்தார் ருத்ரன்.

அதன் வெம்மையினால் இந்த உலகம் ஸ்தம்பித்துப் போனது. இதுவே பிரளயகாலம் என்றும் அழைக்கப்படுகிறது. அந்த நேரத்தில் பிரம்மனும், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்துவிட்ட நிலையில், இரவுப் பொழுதில் அம்பிகை உமாதேவி, பரமேஸ்வரனை நினைத்துப் பூஜை செய்தாள். நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள். பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி. அடியேன் தங்களைப் பூசித்த இந்த இரவை தேவர்களும் மனிதர்களும் தங்கள் திருநாமத்தாலேயே அதாவது "சிவராத்திரி" என்றே கொண்டாட வேண்டும் என்று வேண்டினாள்.

சிவராத்திரி அன்று. சூரியன் மறைந்தது முதல் மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை, தங்களை (சிவனை)ப் பூஜை செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எல்லாவிதமான பாக்கியங்களையும் தந்து முடிவில் மோட்சத்தையும் அளிக்க வேண்டும். அருள் புரியுங்கள் என்ற அன்னையானவள் வேண்டிக் கொண்டாள். சிவபெருமானும், அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள் புரிந்தார். அந்த இரவே "சிவராத்திரி" என வழங்கப்பட்டு அனைவராலும் கொண்டாடப்படுகிறது.

பகல் பொழுது பரமேஸ்வரனுக்கும், இரவுப் பொழுது அம்பிகை உமாதேவிக்கும் உரியது என்பது நியமம். ஆனால் சிவராத்திரி என்பது அம்பாளின் வேண்டுதலின் படி கொண்டாடப்படவதால் அது சிவனுக்குரியதாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழிபடும் முறை**

சிவராத்திரிக்கு முதல் நாள் ஒரு வேளை மட்டுமே உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி அன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்து விட்டு, சூரிய உதயத்தின் போது காலையில் வீட்டில் செய்ய வேண்டிய பூஜையை முடிக்க வேண்டும்.

அதன் பின் சிவன் கோவிலுக்குப் போய் முறைப்படி தரிசனம் செய்ய வேண்டும். பூஜை செய்யும் இடத்தை மலர்களால் அலங்கரித்து நண்பகலில் குளித்து மாலையில் சிவார்ச்சனைக்கு உரிய பொருட்களோடு சிவன் கோவிலில் வழிபாடு நடத்தலாம். மாலையில், மீண்டும் குளித்து வீட்டில் சிவபூஜை செய்ய வேண்டும். வீட்டிலேயே இரவின் நான்கு ஜாமங்களிலும் முறைப்படி பூஜை செய்தலும் நலம். பூஜையில் சிவனுக்குப் பிடித்தமான வில்வ இலைகளை கொண்டு பூஜிப்பது கூடுதல் சிறப்பு.

மகா சிவராத்திரி விரதம் மேற்கொள்பவர்கள் கோபத்தைக் கட்டுப்படுத்துவதுடன், பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சிந்தையில் அமைதியுடன் சிவ புராணத்தை பாடிக் கொண்டிருக்க வேண்டும். பற்றற்று இருப்பதுடன் பேராசைகளைக் கைவிட்டு பிறருக்குத் தீங்கிழைக்காமல் இருத்தல் வேண்டும்.

மாலையில் குளித்து உலர்ந்த ஆடையணிந்து நெற்றியில் திருவெண்ணீறு அணிந்து, கையில் உருத்திராட்ச மாலையுடன் வீடுகளில் சிவபூஜை செய்தோ அல்லது கோயில்களுக்குச் சென்றோ சிவனை வழிபடுதல் வேண்டும். கோயில்களிலும் சிவபூஜை செய்யலாம்.

ஐந்தெழுத்து மந்திரமான சிவாய நம என்ற சொல்லை உச்சரித்து பூஜிக்க வேண்டும். கலச பூஜையுடன் லிங்கத்தை வைத்தும் பூஜை செய்யலாம். பூக்கள் மற்றும் அபிஷேகப் பொருட்களை கோயில்களுக்கு வாங்கிக் கொடுத்தல் நலம்.

பின்னர் சிவபெருமானின் வெவ்வெறு பெயர்களான பவ, சர்வ, ஈசான, பசுபதி, உக்ர, ருத்ர, பீமா மற்றும் மகாதேவா என்று கூறி பூஜிக்க வேண்டும். சிவ பெருமானின் சகஸ்ர நாமத்தை சொல்லி பிரார்த்திக்கலாம். அன்றைய தினம் இரவில் நான்கு ஜாமங்களிலும் தூங்காமல் பூஜை செய்து, மறுநாள் விடியற்காலையில் நீராடி .காலை அனுஷ்டானத்துடன் உச்சிக்கால அனுஷ் ானத்தையும் அப்போதே முடிக்க வேண்டும். அதன் பின் உடைகள் மற்றும் உணவினை அந்தணர்க்குத் தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யம் விதமாக உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி நாளில் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு ஜாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால் பழங்களை உண்ணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பலன்கள்**

புராணங்களில் சொல்லப்பட்ட மற்றைய பல விரதங்களை நெடுங்காலம் கடைபிடிப்பது, நூறு அசுவமேத யாகம் செய்வது, பல முறை கங்கா ஸ்நானம் செய்வது ஆகிய அனைத்தையும் மேற்கொண்டாலும், ஒரு சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதற்கு ஈடாகாது.

முற்பிறவிகளில் செய்த பாவம், இப்பிறவியில் தெரிந்து, தெரியாமல் செய்த தீமைகளின் வெம்மை நம்மைச் சூழாதிருக்க ருத்ரனின் திருநாமத்தை இந்த இரவு முழுவதும் உச்சரித்தால் போதும்.

அம்பிகையால் உலக நலன்கருதி நடத்தப்பட்ட வழிபாடு இது. பிறருக்காகவும், இந்த உலகத்தினைச் சேர்ந்த அனைவரும் நலமுற்று வாழ ஏற்படும் துன்பங்களையும், தத்தமது விருப்பங்களையும், தேவைகளையும் (உணவு, தூக்கம்) குறைத்துக் கொள்வதின் வெளிப்படு தான் இந்த மகாசிவராத்திரி ஆகும்.

**மைத்ரி சகாதேவராஜா**

மருத்துவ பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் காட்டிய நட்பு

# செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
# வினைக்கரிய யாவுள காப்பு

மகாபாரதம் மாபெரும் காவியம். இலக்கியங்களிலே முதல் நிறுத்திப் பார்க்கக் கூடிய மேலான காவியம். அன்பு, கருணை, கடமை, அரசியல் மற்றும் அறிவியல் என அனைத்தையும் ஒருங்கே கொண்டமைந்த காவியம். ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டும் எவ்வாறு வாழக் கூடாது என்பதற்கு ஒன்றாக உதாரண புருஷர்களைக் கொண்டமைந்த காவியம். ஆங்கே நட்பு பல இடங்களில் எடுத்து நோக்கப்படுகின்றது. அவ் நட்பு சிறந்த பலனை எதிர்பாராத நல்ல நட்பாகவும், பிரதிபலன் எதிர்பார்த்து மேற்கொள்ளப்பட்ட நட்பாகவும் எடுத்தியம்பப்படுகின்றது.

மகாபாரத ஆரம்பத்தில் குருகுலத்தில் துருபதனும் துரோணாச்சாரியாரும் கொண்ட நட்பு. அங்கு ஒன்றாக கல்வி கற்ற இருவரும் குருகுல கல்வி முடிந்து விடைபெறும் வேளையில் துருபதன் துரோணாச்சாரியாருக்கு ஒரு வாக்களிக்கிறான். அதாவது தான் அரசராகும் காலத்தில் தன் இராச்சியத்தில் பாதியை தன் நண்பரான துரோணருக்கு கொடுப்பதாக கூறுகிறார். இவ்வாக்கினை மனதில் கொண்டு பிற்காலத்தில் துரோணர் தன் மகன் அஸ்வத்தாமனுக்காக அவனது பசியை தீர்க்க ஒரு பசு கேட்க, அரசன் என்ற கர்வம் மேலோங்க துருபதன் “ஆண்டியும் அரசனும் நட்பு பாராட்டுவதோ, யாசகமாய் கேட்டால் பசு அல்ல ஒரு கிராமத்தை கூட தருகிறேன்” என்று கூறுகிறான். துரோணர் மிகப்பெரும் குரு. பின்னாளில் அர்ஜீனனுக்கே வில்வித்தை சொல்லிக் கொடுத்தவர். அவர் அங்கே தனக்கு யாசகம் வேண்டாம் எனக் கூறி ஒரு சபதம் மேற்கொண்டு பிற்காலத்தில் அர்ஜீனன் துணை கொண்டு துருபதனை சிறைப் பிடிக்கிறார். துருபதன் துரோணரை வீழ்த்துவதற்காக யாகம் செய்து திருஷ்டித்யூமனை மகனாகப் பெறுகிறான். திருஷ்டித்யூமன் தன்னைக் கொல்வதற்காக பிறந்தான் என்று தெரிந்தும் தனது நண்பன் துருபதனுக்காக குருவாக இருந்து திருஷ்டித்யூமனுக்கு கல்வி பயிற்றுவித்தார்.

அடுத்து அசுவத்தாமனும் துரியோதனனும் கொண்ட நட்பு, மகாபாரதத்தில் பெரும்பாலும் எடுத்தியம்பப்படாத இவ்விருவர் நட்பும் தேவை கருதி மேற்கொள்ளப்படுகிறது. துரியோதனன் அசுவத்தாமன் மீது கொண்ட நட்பு குருவாகிய துரோணரிடம் நன்மதிப்பு பெறுவதற்காக. அங்கே அசுவத்தாமன் துரியோதனன் மீது கொண்ட நட்பு இராஜ்ஜியத்தையும் பொன் பொருளையும் பெறுவதற்காக. ஆகவே இது பிரதி பலன் எதிர்பார்த்த ஒரு நட்பாக கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதத்தில் நட்பு எனும் போது. முழுமையாக மகாபாரதத்தில் பேசப்படுகிற நட்பு துரியோதனனும் கர்ணனும் கொண்ட நட்பு. அரசவையில் கர்ணன் அவமானப்படுத்தப்படும் போது தேரோட்டி புத்திரன் வில்லேந்த முடியாது என்று கூறும் போது கர்ணனுக்காக அங்க தேசத்தை அளித்து கர்ணனை அரசன் ஆக்கினான் துரியோதனன். நட்பு பாராட்டும் போது தேவை கருதி மேற்கொள்ளப்பட்ட நட்பாக இருப்பினும் கர்ணன் செஞ்சோற்று கடன் தீர்க்க தன் உயிரை துரியோதனனுக்காக கொடுத்தான். ஆயினும் துரியோதனனும் கர்ணன் மீது கொண்ட நட்பு பால் போன்றது. அதற்கு எடுத்துக்காட்டு இரு சம்பவங்கள்; ஒன்று கர்ணனுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த துரியோதனன் மனைவி பானுமதி துரியோதனன் வருகையை கண்டு எழுந்திருக்க கர்ணன் அவளை அமரவைக்கும் முயற்சியில் ஈடுபட மேகலை அறுந்து விழுகிறது. அங்கே வந்த துரியோதனனும் பானுமதி மீதும் கர்ணன் மீதும் சந்தேகம் கொள்ளாது மேகலையில் இருந்து விழுந்த முத்துக்களை "எடுக்கவோ... கோர்க்கவோ..." என்று கேட்டானாம். ஆக இது துரியோதனன் கர்ணன் மீது கொண்ட நட்பின் நம்பிக்கை எடுத்துக்காட்டுகிறது. அடுத்து கர்ணன் கொடுத்த தானங்கள் கர்ணன் கொடை வள்ளல் யாம் அறிந்தது. கர்ணன் கொடைக்காக தனது கவசகுண்டலத்தையே கொடுக்கிறான். கர்ணன் கொடுத்த பொருட்கள் அனைத்தும் துரியோதனன் அவனுக்கு கொடுத்தது. துரியோதனன் அங்கதேசத்தின் அரசன் ஆக்கினான். கர்ணன் அங்கிருந்து தனது கொடையை ஆரம்பித்தான். ஆக கர்ணனை கொடை வள்ளல் என்று அனைவரும் பாராட்டும் போதும் துரியோதனன் தன் நண்பன் கொண்ட பெருமை தான் கொண்ட பெருமை என அதைப் பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளாது கர்ணனுக்கு துணை நின்றான்.

கர்ணன் துரியோதனன் மீது கொண்ட நட்பு மிகப்பெரியது. எவ்வாறு பாண்டவர்களுள் ஒருத்தன், தான் குந்தியின் புத்திரன் என்று அறிந்த பின்னும் துரியோதனனுக்காக போர் செய்தான் கர்ணன். கர்ணன் ஒரு கணம் சிந்தித்து தானும் பாண்டவர்களில் ஒருவன், தான் பாண்டவர்களில் மூத்தவன், அவர்களுடன் சேர்வோம் என சேர்ந்திருந்தால். அந்த இராச்சியம் முழுவதுமே கர்ணனுக்காக கிடைத்திருக்கும். ஆயினும் துரியோதனன் தனக்காக செய்த நன்மைகளையும் துரியோதனன் மீது கொண்ட நட்பின் காரணமாகவும் அனைத்தையும் உதறிவிட்டு கர்ணன் போரில் மடிந்தான். ஆக கர்ணன் துரியோதனன் மீது கொண்ட நட்பும் பிரதிபலன் எதிர்பாராது காட்டப்பட்ட நட்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு"

இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. அதாவது முகத்தில் மட்டும் மலர்ச்சியை காட்டி கொள்ளும் நட்பு அல்லாது நெஞ்சத்தாலும் கொண்ட நட்பு.

துரியோதனனுக்கும் கர்ணனுக்கும் உள்ள நட்பு போல மகாபாரதத்தில் கூறப்பட்ட மிகச்சிறந்த நட்பு கண்ணனும் அர்ஜீனனும் கொண்ட நட்பு. இங்கு கண்ணன் அர்ஜீனனுக்காக, பாண்டவர்களுக்காக செய்தவை அனைத்தும் உலகறிந்தது. மகாபாரதம் எனும் மாபெரும் காவியத்தின் காவிய நாயகன் கிருஷ்ணன் எனலாம். பாரதப் போருக்கு முன்பு கிருஷ்ணரிடம் உதவி பெறுவதற்காக துரியோதனனும் அர்ஜீனனும் செல்கிறார்கள். முதலில் சென்ற துரியோதனன் கிருஷ்ணனது தலைக்கு அருகில் அமர்கிறான். அர்ஜீனன் கிருஸ்ணரது காலுக்கு அருகில் அமர்கிறான். கண்விழித்த கிருஷ்ணன் முதலில் அர்ஜீனனையே காண்கிறார். அர்ஜீனனிடம் உனக்கு நாராயண சேனை வேண்டுமா? அல்லது ஆயுதங்கள் ஏதும் ஏந்த மாட்டேன் போர் புரிய மாட்டேன். தேரோட்டியாக நான் வருகிறேன். எது வேண்டும்? என கேட்கும் போது அர்ஜீனன் கிருஷ்ணரை தெரிவு செய்கிறான். அங்கு கிருஷ்ணன் அர்ஜீனனுக்கு தேரோட்டியாக செல்கிறான்.நாராயண சேனையை துரியோதனன் பெறுகிறான். பின்பு பாரதப்போரிலே பல இடங்களில் அர்ஜீனனை கிருஷ்ணரே காப்பாற்றுகின்றார். அர்ஜீனன் போரிட மறுக்கும் போது கீதா உபதேசம் செய்து அர்ஜீனனுக்கு நல்வழி கூறி போரிட செய்கிறான். அர்ஜீனனுக்காக பிராமண வேடம் தாங்கி கர்ணனிடம் கவச குண்டலங்களை தானமாக பெறுகிறார். ஏனெனில் கர்ணனுடன் கவச குண்டலங்கள் இருக்கும்வரை கர்ணனை யாராலும் வீழ்த்த முடியாது. இவை அனைத்தும் நாம் அறிந்தது. போர்க்களத்தில் நடந்தது.

போர் முடிந்த பின்னும் அர்ஜீனனை காத்தான் கிருஷ்ணன். பாரதப் போர் முடிந்தது. அனைவரும் போர் முடிந்து தங்களது தேரில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். அங்கே அர்ஜீனன் இறங்கும் போது, அர்ஜீனனுக்கு கர்வம், இந்த போரில் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற கர்வம். அங்கு கிருஷ்ணரை முதலில் இறங்கி பின்னர் தனக்கு கைகொடுத்து இறக்கி விடுமாறு கிருஷ்ணரிடம் கேட்கிறான். கிருஷ்ணர் அங்கு தேரோட்டியாக சென்றவர். ஆகவே தேரோட்டி முதலில் இறங்கி பின்னர் தான் இறங்கவேண்டும் என அர்ஜீனன் கூறுகிறான். ஆனால் கிருஷ்ணர் மறுக்கிறார். அர்ஜீனனை முதலில் இறங்கச் சொல்கிறார். பிறகு கிருஷ்ணர் இறங்கினார். கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கிய பின்னர் தேர் முற்றிலுமாய் எரிகிறது. அர்ஜீனனுக்கு மனதில் குழப்பம் கிருஷ்ணரிடம் "ஏன் இவ்வாறு நிகழ்கிறது?"என்று கேட்க அப்போது கிருஷ்ணர் விளக்கம் அளிக்கிறார். "அர்ஜீனா நினைவிருக்கிறதா? கர்ணன் நாகாஸ்திரத்தை ஏவும்போது நான் தேர்த்தட்டை அழுத்தியதால் உன் தலை தப்பித்தது. ஆனால் அவ் அஸ்திரத்தின் சக்தி அனைத்தையும் உன் தேரில் கொடியாக இருந்த என் பக்தன் அனுமான் இவ்வளவு காலம் தாங்கிக்கொண்டிருந்தான். நான் இத்தேரில் இருந்து இறங்கியதும் என் பக்தன் விடைபெற்றான். ஆகவே தேர் எரிந்தது என்றார். அங்கு அர்ஜீனன் கர்வம் அழிந்தது. இங்கே அர்ஜீனன் மீதான கண்ணனின் நட்பு எடுத்துக்காட்டப்படுகிறது.

இவ்வாறாக மகாபாரதத்தில் நட்பு எடுத்துக்காட்டப்படுகிறது. மகாபாரதத்தில் மட்டுமல்ல இலக்கியங்களில், காப்பியங்களில் அனைத்திலும் நட்பு எடுத்துக்காட்டப்படுகின்றது. நட்பு ஒரு மேலான உறவு. எம்மில் பலர் தாய், தந்தை, உறவுகளிடம் கூற மறுக்கின்ற கூறாது மறைக்கின்ற பலதையும் நண்பர்களிடம் கூறுகின்றோம். நண்பர்களை நம்புகின்றோம். சில நண்பர்கள் தேனிலும் இனியவர்களாக, சில நச்சுப் பாம்பாக.... அன்னப்பறவையானது நீருடன் கலந்திருக்கின்ற பாலை எவ்வாறு அருந்துமெனில் நீரை விடுத்து பாலை மட்டும் அருந்துமாம்.

அதுபோல நாமும் நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்ள வேண்டும். நல்ல நண்பர்களை தேடிக் கொள்ளும்போது நாமும் நல்ல நண்பர்களாக இருக்க வேண்டும். ஆகவே

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"என்பது திருவள்ளுவர் வாக்கு.

அதாவது ஒரு நல்ல நட்பு என்பது ஒருவரை நட்பு பாராட்டுவதற்காக மட்டுமல்ல. உனது நண்பன் தவறு செய்யும் கணத்தில் நண்பன் தவறு செய்கிறான் என்று சுட்டிக் காட்டுவதற்கும் ஆகும். நல்ல நண்பர்களைப் பெறுவோம். நாமும். நல்ல நண்பர்களாக இருப்போம்.

**அபிலாசா வதனராசா**
இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமயத்தில் விரதங்களும் பண்டிகைகளும்

இந்து சமயம் இந்திய துணைக்கண்டத்தில் தோன்றிய காலத்தால் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றாகும். இந்து சமயமானது பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உலகின் பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் என்பவற்றை உள்வாங்கி நெறிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு இந்துக்களின் வாழ்வில் முக்கியமாக விளங்குவது விரதங்கள் மற்றும் பண்டிகைகள் ஆகும்.

இந்து மதமானது வழிபடும் தெய்வத்தின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாக உள்ளது இவ்வாறு பிரிக்கப்பட்டாலும் இந்துக்கள் அனைவருமே அனைத்து தெய்வங்களையும் போற்றி மதித்து பண்டிகைகளையும் விரதங்களையும் அனுஷ்டிக்கின்றனர். ஒவ்வொரு பண்டிகைகளும் விரதங்களும் ஒவ்வொரு தெய்வத்திற்கு சிறப்பானவை, ஒவ்வொரு வரலாறு அவற்றின் பின்னால் மறைந்துள்ளது. அவற்றைச் சுருக்கமாக இங்கே நோக்குவோம்.

தைப்பொங்கல் அல்லது மகரசங்கிராந்தி பண்டிகையானது வருடத்தின் தை மாதத்தில் கொண்டாடப்படும் சிறப்பு வாய்ந்த பண்டிகை தைப்பொங்கல் எனும் பேரில் தமிழர்களாலும் மகரசங்கிராந்தி எனும் பேரில் ஏனைய இந்துக்களாலும் கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவானது உழைக்கும் மக்களின் இயற்கை தெய்வமாகக் கருதப்படும் சூரிய தேவனுக்கு நன்றிகூறும் விதமாக இந்துக்களால் கொண்டாடப்படுகிறது.

இந்துக்களின் வாழ்வில் முக்கியமாக இருப்பவை விரதங்களுமாகும். இவ்வாறான விரதங்களுள் முக்கியமானது மற்றும் மகத்துவம் வாய்ந்தது மகாசிவராத்திரி விரதமாகும். இது சிவ பெருமானுக்கு அனுஷ்டிக்கப்படும் சிறப்பு வாய்ந்த விரதம். இவ்விரதத்திற்குரியதாக பல்வேறு புராதனக் கதைகள் உண்டு சிவனின் மகிமையைப் போற்றி மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியில் இரவில் வெகு விமரிசையாகவும் பக்தியாகவும் அனைத்து இந்துக்களாலும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

சிவனுக்காக சிவராத்திரியை அனுஷ்டிப்பது போல அன்னை ஆதிபராசக்தியையும் நவராத்திரியை கொண்டாடுவதன் மூலம் அனுஷ்டிக்கின்றனர். ஐப்பசி மாத சுக்லபட்ச பிரதமை தொடங்கி நவமி வரை ஒன்பது தினமும் தேவியின் வடிவங்களான லஷ்மி, சரஸ்வதி, துர்க்கையை வேண்டி பயபக்தியுடனும் விரத கட்டுப்பாடுகளுடனும் நவராத்திரி அனுஷ்டிக்கப்படுகிறது. ஆதிபராசக்தி மகிசாசுரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதம் செய்த புராதனக் கதையுடன் தொடர்புடைய இவ்விரதம் பெண்களின் மகிமையைக் கூற அனைத்துப் பிரிவு இந்துக்களாலும் பல்வேறு பெயரில் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்துக்களின் வாழ்வில் அனைத்து விடயங்களையும் ஆரம்பிக்கும் முன்னர் நாம் வணங்குவது விநாயகரையே. அவ் விநாயகரின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக அனைத்துஇந்துக்களும் ஆவணிமாத வளர்பிறை சதுர்த்தியன்று அனுஷ்டிக்கும் விரதம் விநாயகர் சதுர்த்தியாகும். இதே போல் தேவி சரஸ்வதி தோன்றிய நாளான வசந்த பஞ்சபியானது வட இந்தியாவிலுள்ள இந்துக்களால் சிறப்பாகவும், தென்னிந்தியாவில் வாழும் இந்து மக்களால் முருகப்பெருமான் தோன்றிய நாளாக தைப்பூசமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இவற்றைத் தவிர மேலும் பல பண்டிகைகளும் விரதங்களும் உலகில் வாழும் பல்வேறு இந்துக்களாலும் பல்வேறு நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு கடைப்பிடிக்கப்படுகின்றது. இவ்விரதங்களும் பண்டிகைகளும் கடைப்பிடிக்கப்படுவதால் மக்களின் வாழ்வில் நல்லிணக்கமும் நற்சிந்தனைகளும் மேம்படுகின்றன என்பதில் ஐயமில்லை. வாழ்வினை மேம்படுத்தும் அனைத்துமே சிறப்பானவையே. அதற்கிணங்க இந்துக்களின் வாழ்வில் நாம் கடைப்பிடிக்கும் விரதங்களும் பண்டிகைகளும் சிறப்பும் மகத்துவமும் வாய்ந்தவையாகும்.

**சுமித்தா சிவதாஸ்**
விவசாய தொழிநுட்பமும் முகாமைத்துவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் வழிபாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்

வழிபாட்டு முறைகளில், ஆலயத்தில் நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்தால் தானே பலன் கிடைக்கும். நாம் சந்தோஷம் நிறைந்த அமைதியான வாழ்வைப் பெறுவதற்காக, தினந்தோறும் ஆலயத்திற்கு வந்து தெய்வ தரிசனம் பெறுகிறோம். நம்மில் பலர் இறையருளைப் பெறும் ஆர்வத்தில், நம்மையும் அறியாமல் சாஸ்திரங்களின் விதிகளையே மீறிவிடுகிறோம். இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறார். அவரை வழிபடும் போது சில விதிகளை நாம் பின்பற்ற வேண்டும்.

### கோயிலுக்குச் செல்லும் போது...

1. பிறப்பு, இறப்பு, தீட்டுக்களுடன் கோயிலுக்குள் செல்லக் கூடாது.
2. வெறும் கையுடன் கோயிலுக்குப் போகக்கூடாது. குறைந்த பட்சம் பூக்களையாவது கொண்டு செல்ல வேண்டும்.
3. குளிக்காமல் கோயிலுக்குள் செல்லக் கூடாது.
4. சோம்பல் முறித்தல், தலை சிக்கெடுத்தல், தலை விரித்துப் போட்டு கொண்டு செல்லுதல் நிச்சயம் கூடாது.
5. கோயில் அருகில் சென்றதும், கோபுரத்தின் அருகே நின்று, ஆண்கள் அனைவரும் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட வேண்டும்.
6. பெண்கள் தங்கள் இரண்டு கைகளையும் நெஞ்சோடு வைத்துக் கும்பிட்டாலே போதும்.
7. கையில், தலையில் தொப்பி, முண்டாசு அணிந்து கொண்டு செல்லக்கூடாது.
8. கவர்ச்சியான ஆடைகள், ஈரத்துணி, ஒராடை மற்றும் அரைகுறை ஆடைகளுடன் கோயிலுக்குள் செல்லக்கூடாது.
9. பசுமடம் உள்ள கோயிலுக்குச் செல்லும் போது, வாழைப்பழம் அல்லது அகத்திக்கீரை கொண்டு செல்வது சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயிலுக்குள் இருக்கும் பொழுது...

10. தீபம் ஏற்றி வழிபடுவது சிறப்பு.11. நமது வேண்டுதல்களை நினைத்து, 48 நாட்கள் (ஒரு மண்டலம்) தொடர்ந்து விளக்கேற்றி வழிபாடு செய்தால், நினைத்தது நிறைவேறும்.
12. சிவன் கோயில் என்றால் மூன்று, ஐந்து, ஏழு என எண்ணிக்கையில் வலம் வருவது சிறப்பு.
13. சிவன் கோயில் என்றால், நந்தி பகவானை வழிபட்ட பின்னரே, சிவபெருமானை வழிபட வேண்டும்.
14. விநாயகரை இருகைகளால், தலையில் குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் போட்டு வணங்கி வழிபட வேண்டும்.
15. இறைவனிடம் நம்மையே முழுமையாக அர்ப்பணிக்கும் வண்ணம், ஆண்கள் தரையில் விழுந்து வணங்க வேண்டும்.
16. பெண்கள் அனைவரும், பஞ்சாங்க நமஸ்காரம் முறையில், தலை மற்றும் இரண்டு முழங்கால்களையும் தரையில் படும் படியாக இறைவனை வணங்கி வழிபட வேண்டும்.
17. கோயிலின் உள்ளே உள்ள மற்ற சன்னதிகளைக் காட்டிலும், கொடி மரத்தின் அருகில் விழுந்து கும்பிட வேண்டும்.
18. விக்கிரகங்களைத் தொட்டு வணங்கக் கூடாது.
19. ஒவ்வொரு சன்னதிக்கும் ஏற்ற துதிப்பாடல்கள் பாடி வழிபடுவது சிறப்பு.
20. பிரகாரம் வலம் வரும் பொழுது வேகமாக நடக்கக்கூடாது.
21. பலிபீடம், நந்தி, கோபுர நிழலை மிதிக்கக்கூடாது.
22. நந்தி தேவருக்கும் சிவலிங்கத்திற்கும் இடையில் போகக்கூடாது
23. நடந்து கொண்டே நெற்றியில் விபூதி இடக்கூடாது.
24. கோயிலுக்குள் உயர்ந்த ஆசனத்தில் அமரக்கூடாது.
25. பலிபீடத்திற்கு உள்ளே சந்நிதியில் யாரையும் வணங்கக்கூடாது.

தரிசனத்திற்கு முன்னும்... பின்னும்...

26. கோவிலை வேகமாக வலம் வருதல் கூடாது.
27. தோளில் துண்டுடன் தரிசனம் செய்யக் கூடாது.
28. தரிசனம் செய்தபின், பின்னால் சிந்து தூரம் நடந்து, பின்னர் திரும்ப வேண்டும்
29. கோயிலில் இருந்து வீட்டிற்கும் கிளம்புவதற்கு முன்பாக, கோயிலில் ஏதாவது ஒரு இடத்தில் சிறிது நேரம் அமர்ந்து விட்டுப் பிறகுதான் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்கு வெளியே....

30. கோயிலில் நுழையும் போதும், திரும்பி வரும் போதும் கோபுர தரிசனம் அவசியம்.

31. கோயிலுக்குள் நுழைந்தது முதல் வெளியே வரும் வரை நிதானமாக அவசரம் இன்றி, கடவுளை நமக்குள் உணர்ந்து மந்திரம் கூறி வழிபடுவது சிறப்பு.

32. கோயிலுக்குச் சென்று வந்ததும், குறைந்த பட்சம் ஒருவருக்காவது தானம் செய்ய வேண்டும்

33. அஷ்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி, மாதப் பிறப்பு, சோமவா வரம், பிரதோஷம், சதுர்த்தி இந்த தினங்களில் வில்வம் பறிக்கக் கூடாது. கோயிலில் இருந்து நேராக நாம் வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

கோயில்களில் விதிகளை மதிப்போம்.

இறையருளைப் பெற்று இன்புறுவோம்!

தி.பிரதீபா

விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயக் கிரியைகள்

மக்கள் அனுஷ்டிக்கும் நியதிச் செயல்கள் "கிரியை எனப்படும். கிரியைகள் ஆலயக் கிரியைகள், வீட்டுக் கிரியைகள் என இரு வகைப்படுத்தப்படும் பூசைகள், அபிஷேகங்கள், சாந்திகள் ஆலயக் கிரியையிலும் திருமணம், பூப்புனித நீராட்டு விழா அந்தியக்கிரியை என்பன வீட்டுக் கிரியைகளிலும் அடங்குகின்றன.

01. நித்திய கிரியைகள்

தினந்தோறும் ஆலயங்களில் நடைபெறும் செயல்கள் இவையாகும். ஆவாகனம், அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, அருச்சனை துதி, நிருத்தியம் என்பன ஆலயங்களில் நடைபெறும் நித்திய கிரியைகளின் நியதிகள் ஆகும். ஆலயங்களில் நியதிக்கிரமத்துக்கு அமைவாக பன்னிரு கால பூசைகள் (ஆறுகால பூசைகள்) நடைபெறுகின்றன. காலை, நண்பகல், மாலை என்னும் முக்காலப் பூசைகள் நடைமுறையில் காணப்படுகின்றன.

02. ஆறுகாலப் பூசைகள்

உஷாக்காலம், காலை, உச்சிக்காலம், சாயரட்டை, இரண்டாம் காலம், அர்த்தசாமம் என்பன ஆறுகாலப் பூசைகள் ஆகும்.

* உஷாக்காலப் பூசை - அனந்தற் பூசை.
* காலைப் பூசை - காலைச் சந்தி பூசை
* உச்சிக்காலப் பூசை - மத்தியானப்பூசை
* சாயரட்டைப் பூசை - மாலைப்பூசை
* இரண்டாங் காலப் பூசை - இரவுப் பூசை
* அர்த்த சாமப் பூசை - சாமப்பூசை எனவும் அழைக்கப்படுவதுண்டு.

01) உஷாக்காலப் பூசை

சூரியன் உதிக்கும் முன்பு மூன்றே முக்கால நாழிகையின் முன் நடைபெறும் பூசையாகும். உஷாக்காலப் பூசை செய்யும் அர்ச்சகர் முதலில் தமது அனுஷ்டானங்களை முறைப்படி செய்தல், பின் ஆலயத்தினுள் பள்ளியறைத் திறப்புடன் சம்பிரதாய பூர்வமாகச் சென்று திருப்பள்ளியெழுச்சி இசைத்தல், பின் இறைவனுக்கு சாத்தப்பட்ட பூ, பூமாலை என்பவற்றைக் களைந்து இறைவனை எழுந்தருளச் செய்து பின் கருவறைக்கு எழுந்தருளி இருக்கும் மூர்த்தியில் இருக்கும் இறைவனை உற்சவக் கிரியையில் மூல மூர்த்தியில் சேர்ப்பித்தல் இவ்வாறான அம்சங்களைச் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) காலைச் சந்திப் பூசை

சூரியன் உதித்த பின் 7 1/2 நாழிகைக்குள் நடைபெறும். சூரிய பூசை, விநாயக பூசை, பரிவாரத் தெய்வங்களுக்கான பூசை என்பன இதிலடங்கும்.

03) உச்சிக்காலப் பூசை

நண்பகலில் நடைபெறும் பூசையாகும். விநாயக பூசை தொடக்கம் கும்ப பூசை வரை இறைவனுக்கு சாத்தப்பட்ட பூ.பூமாலை என்பவற்றை சண்டேஸ்வரரிடம் ஒப்படைத்தல் இப் பூசையின் அங்கங்களாகும்.

04) சாயரட்டைப் பூசை

இது பிரதோச காலம் எனவும் அழைக்கப்படும். சூரியன் மறைவதற்கு மூன்றே முக்கால் நாழிகைக்கு முன் நிகழும் பூசையாகும்.

05) இரண்டாம் காலப் பூசை

பிரதோச காலத்தின் பின் இரண்டாவதாக நிகழும் பூசையாகும். இதன் போது பரிவாரத் தெய்வங்களுக்குரிய நித்தியோற்சவம், நித்திய பலி என்பன நடைபெறும்.

06) அர்த்தசாமப் பூசை

இரண்டாங் காலப் பூசையில் இருந்து 3 3/4 நாழிகைக்குள் இது நிகழ வேண்டும் தூப தீபாராதனை, சண்டேசுரர் பூசை, சம்பிரதாயமாக ஆலயப் பாதுகாப்பை வைரவரிடம் ஒப்படைத்தல் என்பன இதன் அம்சங்கள்.

நைமித்திய கிரியைகள்

ஒரு விஷேட காரணம் காரணமாக நிகழும் சம்பிர்தாய பூர்வ நியதிச்செயல்களாகும்.

- ஒருவாரகாலம் சுக்கிர வாரம், சோம வாரம்
- இருவாரம் - பிரதோச விரதம்
- மாதம் ஒரு முறை - சதுர்த்தி
- வருடம் ஒரு முறை - தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம்
- 12 வருடங்களுக்கு ஒரு முறை - கும்பாபிஷேகம்
- பல வருடங்களுக்கு ஒரு முறை மகாமகம்.

**டிலுக்ஸனி பொன்னுத்துரை**

விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனும் ஆன்மாவும்

பிறப்புக்களில் மிகச்சிறந்தது மானிடப் பிறப்பாகும். ஆதலினால் தான் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவைப்பிராட்டியார். மனிதன் பகுத்தறிவு உடையவன் ஆதலால் அவன் ஒருவரோடு பேசவும், கருத்து பரிமாற்றம் செய்து கொள்ளவும் உறவு கொண்டாடவும் முடிகின்றது. இத்தகைய ஆற்றல் படைத்த மனிதனை நோக்கியே சமய நூல்கள். மனிதன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இறை இன்பத்தை அடைய வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. இன்பம் இருவகைப்படும், இல்லற இன்பம், வீட்டின்பம் என்பவையாகும். இல்லற இன்பத்தை உலகியல் இன்பம், பாசம் எனவும் கூறுவர். இல்லற இன்பம் நிலையற்றது. துன்பம் நிறைந்தது. அதனால் இவ் இன்பத்தை சிற்றின்பம் என்பர். வீட்டின்பம் நிலையானது. துன்பம் அற்றது. அதனால் அதனைப் பேரின்பம் என்பர். மனிதன் அடைய வேண்டியது பேரின்பமாகும். பிறவாமையாகிய இன்பத்தை அடைய முயற்சிப்பதே மனிதப் பிறப்பின் இலட்சியமாக இருக்க வேண்டும். என்று சமய நூல்கள் குறிப்பிடும். வீட்டின்பம் வீடுபேறு, விடுதலை, மெய்யின்பம், முத்தி, பேரின்பம் என்பன ஒருபொருட் சொற்களாகும். அப்பர் சுவாமிகள் தமது திருவங்க மாலைப் பதிகத்தில் வாழ்க்கை நிலையாமையையும் ஆன்மாவின் இலட்சியத்தையும் பின்வருமாறு பாடியிருப்பதும் இங்கு அவதானிக்க தக்கதாகும்.

"உற்றா ராருளரோ - வுயிர்
"கொண்டு போம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல் லாமைக்
உற்றா ராருளரோ"
"தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலோடு நான்முகனும்
தேடி தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

இத்தகைய கருத்தினைய நாவலர் பெருமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இந்த சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்". நாம் இங்கு முத்தியின்பத்தை எவ்வாறு அடைய முடியும் என்பதையும் சுருக்கமாக நோக்குவோம். முத்தியின்பம் அல்லது வீட்டின்பத்தை அடைவதற்கு ஒவ்வொருவரும் தவம் செய்தல் வேண்டும். தவத்தின் பயனாகவே தான் முத்தி சித்திக்கும். வாழ்வுக்கு அதுவே அடிப்படை நல்வினை செய்வதன் மூலமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் செய்வதன் மூலமோ தவத்தைப் பெற முடியும். புண்ணியம் இன்றேல் தவம் இல்லை. இப் புண்ணியம் பசு புண்ணியம். பதி புண்ணியம் என இருவகைப்படும்.

பசு புண்ணியம் வினை சார்ந்தது. உலகியல் இன்பத்தை வேண்டி இறைவனை நோக்கிச் செய்யப்படுபவை. காமிகம் சார்ந்தது. இதனைப் பசுநல்வினை என்பர். இது நிலையற்றது. துன்பத்தை தருவது. இறப்புக்கும் பிறப்பிற்கும் காரணமானது. பதி புண்ணியம் பசு புண்ணியத்தின் நின்று வேறுபட்டது. அன்பும் அருளும் வேண்டி பற்றற்று சிவனை நோக்கிச் செய்யப்படும் புண்ணியங்களாகும். இதனை சிவபுண்ணியம் என்பர். இதனையே பதி நல்வினை என்றும் கூறுவர். இது நிலையான இன்பத்தை தருவது. துன்பம் அற்றது. சிவ புண்ணியங்களை அல்லது தவத்தின் சாதனைகள் மூலமே அடைய முடிகிறது. சரியை. கிரியை. யோகம். ஞானம் எனும் சாதனைகளாலேயே தவத்தின் பயனை அடைய முடியும். இத்தவத்தின் பயனாய் இறைவன் தனது சொரூப நிலையில் (சிறப்பு நிலை) நின்று விடுபட்டு பொது நிலைக்குச் சென்று தன்னை உட்படுத்தி உருவம், அருவம், அருவுருவம் வடிவங்களை எடுத்து தவமுடைய ஆன்மாக்களுக்கு அவற்றின் பக்குவ நிலைகளிற்கேற்ப அருள்பாலிப்பார். இறைவன் எடுக்கும் மூன்று வடிவங்களையும் திருமேனி என்பர். இத் திருமேனிகளை ஆன்மாக்கள் தமது பக்குவ நிலைக்கேற்ப பூசிப்பதன் மூலம் முத்தி இன்பத்தை பெற முடியும் என்பது சைவ நூல் மரபு. ஆன்மாக்கள் ஞானத்தின் மூலமே பேரின்பத்தை அடைய முடியும்.

ஞானம் என்பது பதி, பசு, பாசம் எனும் முப்பொருட்களின் இலட்சியங்களை அறிவிக்கும். ஞானநூல்களைக் கேட்டு சிந்தித்து தெளிந்து நிட்டைக்கூடல் ஆகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் ஆகிய நான்கும் முறையே ஞானத்திற்கு சரியையும், ஞானத்திற்கு கிரியையும், ஞானத்திற்கு யோகமும். ஞானத்திற்கு ஞானமும் ஆகும். ஞான நெறியில் நின்று முத்தியடைந்த நாயனார் மாணிக்கவாசகர் சுவாமிகள் ஆவார்.

மாணிக்க வாசகர் பாடிய பின்வரும் திருவாசகம் ஒன்றினை இதற்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

“முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தன் எனக் கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே"

முப்பொருள் என்பது சைவசித்தாந்தத்தில் பதி, பசு, பாசம் ஆகியவற்றை குறிப்பதாகும். இவற்றில் பதி என்பது இறைவனையும், பசு என்பது உயிர்களையும், பாசம் என்பது தளைகளையும் குறிக்கிறது. சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் மூன்று உண்மைப் பொருட்களையும் அவற்றின் இயல்புகளையும் கூறுகிறது. சைவ சித்தாந்தத்தில் கடவுள் எங்கும் இருப்பவராகவும் ஒருவனாய் கூறப்பெறுகிறார். தோற்றமும் அழிவும் இல்லாதவராகக் கூறப்படும் கடவுளுக்கு எட்டு வகைக் குணங்களை சைவசித்தாந்தம் கூறுகிறது. அதன்படி உயிரானது உடலினைப் பெறும்முன் அறிவு, இச்சை, செயல் என்பது இன்றியமையாமை நிலையில் மூழ்கியிருக்கும். இந்த உயிரானது கடவுளைப் போன்று தோற்றமும் அழிவுமில்லாத தாகும். சைவ சித்தாந்தப்படி பாசம் அல்லது தளை என்பது உயிர்களை அடிமை செய்யும் பொருள்களாகும். இதனைப் போகப் பொருள்கள் என்றும் கூறுவார். இவற்றில் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றும் பாசம் எனப்படும். இதனை மும்மலம் என்றும் கூறுவர். இவை ஆன்மா இறைவனை உணர்ந்து பேரின்பம் பெறுவதற்கு தடையாய் அவ் ஆன்மாவை மாசுபடுத்தும் காரணத்தால் அவை மலங்கள் என்றும் ஆன்மாவைப் பந்தித்து நிற்பதால் தளை/ கட்டு என்றும் அழைப்பர்.

மும்மலங்களுள் ஆணவமே உயிரை அநாதியாகப் பற்றியுள்ளது. இதனை மூலமலம், இருள்மலம், சகசமலம் என்றும் கூறுவர். ஆணவம் என்பதன் பொருள் ஆன்மாவை அணுத்தன்மை செய்தல் என்பதாகும். அதாவது பேரறிவும் பேராற்றலும் உடைய ஆன்மாவை சிற்றறிவும், சிறு செயலும் உடையதாக்குதலாகும். உயிர்களிடத்தில் "நான்"எனும் அகந்தையையும் "எனது"எனும் மமதையையும் ஆணவம் உண்டாக்கும். இது அகந்தை எனும் அகப்பற்றும் மமதை எனும் புறப்பற்றும் நிலையில்லாதவற்றை நிலையானவை என்று எண்ணச் செய்யும். பொது நலத்தைத் தவிர்த்து தன் நலத்தை வளர்க்கும். குறுகிய மனப்பாண்மையை உருவாக்கும். ஆணவம் இருளை விடக் கொடியது என்று கூறப்படும். இருள் பிற பொருளை மறைத்தாலும் இருளாகிய தன்னைக் காட்டும். ஆணவ இருளோ பிறவற்றை மறைப்பது போலவே தன்னையும் காட்டாது மறைக்கும். இதனை "ஒரு பொருளும் காட்டாது இருள் உருவங் காட்டும்"ஒரு பொருளும் காட்டாது. இப் பொருளும் காட்டாது இது" என உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனில் கூறியுள்ளார். ஆணவத்தை நாம் கடவுளுடைய திருவருளினாலும் வலியிழக்கச் செய்ய முடியும். கடவுள் வழிபாட்டினாலும், நல்லோர் சேர்க்கையினாலும் நல்ல நூல்களைப் படிப்பதனாலும் வலு குன்றச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா நாற்பதங்களில் சீவன் முத்தி எனும் படிநிலைகளைத் தாண்டியே முத்தியின்பத்தையே அடைகிறது. ஒவ்வொரு மனிதனும் தனது ஆத்ம லாபத்தின் பொருட்டு தமக்கு இணைந்த சாதனைகளைக் கடைப்பிடித்து நித்தியமான முத்தியின்பத்தை அடைய முயற்சிக்க வேண்டும். அதுவே இவ் உலகத்தின் மனிதன் பிறந்ததின் பயனாகும்.

செ.கஜநிலானி
பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து ஆலய வழிபாடு

உலகியல் நல் வாழ்வுக்காக இந்துமதம் எண்ணற்ற தத்துவங்களை வழங்கியுள்ளது. ஆலய வழிபாட்டுக்கு பல நெறிமுறைகளை வகுத்துள்ளது. நமது உடலுக்கும் ஆலய அமைப்புக்கும் இடையே ஒரு ரகசியம் இருக்கிறது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். ஆலய வழிபாடு என்பது மனிதர்களுக்கு பயிற்சியையும், முயற்சியையும் தருகிறது. இதற்காகவே முன்னோர்கள் ஆலயங்களில் கருவறை. பிரகாரம், ராஜகோபுரம், கொடி மரம், உட்பிரகார சன்னதி என்று ஏற்படுத்தியுள்ளனர். இவற்றில் அர்த்தமுள்ள ஏராளமான ரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன.

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்று திருமூலர் கூறியுள்ளார். “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்றார் ஔவையார். என்னதான் வீட்டில் தனியாக பூஜை அறை அமைத்து தெய்வப்படங்களை வைத்து வழிபட்டாலும் கோயிலுக்குச் சென்று நம் பிரார்த்தனைகளை முறையிட்டு வழிபட்ட திருப்தி கிடைக்காது. ஆலய வழிபாடு இந்து சமயத்தில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. பசுவின் உடல் எங்கும் இரத்தம் உள்ளது. ஆனால் அதன் மடியிலிருந்து மட்டுமே பால் கிடைக்கின்றது. அதுபோல இறைவன் எல்லா இடங்களிலும் வியாபித்து இருந்தாலும் ஆலயங்களுக்குச் சென்று இறைவனை தரிசிப்பதால் நமக்கு இறைவனின் அருள் முழுமையாக கிடைக்கும். நாம் சந்தோஷம் நிறைந்த அமைதியான வாழ்வைப் பெறுவதற்காக, தினந்தோறும் ஆலயத்திற்கு வந்து தெய்வ தரிசனம் பெறுகிறோம். நம்மில் பலர் இறையருளைப் பெறும் ஆர்வத்தில் நம்மையும் அறியாமல் சாஸ்திரங்களின் விதிகளையே மீறிவிடுகிறோம். இறைவன் எங்கும் நீக்கமற்று நிறைந்திருக்கிறார். அவரை வழிபடும் போது சில விதிகளை பின்பற்றுவோம்.

செய்ய வேண்டியவை என்பன ஆலயத்திற்கு செல்லும் முன் குளித்து விட்டு தூய ஆடைகளை உடுத்திச் செல்ல வேண்டும். கோயில் அருகில் சென்றதும் கோயிலுக்கு முன்பாக நின்று கோபுரத்தை நோக்கி வணங்க வேண்டும். பசுமடமுள்ள கோவிலுக்குச் சென்றால் வாழைப்பழம் / அகத்திக்கீரை கொண்டு சென்று பசுவிற்கு கொடுப்பது சிறப்பு. சிவன் கோவில் என்றால் 3, 5, 7 என எண்ணிக்கையில் வலம் வர வேண்டும். நந்திபகவானை வழிபட்ட பின்னரே சிவனை வழிபட வேண்டும். நந்திக்கும் சிவலிங்கத்திற்கும் இடையில் செல்லக் கூடாது. விநாயகரை இரு கைகளால் தலையில் குட்டி தோப்புக்கரணம் போட்டு வழிபட வேண்டும். கோயிலினுள்ளே மற்ற சந்நிதிகளைக் காட்டிலும் கொடிமரத்தின் அருகில் விழுந்து கும்பிட வேண்டும். அந்தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதிகளுக்கேற்ற ஸ்துதி பாடல்களை பாடி வழிபடுவது சிறப்பு. மந்திரம், துதிப் பாடல், தெரியாதவர்கள் அக் கடவுளின் பெயரைச் சொல்லி கும்பிடலாம். விபூதி, குங்குமங்களை வலது கையிலேயே வாங்க வேண்டும். கோபுர தரிசனம் செய்ய வேண்டும். கோவிலிலிருந்து நேராக நம் விட்டிற்கு தான் செல்ல வேண்டும்.

செய்யக்கூடாதவை என்பன கோயிலின் பலிபீடத்திற்குள்ளே சந்நிதியில் யாரையும் வணங்கக் கூடாது. கோயிலுக்குள் உயர்ந்த ஆசனத்தில் அமரக்கூடாது. கோயில் இறைவன் குடியிருக்கும் தலம், அங்கு வீண் வார்த்தைகளும் தகாத சொற்கள் பேசுதலும் உரக்கப் பேசுதலும் தவறு. இது மற்றவர்களின் வழிபாட்டக்கும் இடையூறாக அமையும். புனித இடமான கோயிலுக்குள் இருக்கும் போது வெற்றிலை பாக்கு போடுதல், பொடி போடுதல், சிகரெட் பிடித்தல் நிச்சயம் கூடாது. விக்கிரகங்களை தொட்டு வணங்கக்கூடாது. கோயிலுக்குள் உறங்கக் கூடாது. கோயிலில் இருந்து வீட்டிற்குச் செல்ல வேண்டும். பிறப்பு, இறப்பு தீட்டுக்களுடன் கோயிலுக்குள் செல்லக் கூடாது. தலையில் தொப்பி, முண்டாசு அணிந்து கொண்டோ. ஈரத்துணி. அரைகுறை ஆடைகளுடனோ செல்லக் கூடாது. தோளில் துண்டுடன் தரிசனம் செய்யக்கூடாது. கோயிலுக்குச் சென்று வந்தபின் உடனடியாகக் கால்களைக் கழுவக் கூடாது.

"அட்ட புட்பம் அவைகொளு மாறுகொண்டு அட்ட மூர்த்தி அனாதிகள் பாலணைந்து அட்ட மாறு செய்கிற்ப திகை வீர அட்டனாரடி சேரு மலர்களே"

- நாவுக்கரசர்

"புண்ணியம் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு" என்பது திருமறை. மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் வழிபாடு செய்வது இன்றியமையாதது. வீடுகளில் செய்யப் படுவது ஆத்மார்த்த வழிபாடு. இவ் விரண்டிலும் இறைவன் திருவுருவங்களிற்கும் அபிஷேகம், அர்ச்சனை முதலியன நிகழும். அபிஷேகத்திற்குரிய திரவியங்கள் இவை என்பதையும், அவற்றின் பயன்களையும், அதுபோல மலர்களின் மாட்சியும் அவற்றை இறைவனிற்குச் சாத்துவதால் உண்டாகும். நன்மைகளையும் அறிந்து கொள்வது அவசியம் எவ்வித வழிபாடாக இருப்பினும் புறத்தூய்மையும் அகத்தூய்மையும் வேண்டும். "புறத்தூய்மை நீரால் அமையும்"ஆதலால் வழிபாட்டிற்கு முன்னர் நீராடி. தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து தூயவராக விளங்க வேண்டும். திருநீறு முதலிய சமய அடையாளங்களும் தேவை. ஐம்புலன்களிலும் மனம் சலனமடையாமால் இறை வழிபாட்டில் ஒன்றுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயிலுக்குச் செல்லும் போது இறைவழிபாட்டிற்குரிய மலர்கள், அபிஷேகத் திரவியங்கள், தூபம், தீபம் முதலியவற்றிற்கான பொருள்களைக் கொண்டு செல்ல வேண்டும். வழிபாட்டிற்குரியவற்றை இடுப்பிற்கு கீழே இருக்குமாறு எடுத்துச் செல்லக் கூடாது. இருகைகளாலும் கொண்டு செல்ல வேண்டும். தூய்மையான இடங்களில் வைக்க வேண்டும்.

**செ.கஜநிலானி**
பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சின்னங்கள்

"மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தீர்"

- அப்பர் -

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"

- சம்பந்தர் -

மேலே கூறப்பட்ட வரிகள் எமது சைவசமயத்தின் தொன்மையையும். புகழையும், மகிமையும் நிலை நாட்டிய குரவாற் பெருமக்களால் பாடப்பட்ட பதிகங்களின் வரிகள் ஆகும். இந்துக்களாகிய நாம் அனைவரும் சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வழிபட்டு வருகின்றோம். எமது மதத்தின் தொன்மை பற்றி அறிய சிந்துவெளி நாகரீகம் ஒரு அடிப்படை சான்றாக அமைந்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாது அறுபத்து மூன்று நாயன்மார்களால் பாடப்பட்ட பதிகங்கள், அவர்களின் வரலாறுகள் எமது சமயத்தின் பழம்பெரும் பெருமையை அறிய உதவுகின்றன. சைவசமயிகளான நாம் அனைவரும் எனது, யான் என்ற அகந்தையை புறந்தள்ளி "எமது, யாம்"என்ற கோட்பாட்டில் வாழ வேண்டும் என்பதே நமது சமயம் எமக்கு கற்றுத் தருகின்ற அடிப்படைப் பாடமாகும்.

இன்றைய 21ம் நூற்றாண்டு விஞ்ஞான உலகத்தில் அறிவியல், ஆராய்ச்சிகளால் கூட கண்டறிய முடியாத பல வினாக்கள் எமது சமயத்தில் எழுந்து நிற்கின்றன. சைவசமயம் பற்றிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள மேற்கைத்தைய நாட்டவர்கள் எமது நாட்டிற்கு ஓடி வருகின்றனர். இவ்வாறு அறிந்தும், அறியாமலும் அரும்பெரும் புதிராய் இருக்கும் எமது இந்து மதத்தின் சின்னங்கள் அவற்றிற்கு பின்னால் உள்ள விளக்கங்களை அலசுவதே இக் கட்டுரையின் மூலம் அடியேன் முயலவுள்ளேன்.

எமது சமயத்தின் சைவ அடிப்படைச் சின்னங்களாக விபூதி மற்றும் உருத்திராக்கம் காணப்பட்டாலும் எமது சைவசமய சடங்குகளில் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு பொருட்களின் பின்னாலும் ஒரு மெய்யான விளக்கம் உண்டு. அறிவியல் கருத்தும் காணப்படுகின்றது என்பதே உண்மை ஆகும். ஆகவே இந்து சமயிகளான நாம் அன்றாடம் பயன்படுத்தும் மஞ்சள், சந்தனம், குங்குமம், வெற்றிலை, பால், அறுகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற அடிப்படைப் பொருட்கள் பற்றி ஒரு சில வரிகள் குறிப்பிடலாம் என விளைகின்றேன்.

விபூதி :-

"நீறில்லா நெற்றி பாழ்"என்பது ஆன்றோர் வாக்காகும். இந்த உலகத்தில் நாமும், அனைவரும் என்றாவது ஒரு நாள் சாம்பலாவோம் என்பதே விபூதி உணர்த்தி நிற்கும் தத்துவம் ஆகும். விபூதியினை தரிப்பதால் எமது உள்ளும், புறமும் தூய்மையாகின்றது. இன்று பலர் முக அழகுக்காக விபூதியை பூசுவதை கொண்டிருந்தாலும். உண்மையில் வடக்குகிழக்கு முகமாக நோக்கிய வண்ணம், விபூதி தரையில் சிந்தாத வகையில் "சிவ சிவ"என நாமம் கூறி அணிவது பொருத்தமாகும். ஞாபகசக்தி அதிகரிப்பு, தொற்றுக் கிருமிகளின் அண்டாமை போன்ற பல அறிவியல் காரணங்களை விபூதி சான்றாக அமைகின்றது. விபூதி உணர்த்தும் தத்துவம் "எதுவும் நிலையற்றது"என்பதாகும். ஆகவே. விபூதி மகத்துவம் அறிந்து பக்தி பூர்வமாக அதை தரித்து நிற்போமாக !

உருத்திராட்சம் :-

உருத்திராட்சம் என்பது சிவனைக் குறிக்கும். இதைப் பற்றி தனியொரு கட்டுரையே எழுதி விடலாம். ஏனெனில் அவ்வளவு மகத்துவமானது இவ் உருத்திராட்சமாலை ஆகும். இது ஒருவரின் இரத்த அழுத்தம், இதய நோய் என்பவற்றை கண்காணிக்கின்றது. சைவ சமயத்தில் தனித்து பார்க்க முடியாத ஒன்றாக உருத்திராட்ச மணிகள் காணப்படுகின்றன.

மஞ்சள் :-

சைவசமயி வாழ்வில் எல்லா சுபகாரியமும் விநாயக வழிபாட்டுடனே இடம் பெறல் வேண்டும். மஞ்சள் மாவில் பிடித்து, உச்சியில் அறுகம்புல் சாற்றிய பின்பே எல்லா சுபகாரியமும் ஆரம்பிக்கப்படும். திருமணம், பூப்புனித நீராட்டுவிழா முதலிய சுப காரியங்களில் இலட்சுமி கடாட்சம் வேண்டி மஞ்சளை பயன்படுத்துவார்கள். அது மட்டுமல்லாது கிருமி நாசினிக்குரிய பண்புகளைக் கொண்டதாக விஞ்ஞான ரீதியாக மஞ்சளின் மகத்துவத்தை விளக்கியுள்ளனர். அத்துடன் உடற்புண். உடல் வலிக்கும். மஞ்சள் மகத்தானது. தெய்வீக ரீதியாக மட்டுமன்றி அழகு சாதனமாகவும் மஞ்சள் பயன்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனம், குங்குமம் :-

அன்னை தேவியின் அருட்பிரசாதமாக குங்குமமும். அப்பன் ஈசனுக்கு சந்தனமும் முக்கியமாகின்றது. இவை இரண்டும் மணவாளக் கோலத்தை குறித்து நிற்கின்றன. இவ் இரண்டு மங்கலப் பொருட்களும் உடலின் நாடி, நரம்புகள் சந்திக்கும் நெற்றிப் பொட்டில் அணிவதால் உடம்பில் ஊடுருவும் தீய பாதிப்பில் இருந்து எம்மைக் காப்பாற்றும். நெற்றியில் பொட்டு வைக்கும் போது "அறியாமையை நீக்கி ஞானம் என்னும் மூன்றாவது கண்ணால் உலகைப் பார்க்க வேண்டும்" என்பதையே இவை விளக்கி நிற்கின்றன.

பால் :-

இது பிரதானமான ஒரு மங்கலப் பொருளாக கருதப்படும் அதே வேளை ஆலய வழிபாடுகளிலும், மங்கள நிகழ்வுகளிலும் பிரதான ஒரு சின்னமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பசு என்ற அரும் பெரும் செல்வத்தில் இருந்து பல செல்வங்கள் கிடைக்கப் பெறுகின்றன. இதனை சம்பந்தர் "நறு நெய்யோடு பால் தயிர்"என்று பாடியுள்ளார். எமது அடிப்படைச் சின்னங்களான விபூதி தயாரிக்க பசுவின் பாலும், சாணமும் முக்கியமாகப் பயன்படுகின்றது.

திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழா முதலிய சடங்குகளில் தலையில் பால், அறுகு வைக்கப்பட்டதன் பின்னரே தலைக்கு தண்ணீர் வார்க்கப்படும். அது மட்டுமன்றி வீட்டில் அசௌகரியமான நிலைகளில் அதனைக் கழிப்பதற்கு பாலுடன் நீர் கலந்து வீடெல்லாம் தெளிப்பார்கள். உணவுப் பொருளாகவும், சுப காரிய பொருளாகவும் பயன்படுத்தும் பால் இந்துக்கள் வாழ்வில் தவிர்க்க மடியா ஒரு அடையாளமாகும்.

அறுகு :-

விநாயகர் எளிமையான தோற்றத்தில் அபாரமான சக்தியை தம்முள் அடக்கி நம்மைக் காப்பவர். ஆயினும் நான் என்ற அகம்பாவம் இல்லாது இருக்க வேண்டும் என்பதற்கு அறுகம்புல்லை அவர் விரும்பி ஏற்கின்றார். ஆகவே எளிமையின் வடிவமே, அறுகம்புல் ஆகும். அறுகம்புல்லை ஊறவைத்து அதன் நீரைக் குடித்து வந்தால் உடல் ஆரோக்கியமும் சிந்தனா சக்தியும் அதிகரிக்கும் என்பதே விஞ்ஞான உண்மை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்டவற்றை தவிர பல சைவ சின்னங்கள், எமது அடையாளங்கள், இந்து மக்களின் வாழ்வினை மெருகூட்டவும், நாம் அனைவரும் வாழ்வாங்கு வாழவும் உதவுகின்றன. கட்டுரை சுருக்கம் கருதி சிலவற்றை மட்டுமே இவ் ஆக்கத்தில் பதிவு செய்திருக்கின்றேன். இந்துக்களாகிய நாம் சைவ சமயத்தின் அடையாளங்களைப் போற்றி இவ் மண்ணில் வாழ்வாங்கு வாழ்வோமாக.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வையகம்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறையில்லை"

**நிஷானந்தி தேவானந்தன்**

பொறியியல் பீடம் (E 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயம் தோற்றமும் வளர்ச்சியும்

வற்றாயிருப்பு பேராற்றல். பேரறிவு. காலம் எனும் நான்கு வளங்களையும் உள்ளடக்கிய இறைநிலையை உணர்ந்த ஞானிகள் அது அசைவற்றிருப்பதால் சிவம் எனக்கூறி சைவ சமயத்தை உருவாக்கினர். சும்மா இருப்பது எப்படி பேராற்றல் ஆகும். இறைநிலையில் இருந்து தோன்றிய சக்தி தான் தெய்வம் என்ற பெரியவர்கள் சாக்த சமயத்தை உருவாக்கினர். விண் தன் சுழற்சியின் போது சத்தத்துடன் சுழல்வதை உணர்ந்தவர்கள் இறைவனுக்கு சங்கையும் சக்கரத்தையும் கொடுத்து வைணவ சமயத்தை உருவாக்கினர். அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற பஞ்ச தன்மாத்திரைகளை உணர்ந்தவர்கள். இவை இயற்கையின் ஐந்து கரங்கள் என விநாயகனைப் படைத்து காணபத்தியம் என்ற சமயத்தை உருவாக்கினர். பஞ்ச தன் மாத்திரைகளோடு உயிரின் அலையான மனத்தையும் சேர்த்து இயற்கைக்கு ஆறு முகங்கள் என அறிந்தவர்கள் கௌமார சமயம் எனக் கூறி வழிபட்டனர். சமயம் (சமம் + இயம்) என்றால் எல்லோரும் சமம் என்ற எண்ணத்தோடு ஒத்ததும் உதவியும் வாழவேண்டும் என்பதாகும். ஆனால் இதனை உணராத மக்கள் இறைநிலை உணர்ந்து வாழ்க்கை நெறிகளை தந்த மகான்களின் பெயரால் பல மதங்களை உருவாக்கினர்.

சைவசமயம் சிவநெறி என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. சிவம் என்ற சொல் பல நூற்றாண்டு திரிபுச் சொல்லாக சைவம் என்று மாறியதாகக் கூறப்படுகிறது. இச் சைவநெறி சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயமாகும். சிவபெருமான் அனைவருக்கும் உரிய கடவுளாகக் கருதப்படுகின்றார். ஆயினும் சிவபெருமானின் அடிகளாராக விளங்கிய 63 நாயன்மார்களால் சைவம் என்று சிவபெருமானின் தனித்தன்மையை விளக்குவதற்கு சைவ வழியைத் தோற்றுவித்தனர். ஆனால் சிவபெருமான் வரைமுறையற்ற சனாதன தர்மத்திற்கு உட்பட்ட அனைவருக்கும் உண்டான கடவுளாக உள்ளார். இந்தியாவின் ஆதிக் கிளைநெறிகளில் அமைந்து விளங்கும் சைவமும் வைணவமும் பின் நாட்களில் இந்து சமயத்தின் பெரும்பான்மையானோர் பின்பற்றும் சமயங்களாகக் காணப்படுகின்றன.

இன்றைய உலகின் சுமர் 452.2 மில்லியன் சைவர்கள் காணப்படுவதாக, மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை மதிப்பீடு ஒன்று குறிப்பிடுகின்றது. சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாக சிவபெருமான் விளங்குகின்றார். உமை. விநாயகர். முருகர், பரமனின் (சிவபெருமானின்) அம்சமான பரிவார கடவுளாக பைரவர் (வீரத்தின் அதிபதி),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்சணாமூர்த்தி, பரமகுரு (ஞானத்தின் அதிபதி). வீரபத்திரர் நாகதம்பிரான் மற்றும் சிறுதெய்வ வழிபாட்டு தெய்வங்களும் சைவ சமயத்தவரின் வழிபாட்டுத் தெய்வங்களாக சைவர்களால் வழிபடப்படுகின்றன. திருக்கையிலையில் நந்தி தேவர் பணிவிடை செய்ய விநாயகரும். முருகனும் அருகிருக்க பார்வதி துணையிருக்க வீற்றிருக்கும், சிவபெருமான் சைவர்களின் பரம்பொருளாக விளங்குகின்றார். கி.பி 12ம் நூற்றாண்டில் தன் உச்சத்தை அடைந்திருந்த சைவநெறி ஆப்கானிஸ்தான் முதல் கம்போடியா வரையான தெற்காசிய தென்கிழக்காசிய முழுவதற்குமான தனிப்பெரும் நெறியாக விளங்கியமைக்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

இன்றைக்கும் தமிழ்நாடு கர்நாடகா. மகாராட்டிரம். மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், இமாசலப் பிரதேசம், அருணாச்சல பிரதேசம். காஷ்மீர், நேபாளம், தமிழீழம். வங்காள பிரதேசம், மலேசியா முதலான பகுதிகளில் வாழும் மக்களின் முதன்மையான சமயமாக சைவமே திகழ்கின்றது.

**ஆர். சாரங்கிகா**

கால்நடை வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரன்போர் நிகழ்வு 2022











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித வாழ்வில் இந்து சமயத்தின் பங்களிப்பு

இந்து சமயத்திற்கு “சனாதன தர்மம்”என்ற பெயரும் உண்டு. இதன் பொருள் “என்றுமுள்ள வாழ்க்கை நெறி”என்பதாகும். அதாவது எந்த வழியில் அணுகினாலும் இறைவனை அடையலாம் என்பது இதன் அடிப்படையாகும். தற்போது விஞ்ஞானம் பெற்றுள்ள அபரிதமான, பிரமிக்க வைக்கும் வளர்ச்சி, உலகம் முழுவதும் எல்லா இனத்திலும் கலாச்சார பண்பாடுகளில் மாபெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், பேணி வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. அதற்கு இந்து சமயத்திலுள்ள வாழ்வியல் நெறிமுறைகளை கடைப்பிடிக்க வைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்துசமய வாழ்க்கை என்பது அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம் மற்றும் நம்பிக்கை உட்பட பல்வேறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது.

மேற்கண்ட அனைத்தும் ஒருங்கிணையும் போது அது ஒரு சிறந்த ஆளுமையை வளர்க்கும். இந்து சமயத்தின் இந்த ஒருங்கிணைந்த பயிற்சியைப் பெறும் போது மனிதன் வாழ்க்கையில் சலனம் இல்லாத மேம்பாட்டை எட்ட முடியும். பொதுவாக இறைவனை அடைவதற்கான இறை தரிசனத்தை கர்மயோகம், பக்தி யோகம், ஞானயோகம், ராஜயோகம் என நான்கு வழிகளில் பெறலாம். ஆனால் இறைவனை உண்மையில் நெருங்குவதற்கும் இதற்கும் தொடர்பில்லை. வேதங்கள், உப நிஷத்துக்கள் கற்றவனுக்கு இறைவன் அருள் கிடைக்காமல் போகலாம். வேதபாராயணம் பற்றி ஒரு வரிகூட தெரியாதவனுக்கு இறைவன் காட்சி கொடுக்கலாம். எனவே இறைவழிபாட்டில் வெளிவேஷங்கள் தேவையில்லை. இயல்பான வழிபாடே போதுமானது. இதற்கு மேலும் எட்டு வகை குணங்களை இந்துசமயம் வலியுறுத்தியுள்ளது.

உலகிலுள்ள எல்லா உயிர்களிடமும் அன்புடன் இருக்க வேண்டும். கருணையை கைவிடக்கூடாது இதை வலியுறுத்தவே “அன்பே சிவம் அதுவே நலம்” என்றனர். பொறுமை மற்றும் அதனை சகிக்கும் மனவுறுதி வேண்டும். மற்றவர்களை நினைத்துப் பொறாமைப் படக்கூடாது. உடல், மனம், செயலில் எப்போதும் தூய்மையுடன் இருத்தல் வேண்டும். தன் முனைப்பின் காரணமாகவும், பேராசை காரணமாகவும் எழக்கூடிய வலிமிகுந்த உழைப்பு வேண்டும். எப்போதும். கலகலப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும். நன்னடத்தை பேண வேண்டும். எல்லா மோகங்களும் வலுவற்றவை, நிலையற்றவை என உணர வேண்டும். இவ் எட்டுவகை குணம் மூலம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பெற முடியும். இவை இறைவனை எளிதில் காண உதவும்.

இந்து சமயத்தின் முக்கிய அம்சமே அது வேதங்களும், ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டு ஆன்மிக அடிப்படையில் தங்கியிருப்பது தான் அது மட்டுமன்றி நல்ல கருத்தையும் ஏற்றுக் கொள்வது இந்து சமயத்தின் தனித்துவமாகும். இந்து சமயம் மனிதனுக்கும் அவன் கொள்கை, வாழ்க்கை முறைக்கு வழிகாட்டி இறைவழிபாட்டை வாழ்வியலோடு ஒருங்கிணைந்த ஒன்றாக வைத்துள்ளனர். மனிதனின் வாழ்க்கையில் ஒவ்வொன்றும் இறைவழிபாட்டில் எதிரொலித்தபடியுள்ளது. இதற்கான எடுத்துக் காட்டுகள் பல உள்ளன. எந்த நிலையிலும் ஆண், பெண் சரிசமம் என்பதை இந்துமதம் காலம் காலமாக உணர்த்த அர்த்த நாரீஸ்வரர் வழிபாட்டைச் செய்துவருகிறது. திருவிழாக்கள் சமுதாயத்தை ஒருங்கிணைக்க உருவாக்கப்பட்டவையாகும். இதன் போது மக்களில் பிரிவினை இல்லாமல் எல்லோரும் வடம் இழுப்பர். “இறைவன் முன் நாம் அனைவரும் சமம்” எனும் நெறி அங்கு உணர்த்தப்படும். மேலும் வாழ்வில் துன்பம், துயரம் வரும் போது இறைவன் வழிநடத்துவான் என்ற நம்பிக்கையுடன் திடமாக இருக்க வழிவகுக்கும் இதனையே “கடவுளை நம்பினோர் கை விடப்படார்” எனக் கூறுவார்.

இவ்வாறு எமது வாழ்வை நெறிப்படுத்த முன்னோர் இந்து சமயத்தில் பல வாழ்வியல் நெறிகளை, கோட்பாடுகளை வழி வகுத்தனர். இக் கோட்பாடுகளை மனித வாழ்வில் பின்பற்றி மனிதருள் சிறந்து விளங்கி பிறவிப் பெருங்கடலில் இருந்து தப்பி மேன் நிலையை அடைய எத்தணிப்போம்.

**செ.கஜநிலானி**
பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுபடை வீடுடைய முருகனின் வரலாறு

பழந்தமிழ் நூல்களில் நிலத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் உரிய கடவுளையும் குறித்துள்ளன. அந்த பிரிவின் படி மலை சார்ந்த இடத்துக்கு கடவுள் முருகன். அதனால் முருகனை குறிஞ்சிக் கிழவன் "மலைக்கிழவன்" என்று தமிழ் நூல்கள் கூறும். முருகு என்ற சொல் இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் பொருள்படும். முருகனும் என்றும் இளையோன் எனப் பாராட்டப்பட்டுள்ளான்.

முருகனும் வரலாற்றைப் பற்றி பழந்தமிழ் நூல்கள் ஒரு வரலாறு கூறுகின்றன. கந்தபுராணம் என்னும் பிற்கால நூல் பிறிதொருவாறு கூறுகின்றது. இப்போது யாவராலும் கொள்ளப்படும் வரலாறு கந்தபுராணம் ஆகிய நூல்களிற் கூறப்பட்ட வரலாறே. சூரபதுமன் முதலிய அசுரர்களின் கொடுமைகளுக்கு ஆற்றாத தேவர்கள் சிவபிரானிடம் முறையிட அதே முகத்தோடு கூடிய ஆறு திருமுகங்களினின்றும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தார். அவரது ஆணைப்படி அந்த ஆறு பொறிகளையும் வாயுவும் தீயும் ஏந்திச் சென்று சரவண மடுவில் கடம்ப மரநிழலில் விடுத்தது. அப்போது ஆறுபொறிகளும் ஒரு குழந்தை உருவம் கொண்டன. தேவர்களின் கட்டளைப்படி கார்த்திகைப் பெண்கள் அக்குழந்தையினைப் பராமரிக்கப் பணிக்கப்பட்டனர். அவர்கள் அறுவரும் அந்தக் குழந்தையினை தூக்கி, சீராட்டி, பாராட்டி, பாலூட்ட விரும்பவே அந்த ஒரு குழந்தை ஆறு குழந்தைகளாகத் திகழ அவர்கள் அக்குழந்தைகளுக்குப் பாலூட்டும் பேறு பெற்றனர். பின்னர் சிவபிரான் உமையம்மையாருடன் சரவண வாவிக்கு வந்து குழந்தைகளை அணைத்தெடுக்குமாறு உமையம்மையாரைப் பணிக்கவே தேவியாரும் அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்று சேர்த்துக் கையால் எடுத்தணைக்க ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் இரு திருவடிகளும் கொண்டமைந்து ஒரு குழந்தையாக அன்னை திருக்கரத்தில் பொலிந்தனர். முருகபிரான் ஒரு குழந்தையாகச் சேர்க்கப்பட்ட காரணத்தால் "கந்தன்" என்றும் சரவணமடுவில் தோன்றியதால் "சரவணபவன்" என்றும் கார்த்திகை மாதர்களின் பாலுண்ட காரணத்தால் "கார்த்திகேயன்" எனவும் கடம்ப மரநிழலில் ஆடல் புரிந்தமையால் "கடம்பன்" என்றும் ஆறுமுகத்துடன் விளங்கியமையால் "ஆறுமுகன்" என்றும் இளமை அழகு திகழ்வதால் "முருகன்", "குமரன்" என்றும் அடியார்களின் உள்ளக் குகையில் உறைவதால் "குகன்" என்றும் அழகிய பல திருப்பெயர்கள் கொண்டு போற்றப்படுகின்றார்.

முருகன் உருவத்தில் மாத்திரம் இளையவன் அல்ல. பல வகைப்பட்ட அவன் செயல்களும் குழந்தைப் பருவத்திற்குரிய இலக்கணங்கள் சில உண்டு. தொட்டிலில் படுத்து தூங்குவது குழந்தையின் இயல்பு. அழுவதும் குழந்தையின் இயல்பு. உலகத்தில் உள்ள எல்லாப் பச்சிளம் குழந்தைகளுக்கும் இவை இயல்பு. உருவத்தில் மட்டும் முருகன் குழந்தை அல்ல, செயலிலும் குழந்தை என்பதற்கு இந்த மூன்று இலக்கணங்களும் அவனிடத்து இருக்கின்றன.

"திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்
பாவை திருமுலைப் பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில்
ஏறி அறுவர் கொங்கை
விரும்பிக் கடல் அழக் குன்றழத்
ஆர் அழவ விம்மி அழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன் என்(று)
ஓதும் குவலயமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் விருப்பப்படி முருகன் தேவர்கட்குச் சேனாதிபதியானான். போருக்கு எழுந்து முதலில் சூரபதுமனது தம்பியாகிய தாரகனை மறக்கருணை கொண்டு வதைத்து அவனக்குத் துணையாக இருந்த கிரவுஞ்ச கிரியையும் பிளந்து வேலாயுதத்தால் ஒடுக்கியருளினார்.

அதனால் தேவசேனாதிபதி தாரகச் செற்றோன், கிரவுஞ்ச பேத மூர்த்தி எனப் பெயர் பெற்றான். பின்னர் சூரபதுமனது தம்பியாகிய சிங்கமுகாசுரனை குலிசாயுத்தால் சங்கரித்தார். இறுதியில் அழியா வரப்பேறும் வட்சிரயாக்கையும் கொண்டு நின்ற சூரபதுமனை அவன் கொண்ட மாயங்களையெல்லாம் அழித்து ஞானசக்தியாகிய வேல்கொண்டு பிளக்க அவன் இறவாவரம் பெற்றிருந்த பலத்தினால் சேவலும் மயிலுமாகி முருகனை எதிர்த்து வந்தான். பெருமான் அவைகளை அருள்நோக்கோடு பார்க்க முற்பிறவியில் சூரன், பதுமன் என இருந்த இரு அசுரர் இறைவனையடைய வேண்டி தவம் செய்து அருள்பெற்று அடுத்த பிறவியில் இருவரும் ஒருவராகி சூரபதுமன் என்ற பெயரோடு விளங்கினார். பரிபக்குவம் வாய்ந்தபோது மட்டும் பிரிந்து பதுமன் சேவற்கோழியாக முருகப்பெருமானுக்கு கொடியாகினான். சூரன் மயில்வாகனமாகி பெருமானைச் சுமக்கும் பேறு பெற்றான். சூரனைச் சங்காரம் செய்து தேவலோகத்தை மட்டும் அடைதலாகிய பேருளை பெற்ற இந்திரன் தான் வளர்ந்த தேவசேனை என்னும் மங்கையை முருகனுக்கு திருப்பரங்குன்றில் திருமணம் செய்துவித்தான்.

நன்றி

**த.தனுஷன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயம்

வெண்ணெய் நல்லூரில் விளங்கிடு வேளாண்
மேதகு குலத்தினில் தோன்றி
எண்ணலின் சைவம் இனிதுநின் றோங்க
ஏற்றமாம் ஞான போதத்தைக்
கண்ணுத லருளாளல்காசினிக் குதவிக்
கன்மமாம் புன்மல மவித்த
புண்ணிய முதல்வர் போற்றிடு மிளைய
புதல்வரே யென்பதை யுணர்வீர்

சுந்தரர் முதலாம் சொல்லரு மிளைய
தொண்டர்கள் தோன்றிய தூய
சந்திர னணிந்த சடைமுடிக் கடவுள்
தனிப்பெருங் கருணையை நிறுவி
அந்தர முதலா மனைத்துல கேத்தும்
அண்ணலா ரடிமல ரடைந்து
சந்ததம் நிலைத்துத் தனிப்புகழ் பெற்றார்
சாற்றிடின் அளவில ரம்மா

ஆதலால் சைவ இளைஞராய் இன்று
அவனியிற் றோன்றிய நீவிர்
மாதொரு பாகன் மலரடி போற்றும்
மாசிலா மமதை நிறுவிக்
கோதிலா உண்மைக் குணங்குறி கடந்த
கொற்றவன் பதமல ரடைய
ஆதரவாகி அனைவருஞ் சேர்ந்து
ஆனந்தத்துடன் வருவார்

**A.துஷாந்தி**

இணைந்த சுகாதார பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமயத்தின் ஆழமான பாரம்பரியம்

இந்து சமயமானது உலகிலே மிகவும் தொன்மையானதும் மிக ஆழமான பாரம்பரியங்களைக் கொண்டதுமான சமயம் ஆகும். இது சுமார் 950 மில்லியன் இந்துக்களை உள்ளடக்கிய உலகின் மூன்றாவது பெரிய சமயம் ஆகும். பிற சமயத்தை போல் இந்து சமயத்தை தோற்றுவித்தவர் என யாரும் இல்லை. இந்து சமயம் பல்வேறு வகையான சடங்கு, சமயநூல்கள், நம்பிக்கைகள், ஒழுக்க விழுமியங்களை உள்ளடக்கியுள்ளது.

வேதகாலத்தில் காற்று, மழை, சூரியன் என இயற்கையை வழிபட்ட சைவசமயிகள் நாகரீகம் வளர சிவன், முருகன், பிள்ளையார் என உருக்கொண்டு வழிபட்டு வருகின்றனர். இந்துசமயம் முக்கியமாக அன்பு, உறுதி, நம்பிக்கை என்பவற்றை அடிப்படையாகக்கொண்டது. இது சுய உணர்தல் மற்றும் கடவுள் உணர்தல் மூலம் உயர்ந்த ஆன்மீகத் தத்துவங்களை வலியுறுத்துகிறது. இதன் மேன்மையால் இச்சமயம் சனாதனதர்மம் என்றும் அழைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட இந்து சமயத்தின் ஆழமான பாரம்பரியத்தைப் பற்றி அனைவரும் அறிந்திருப்பது அவசியமானதாகும்.

பல்வேறு முனிவர்களாலும் முன்னோர்களாலும் செவிவழியாக 'வேதம்' எனும் வாழ்வியல் முறை கடத்தப்பட்டு பின் கல்வெட்டுக்களிலும் ஓலைச்சுவடிகளிலும் எழுதப்பட்டது. இவ்வேதத்தினை எளிமையாக மக்களிடையே கடத்துவதற்காக உபநிடதங்களும் புராணங்களும் தோற்றுவிக்கப்பட்டன. பின்னர் இயற்கையிலிருந்து இறையுரு கொடுக்கப்பட்ட தெய்வங்களிற்கு சிறுசிறு கோயில்களை அமைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் வந்த மன்னர்களும் சைவத்தை வளர்க்க பெரும் கோயில்களை கட்டுவித்து திருப்பணி ஆற்றினர். குறிப்பாக இராஜராஜசோழன் கட்டிய தஞ்சை பெருங்கோயில் தமிழனின் கலைப்பாரம்பரியத்தையும் இந்துசமயத்தின் மகிமையையும் பலநூறு ஆண்டுகளாக உலகிற்கு பறைசாற்றி வருகின்றது. இதுமட்டுமல்லாது மதுரை மீனாட்சி அம்மன் கோயில், அங்கோர்வாட் கோவில், காசிவிஸ்வநாதர் கோயில் போன்ற தலங்களும் சைவசமயத்தின் தொன்மையை காட்டுகின்றன.

சம்பந்தர், அப்பர், சுந்தரரின் தேவாரப்பதிகங்களும் சிறுத்தொண்டர் போன்ற நாயன்மார்களின் திருப்பணியும் சைவத்தை மென்மேலும் வளர்த்தது. பரவிக்கிடந்த சமயத்தை இந்நாயன்மார்களின் சைவப்பணி ஒருங்கிணைத்தது என்றே சொல்லலாம். 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' எனும் பழமொழி திருவாசகத்தின் சிறப்பை காட்டுகிறது. பெரியபுராணம் நாயன்மார்களின் தொண்டுகளையும் இறைவனின் திருவிளையாடல்களையும் சிறப்பே கூறுகிறது. இத்தேவாரங்களும், புராணங்களும், தோத்திரப்பாடல்களும் சைவசமயத்தின் ஆழமான விழுமியங்களையும் மேன்மையையும் சிறப்பிக்கின்றன. தொன்றுதொட்டு மக்களினால் கொண்டாடப்பட்டு வரும் விழாக்களும் விரதங்களும் இந்துதர்மத்தின் ஆழமான பாரம்பரியத்தையும் தொன்மையான வரலாற்றையும் உலகிற்கு விளக்குகின்றது. நரகாசுரனை திருமால் கொன்ற தினம் தீபாவளியாகவும், சூரபத்மனுக்கும் முருகப்பெருமானுக்கும் இடையில் நடந்த போரின் 6 தினங்களும் கந்தசஷ்டி விரதமாகவும் தோன்றியதாக புராணங்களும் வரலாறுகளும் கூறுகின்றன.

முதலில் சிந்துவெளி நாகரீகத்திலேயே இந்து சமயம் தோன்றியிருக்கலாம் என கருதப்பட்டது. ஆனால் பின்னர் நிகழ்ந்த ஆராய்ச்சிகள் அதற்கு முன்னரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயம் தோன்றியிருக்கலாம் என கூறுகின்றன. இப்படி மிகவும் தொன்மையான இந்துதர்மத்தின் வழிவழி வந்த மரபுகள் தொழில்நுட்ப நாகரீக வளர்ச்சிகளால் மருவி வருகின்றன. எனவே, முன்னோர் எமக்குத் தந்த இந்து நாகரீகத்தின் ஒழுக்கங்களையும் விழுமியங்களையும் மரபுகளையும் எம் எதிர்கால சந்ததியினருக்கு கையளித்து அவர்களிற்கும் அதன் மேன்மையினை உணர்த்துவது இந்துக்களாகிய எமது கடமையாகும்.

**ஜெ.பார்கவி**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சைவசமயத்தின் தொன்மையும் வளர்ச்சியும்

தொன்மையும் தொன்மையின் பெருமையையும் தன்னகத்தே தாங்கும் இலங்கைத் திருநாட்டின் சைவநெறியின் தொன்மை நம்மை வியப்பில் ஆழ்த்திடும். இலங்கை சமூகம் உருவான காலம் தொட்டு இன்று வரை சைவத்தின் சாயல் வளர்ச்சி காண்கின்றது. இன்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்படும் சிவ ஆலயங்கள் சைவத்தின் தொன்மையை பறைசாற்றுகின்றன. சைவம் இலங்கையில் தொன்மையாகவே காணப்பட்டதற்கான சான்றாக திகழும் மகாகாவியம் இராமாயணம் இராமாயணத்தில் இலங்கை சிவபூமியாகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட சிவாலயங்களும் இதை வழிமொழிகின்றன. சைவகுரவர்களின் நூல்களிலும் இலங்கையில் சைவத்தின் தொன்மை பாடப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

நம் நாட்டின் வரலாறு ஆரம்பிக்கும் காலமான இயக்கர் நாகர் மக்களும் சைவ வழிபாட்டை மேற்கொண்டமையை ஆதாரங்கள் மூலம் அறியலாம். தேவநம்பியதீசன் காலப்பகுதிக்கு முன்னரான காலப்பகுதி மன்னர்கள் பலர் சிவன் என்ற பகுதிப் பெயரைக் கொண்டிருந்தனர். இவருக்கு பின்னரான காலப்பகுதியில் சைவம் சற்று நலிவடைய ஆரம்பித்திருந்தது.

அந்நியர்கள் காலப்பகுதியில் சைவம் மேலும் நலிவை சந்திக்க நேர்ந்தது. ஆயினும் 19ம் நூற்றாண்டில் சைவம் புதுபரிமாணத்தையே சந்தித்தது. நாவலர் இவ்வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் அமைந்திருந்தார். இவரே பிரசங்க மரபைத் தோற்றுவித்தவர். இந்நூற்றாண்டிலேயே சைவப் பாடசாலைக்கான வித்திடப்பட்டிருந்தது. சைவத் தமிழ் மாணவர்களுக்கான முதல் பாடசாலையாக சைவப்பிரகாச வித்தியாசாலை நாவலரால் நிறுவப்பட்டது. மேலும் சைவத்திற்காக பாடநூல்களை எழுதி வெளியிடும் பணியிலும் ஈடுபட்டார். செய்யுள் வடிவில் உள்ள நூல்களுக்கு உரை எழுதியதன் மூலம் எல்லா மக்களுக்கும் சைவத்தின் பெருமையை அறியச் செய்தார் நாவலர்.

19ம் நூற்றாண்டில் சைவத்தில் மறுமலர்ச்சியில் விபுலானந்தரின் சேவையும் அளப்பரியது. இவர் தலைமை தாங்கிய மாநாடுகளும் ஆற்றிய சொற்பொழிவுகளும் சைவத்தின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைந்திருந்தன. சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் இவ்வழி சைவத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினர். நம் நாட்டின் பாரிய வரலாற்றில் சைவத்தின் சான்றுகள் என்றுமே அழிக்கப்பட முடியாதவை. இவ்வரலாற்றுப் பதிவுகளில் சைவநெறியுடன் நாம் பயணிக்க பலரின் அர்ப்பணிப்பு வேரூன்றியுள்ளது. எனவே சைவம் கூறும் அறவழியை நாமும் அறிந்து அதன் வழி பயணிப்போம்.

**P.ராஜநிதுர்ஷா**

இணைந்த சுகாதார பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா சிவராத்திரி வரலாறு மற்றும் ரகசியங்கள்

இந்து மதம் என்பது மதம் இல்லை. அது வாழ்வியல் நெறிமுறை எப்படி ஒரு மனிதன் வாழவேண்டும் என்று முனிவர்கள், சித்தர்கள், ஞானிகள் மூலம் மக்களுக்கு இறைவனால் சொல்லப்பட்ட விதிமுறைகள் என்பதே நிதர்சனமான உண்மை. சிவராத்திரி என்பது விழா அல்ல. அது மனதைக் கட்டுப்படுத்தும் மகாவிரதம் அதனால் இதைக் கொண்டாடுகிறோம் என்று சொல்வதை விட அனுஷ்டிக்கிறோம் என்று சொல்வதே சரி.

சிவராத்திரி என்றால் பட்டினி கிடப்பது, கண் விழிப்பது, கோவிலுக்குப் போவதுடன் நின்று விடாமல் இதன் தத்துவம் உணர்ந்து இவ்விரதத்தை அனுஷ்டித்தால் வாழ்க்கை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளலாம் நம் மனம் சந்திரனின் இயக்கத்தைப் பொறுத்து செயற்படுகிறது. சந்திரன் வளரும் நாட்கள் 15, தேயும் நாட்கள் 15, இதில் தேய்மறையின், 14வது நாள், அதாவது அமாவாசைக்கு முந்தைய நாள், சந்திரன் ஏறத்தாழ மறைந்து விடும். நம் மனமும் இப்படித்தான்... ஒரு நாள் ஒன்றை அடைந்தே தீர வேண்டும் என்ற ஆசை பொங்கும். அடுத்த நாளே அது எதற்கு அதனால் என்ன பயன் என எண்ணி, அந்த எண்ணம் தேய்ந்து போகும். மறுநாளே, விட்டேனா பார்... என்று, அதே ஆசையின் மீது லயிக்க ஆரம்பித்து விடும்; இப்படி நிலையில்லாமல் இருப்பது மனம்.

சிவராத்திரியை ஏன் தேய்பிறையின் 14ஆம் நாள் அனுஷ்டிக்கின்றனர் தெரியுமா?...

மனித மனம் ஒரு நிலைப்பட தியானம் அவசியம். அலைபாயும் மனதை, சிவத்தின் மீது வைத்து, எங்கும் போகாமல் கட்டிப் போட வேண்டும். அப்படி கட்டிப் போட்டாலும் அமாவாசைக்கு முந்தைய நாள் சந்திரினின் சிறு கீற்றுப் போல மனிதன் ஏதோ ஒரு மூலையில் முந்தைய ஆசை எண்ணங்களின் சிறு வடிவம் புதைந்து தான் இருக்கும் அதையும் ஒழித்தால் தான், நாம் இப் பிறவியில் இருந்து விடுபட்டு சிவனை அடைய முடியும். அதற்காக சிவனை வழிபடும் நாளே சிவராத்திரி இந்தத் தத்துவத்தை உணர்த்தத் தான், சிவனை லிங்க வடிவில் படைத்தனர் நம் முன்னோர். லிங்கத்தின் பாணம் ஏறத்தாழ முட்டையின் வடிவில் இருக்கும். ஒரு முட்டையின் படம் வரையுங்கள் அதற்கு முதலும் இல்லை, முடிவும் இல்லை. சுற்றிச்சுற்றிப்போய்க் கொண்டே இருக்கும். அதே போன்றுதான் சிவனும். முதலும், முடிவும் இல்லாதவர். மனிதர்களுக்கு அப்படி இல்லை நமக்கு பிறப்பு என்னும் முதலும் இறப்பு என்னும் முடிவும் இருக்கின்றது. இது நாம் செய்யும் பாவ, புண்ணியத்திற்கேற்ப பல பிறவிகளைத் தருகின்றது. சிலர் ஏழு பிறவி என்று மனிதர்களுக்கு கணக்குச் சொல்வார். 'எழு பிறவி' என்பதே சரி! நம் பாவக்கணக்கு கரையும் வரை; மீண்டும் மீண்டும் பூமியில் எழுந்து கொண்டே இருப்போம். பிறவிச் சுழலியில் இருந்து விடுபட ஏதாவது வழியிருக்கின்றதா என்றால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது... அதற்கு ஒரு மந்திர வார்த்தையினை சொல்லி இருக்கின்றனர் முன்னோர்... அது தான், அன்பே சிவம்! பிற உயிர்களையும் தம்மை போல் கருதி அன்பு செலுத்த வேண்டும்.

பிரதோஷத்தின் அடுத்த நாள் சிவராத்திரியைக் கொண்டாடுவதன் சூட்சுமம்...

புராணம் சொல்லியிருப்பதை முதலில் பார்ப்போம். அழிவே இல்லாமல் அமிர்தம் கடையப்படுகிறது. கடைபவர்கள் தேவர்களும் அசுரர்களும், மந்தார மலை மத்து கடையும் போது முதலில் ஆலம், காலம் என்கிற இரண்டு விதமான விஷம் வருகின்றது. உலக மக்களை இரட்சிக்கும் பொருட்டு சிவன் அதைப் பருகுகின்றார்.. உமையாகிய சக்தி அதைக் கண்டத்தில் நிறுத்தி வைக்கிறார். எனவே சிவன் திரு நீல கண்டன் என்று போற்றப்படுகிறார். ஆனால் இதற்குப் பின்னால் தெளிவான யோக விஷயங்கள் மறைந்துள்ளன.

முதலில் நந்தியின் கொம்பின் நடுவில் நின்று தாண்ட வமாடுவது குறித்துப் பார்ப்போம்... திருமந்திரத்தில் "ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப் புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

இந்த பாடலைப் படிக்கும் போறு ஒரு சந்தேகம் வரக் கூடும். விநாயகர் சிவனின் மகன் தானே? நந்தி மகன் என்று போடப்பட்டிருக்கிறதே என்று. சிவபெருமானே நந்தி தேவனாக குருவாக வந்தார் என்றும் சொல்வார்கள். அப்படி என்றால் வாகனமாகக் காட்டுவது எதனால்? இதில் உள்ள சூட்சுமத்தை நந்தனாதின் பாடலின் ஒரு வரியைக் கேட்கலாம். அதாவது அவரைக் கோயிலுக்குள் அனுமதிக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர் ஜாதியில் குறைத்தவர் ஆனால் பக்தியில் அவருக்கு ஈடு சொல்ல என்று யாருமே இல்லை. சரி வாசலில் நின்று எட்டிப் பார்க்கலாம் என்றால், இந்த நந்தி மறைக்கிறது. அதை அவர் "நான் செய்த பாவங்களல்லவா இப்படி நந்தியாக வந்து குறுக்கே நிற்கிறது" என்பார். ஆக சிவபெருமானை நாம் அடையத் தடையாக உள்ள வினைகள் எங்கே இருக்கும். நம் உயிர் சக்தியில் பதிந்திருக்கும். அந்த உயிர் சக்தியே நமக்குள் இருக்கும் நெருப்பாகிய குண்டலினி ஆகும். அதாவது "நம் தீ" என்பதே "நந்தி" என்றழைக்கப்படுகின்றது.

அசையாமல் இருக்கும் பேராற்றல் சிவம். அவரே இயக்கும் வல்லமையுள்ள சக்தியாக நம் உடலில் உயிராக விளங்குகிறார். இதையே குண்டலினி சக்தியாகிய நந்தியின் மேலேறி அமர்ந்திருப்பது போல் காட்டப்படுகிறது. விநாயகர் பார்வதியின் பிள்ளை தான் என்று சொல்வார்கள் சிவத்தின் சக்தி அம்சமே குண்டலினியாகி நம் மூலாதாரத்தில் உறைகின்றது. எனவே தான் மூலாதாரத்தின் தேவதையாகக் கணபதியைக் குறிப்பிடுவார்கள். விநாயகன் உருவமே யோகத்தை உணர்த்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை விநாயகர் அகவல் மூலம் ஔவை நமக்குத் தெளிவு படுத்தி இருக்கின்றார். குண்டலினியானவளை உச்சிக்கு ஏற்றி சிவத்தோடு கலக்கும் போது அமிர்தம் உண்ணயாலம் குண்டலினி உச்சியில் இருக்கும் போது உச்சியில் சிவதாண்டவம் காணலாம். எல்லாம் யோக விஷயங்களின் குறிகாட்டிகளாகவே திகழ்கின்றன. பாற்கடல் நம் உடல், நம் முதுகுத் தண்டே மந்தாரமலை, வாசி எனப்படும் அவாசமே வாசுகி, இடகலை, பிங்கலை என்பன தேவர்கள், அசுரர்கள் வாசி யோகத்தின் மூலம் தகம் செய்யும் போது குண்டலினியாளவள் மேலேறும் போது முதலில் நமது பாவ வினைகள் தான் மேலேறும். அது அனாகதம் வரும் போதே அதாவது ஆத்மலிங்க தரிசனம் காணும் போதே இறையாற்றலோடு கலக்கும் அவ்வாறு கலந்தால் எல்லா தவப் பயனும் வீணாகிவிடும். என்று குண்டலினி தேவியானவள் அதை விசுத்திக்க மேலே பாவம் நீங்கிய சுத்த சக்தியே சிவத்தோடு ஒன்று சேர்ந்து சாதகனுக்கு அறித்தம் இடைக்கச் செய்யும். பிரதோஷம் என்றால் பகல் முடித்து ஆரியன் அஷ்டமிக்கும் கலம் என்பார்கள். அதற்கு இன்னொரு பொருளும் உண்டு அதாவது ஒடுங்கும் நேரம். எல்லா புலன்களும் ஒடுங்கி மகாசக்தி மேலேறும் நேரம். ஸ்ரீவித்யை மார்க்கத்தில் தோள்கண்டம். நீள் கண்டம் என்று சொல்வார்கள். அண்டத்தையும், பிண்டத்தையும் அணைக்கும் கண்டமாகிய தொண்டைப்பகுதியைக் குறித்துச் சொல்வார்கள். பக்தர்களை இரட்சிக்கும் படிக்கு அவர்களது பாவமாகிய விஷத்தை சிவன் ஏற்றுக் கொள்வார் ஆனால், மாகா சக்தியானவள் அது மேலேறினால் எல்லாம் கெடும் என்று அதை கண்டத்தில் நிறுத்திவிடுவாள்.

ஆக பிரதோஷ வேளையில் (ஒடுங்கும் நேரத்தில்) நமது பாவங்களை ஏற்றுக் கொள்வார் என்றுதான் பிரதோஷமும் இதற்கு முன்னால் ஒடுங்கியவர்களின் (நம் முன்னோர்களின்) பாவத்தை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் பூமியில் உள்ளவர்கள் காலத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு சந்திரனைத் தேய்ந்து வளரம் செய்து அருளியதற்காகவும், அவ்வாறு தேய்யும் போது அமாவாசையை ஒட்டிய காலங்களில் ஏற்படும் பலவீனத்தை சரி செய்வதற்காகவும் சிவராத்திரி பூஜை ஏற்படுத்தப்பட்டது.

நன்றி

சி.சிவசத்தியா

விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமயமும் அன்பு நெறியும்

'அன்பே சிவம்' என்ற தத்துவத்தின் மூலம் இந்துசமயம் அன்பு நெறிக்கு வழங்கியிருக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். சமயங்கள் அனைத்திலும் அன்பு நெறி வலியுறுத்தப்படுகிறது. எனினும் இந்து சமயத்தில் இறைவனையே அன்பு மயமாக்கிக் கொள்வது தனித்துவமானதே. 'அன்பு' என்பதன் பொருள் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. இறைவன் மக்கள் மேல் சொரியும் அன்பு அப்பழுக்கற்றது. மக்கள் இறைவன் மேல் செலுத்தும் அன்பு, பக்தி, காதல் என்று பல்வேறு அர்த்தங்களைக் கொண்டது. இதனை இந்து சமயத்தின் நாயன்மார் வரலாறுகள் தெளிவாக காட்டுகின்றன.

அவ்வாறே ஸ்ரீ ஆண்டாள், பக்தை மீரா, காரைக்காலம்மையார், துளசிதாசர் முதலியோரது வரலாறுகளும் உண்மை அன்பை எடுத்துக்காட்டுகின்றன. இந்து மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட சமய இலக்கியம் 'பன்னிரு திருமுறை' ஆகும். இதில் முதல் 7 திருமுறைகள் தேவாரம், 8ம் திருமுறை திருவாசகம், திருக்கோவையார், 9ம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, 10ம் திருமுறை திருமந்திரம், 11ம் திருமுறை பன்னிருவர் அருளிய 40 நூல்கள், 12ம் திருமுறை சேக்கிழாரின் பெரியபுராணம் ஆகும். இவை அனைத்திலும் அன்புநெறி பேசப்படுகிறது.

தேவாரங்களில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, அன்புறு சிந்தையர் ஆகி அடியவர், தாயினும் நல்ல தலைவரென்றடியார், முதலிய நூற்றுக்கணக்கான பாடல்கள் இறைவனை அன்புமயமாகக் காட்டுகின்றன. திருவாசகத்தில் அம்மையே அப்பா ஒப்பிலா மணியே, அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை, அரைசனே அன்பர்க்கு அடியனே முதலிய நூற்றுக்கணக்கான பாடல்கள் அன்புநெறியை எடுத்துக் காட்டுகின்றன. உலகப் பொதுமறையான 'திருக்குறள்' ஒரு வாழ்வியல் நூல் என்பதால் இந்து சமய இலக்கியங்களில் அது இடம்பெறவில்லை. ஆனாலும் இந்துக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவதில் சமய இலக்கியங்களைவிட அதிகளவில் பங்களிப்புச் செய்வது 'திருக்குறள்' என்றால் மிகையாகாது.

இந்நூலில் 'அன்புடைமை' ஒரு தனி அத்தியாயமாக இருந்தபோதும், நூல் முழுவதிலும் அன்புநெறி பற்றிப் பேசப்படுகிறது. இந்து சமயத்தில் அன்புநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்வதற்கு ஆதார சுருதியாக அமைந்தது திருக்குறள் எனலாம். திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், விநாயகர் புராணம் முதலிய பல புராண நூல்களும், இராமயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாச நூல்களும் இந்துக்களிடம் உள்ளன.

இவற்றில் வரும் பாத்திரங்கள் மனித விழுமியங்களின் உருவங்களாக அமைந்திருப்பது கண்கூடு. இந்துக்கள் மத்தியில் அன்புநெறியை வளர்ப்பதில் இப்புராண இதிகாசங்கள் பெரும் பங்களிப்புச் செய்திருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களும் வெறுமனே ஒரு கதையை மட்டும் சொல்லவில்லை. கதையினூடே மனித விழுமியங்களைப் பொதிந்து தருகின்றன. விஞ்ஞானத்தில் ஊறித்திளைத்த மேற்குலக நாடுகளில் சுவாமி விவேகானந்தர் புகுந்து இந்து சமயத்தின் தத்துவங்களை விளக்கி அன்பு நெறியில் மக்களை வழிநடத்துவதற்கு வழிவகுத்தது அவருடைய ஆத்மீக பலம் என்பதை யார்தான் மறுக்கமுடியும்?

இந்து சமயத்தின் அன்பு நெறிக்கு ஆன்மீகமே அடித்தளமாக உள்ளது என்பது வரலாறு. எனவே அன்பு நெறியின் அடுத்த படி ஆன்மீக நெறியாகின்றது. ஆன்மீக நெறியில் நின்று இறைவனுடன் இரண்டறக்கலப்பதை இலக்காக கொண்டதே இந்து சமயம்.

**அம்பிகைபாகன் வர்ஷன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமாயணத்தின் போற்றப்படா மாவீரன் மேகநாதன்

சிவபக்தனான இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிறந்த மூத்த புதல்வனாவான். அவன் முதல் அழுகுரல் லங்காபுரி எங்கும் இடியையும் மின்னலையும் உண்டாக்கியது. அது ஓர் ஈடு இணையற்ற மாவீரனின் பிறப்பை பறைசாற்றியதால் மேகநாதன் என பெயர் சூட்டப்பட்டான். அவன் சிறு வயதிலிருந்தே போர்க்கலையிலும் அறிவாற்றலிலும் சிறந்து விளங்கினான். மும் மூர்த்திகளின் முதன்மையான மூன்று அஸ்திரங்களான பிரம்மாஸ்திரம், வைண வஸ்திரம் மற்றும் பாசுபத அஸ்திரத்தை கொண்ட ஒரேயொரு போர்வீரனுமாவான். போர்க்கலையின் அதியுயர் பட்டமான மகாமகரதி பட்டத்தை வென்ற ஒரேயொரு மானுடன்.

1 மகாமகரதி வீரன் = 12 அதிமகரதி வீரர்கள்
1 அதிமகரதி வீரன் = 12 மகரதி வீரர்கள்
1 மகரதி வீரன் = 12 அதிரதி வீரர்கள்
1 அதிரதி வீரன் = 12 ரதி வீரர்கள்
1 ரதி வீரன் = 5000 போர் வீரர்கள்

சேச நாகனின் மகளான சுலோச்சனையை மணம் முடித்தான். இல்லற ஒழுக்கத்தில் இராமாயணத்தின் இரண்டாம் இராமன் என வர்ணிக்கப்பட்டான்.

இதிகாசங்களில் இடம்பெற்ற சில போர்வீரர்கள் பெற்ற பட்டங்கள்
மகாமகரதி - இந்திரஜித்
அதிமகரதி – கிருஷ்ணன், அனுமன்
மகரதி – கர்ணன், அர்ஜினன், இராமன், லக்குமணன், பீஷ்மர், துரோணர், வாலி, இராவணன்

ஒரு காலகட்டத்தில் இராவணனை இந்திரன் சிறைப்பிடித்து சென்ற போது இந்திரலோகம் மீது போர்தொடுத்து தனது தந்தையை மீட்டான். அப்போரில் தேவர்களின் அதிபதியான இந்திரனை வீழ்த்தி பூலோகத்தில் சிறை வைத்ததால் இந்திரஜித் எனும் பட்டத்தை பிரம்மாவிடம் இருந்து பெற்றான். கர்ணன் நட்பிற்காக போர்க்களம் புகுந்தது போலவே தன் தந்தைக்காக இராமனை எதிர்த்து நின்றான். படைத்தளபதியாகிய முதல் நாளிலேயே நாகாஸ்திரம் கொண்டு கடவுளின் அவதாரங்களாகிய இராம இலக்குமணனை மரண வாயிலிற்கு அனுப்பினான். மறுநாள் இலக்குமணனை தன் கணைகள் கொண்டு நிலைகுலையச் செய்தான். இது போதாதா அவன் மாவீரத்தை இவ்வுலகம் அறிய. ஆயுதம் கொண்டு வீழ்த்த முடியா இம் மாவீரனும் துரோகத்தால் வீழ்ந்தான்.

**அற்புதச்சந்திரன் காயத்திரன்**
பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் போக்கினிலே...

ஆலயம் செல்வது சாலவும் நன்று
ஆன்றோர் கூறினரே அன்றோருநாள் - ஆனால்
இன்றோ ஆலயம் செல்வது அத்தனை புதினங்களையும்
இடைவிடாது அளவளாவுவதற்கு இன்பமயமான சூழலிலே
இணையத்தின் பதிவேற்றத்தினை புதுப்பிக்க

பக்தனின் மனச்சுமைகளை இறக்கிய காலம் மாறி
பணத்துக்காகவே பரிகார பூஜைகளை செய்யும் பூசகர்கள்
பக்கத்து வீட்டாரின் பல வண்ணப் புடவைகள்
பரவசமாகப் பலருக்குத் தெரிவிக்கும் திருவிழா என்ற போர்வையிலே

தமிழுக்கென்ற கலாசார உடைகளை மறந்து
தமக்கு இஷ்டமான உடையினிலே ஆலய சூழலிலே
தேவார பாராயணங்கள் பட்டிமன்றங்கள் கூத்துக்கள்
தோன்றிய இடமறியாது தொலைபேசியின் போக்கினிலே நவீனமாய்

பண்பாடு பாரம்பரியங்கள் கலாசார விழுமியங்களை
பழம்பெரும் சொத்துக்களை மறக்காது
எமது சைவத்தின் பெருமையினை உலகறியச் செய்வோம்
எதிர்கால சந்ததியினருக்கு காலத்தின் போக்கினிலே...

**திலக்ஷனா சுப்பிரமணியம்,**
இணைந்த சுகாதார பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலட்சியம்

முகவரி இல்லாத மடல் எங்கும் போய் சேராது. அவ்வாறு இலட்சியம் இல்லாத மனிதன் தன் வாழ்க்கையில் வெற்றியை பெறுவதில்லை. வாழ்க்கையில் வெற்றியை பெற விரும்பும் ஒவ்வொருவருக்கும் இலட்சியம் அவசியம் என்பதனை வெற்றி பெற்றவர்களின் வரலாறுகள் தெளிவாக கூறுகின்றன. இலட்சியம் இல்லாதவரின் வாழ்க்கை தாமரை இலை தண்ணீர் போல தத்தளிப்பதாகும். வாழ்க்கையாகிய கடலில் இலட்சியம் என்ற கப்பலே நம்மை கரைசேர்க்க முடியும். அதனால் நாம் கொண்டிருக்கும் இலட்சியத்தை வைத்தே வாழ்க்கை அமையும்.

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்கிறார் வள்ளுவர். ஒரு தடாகத்தில் நீர்ப்பூக்கள் நிறைந்திருந்தன. அப்பொழுது தண்ணீரின் அளவு பத்து அடி உயரம் இருக்கும் போது பூக்களின் நீட்டமும் பத்து அடியாக இருந்தது. அதேவேளை மழைபெய்து குளம் நிரம்பிய பொழுது தண்ணீரின் அளவு உயர்வதற்கேற்ப தண்டின் நீளமும் உயர்ந்தது. இதுபோலவே நம்முடைய வாழ்க்கையில் இலட்சியத்தின் உயர்வினை பொறுத்தே நம் வெற்றியும் அமையும் என்று மேற்சொன்ன அழகான உவமையின் வாயிலாக திருவள்ளுவர் எடுத்துக் கூறுகிறார்.

வாழ்க்கை என்பது போராட்டம் தான். பைபிளும் கீதையும் கூட இவ்விதம் தான் கூறுகிறது. ஒரு செயலை செய்ய நினைக்கும் போது அதற்கு தடை ஏற்படுவது வழமை. அந்த சந்தர்ப்பத்திலும் கூட நாம் நமது இலட்சியத்தில் உறுதியை ஏற்படுத்தி எவ்வாறு நமது மனநிலையை அமைத்துக் கொள்கிறோமோ அதற்கேற்றவாறே நாம் பெறும் வெற்றியின் அளவும் இருக்கும்.

இலட்சியம் எந்த அளவு அவசியமோ அதே அளவு முயற்சியும் அவசியம். வெற்றி என்பது விடாமுயற்சி என்ற அஸ்திவாரத்தில் கட்டப்பட்டதுதான். எனவே நாம் கொண்டுள்ள இலட்சியத்தில் நம்முடைய மனம் எவ்வளவு அதிகமாக ஊன்றி இருக்கிறதோ அதற்கு ஏற்பவே வெற்றியும் நம்மை ஆட்கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே நம்பிக்கையை நெஞ்சில் வைத்து தடைகளை தகர்த்தெறிந்து நம் இலட்சியப்பயணத்தில் பயணிப்போம்.

**அ.அனுசாந்தன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் தரும் விழுப்பம்

விழுப்பம் என்றால் மேன்மை என்று பொருள்படும். விழுப்பம் தருவனவே விழுமியங்கள். அதாவது மனிதனை மேன்மையுறச் செய்பவை விழுமியங்கள். உயர்ந்த ஒழுக்கங்களே மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவன. நன்னடத்தைகள், நற்பண்புகள் என்பன மனித விழுமியங்கள் ஆகும். சத்தியம், தர்மம், அமைதி, அன்பு, அஹிம்சை முதலானவை அடிப்படை மனித விழுமியங்கள். சமாதானம், நட்பு, புரிந்துணர்வு, மனித நேயம் முதலான அனைத்தும் மனித விழுமியங்கள் ஆகும்.

சமூக நல்லிணக்கம்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. சமூகமாகக் கூடி வாழ்தலே மனித இயல்பு. மனிதனால் தனித்து வாழ முடியாது. ஒருவரில் ஒருவர் தங்கியே வாழ வேண்டும். இன்று பல்வேறு காரணிகளால் மனிதர்கள் தம்மை பிரிவினைக்குட்படுத்திவிட்டனர். இனம், மதம், நாடு என பிரிந்திருப்பினும் ஒருவரிலொருவர் தங்கியிருத்தல் என்பது தவிர்க்கமுடியாது.

கூட்டுப்பொறுப்பு

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" கூடி வாழும் வேளையில் குடும்பத்திலோ சமூகத்திலோ சில பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடலாம். அவ்வேளைகளில் அவற்றை பெரிதுபடுத்தாது விட்டுக்கொடுப்புடனும் ஒற்றுமையுடனும் செயற்படும் போது வெற்றி இலக்கை நிச்சயம் அடைய முடியும்.

சகிப்புத்தன்மை

"பொறுத்தார் பூமியாள்வார்", இது பொன்மொழி. மகாபாரத்தில் வரும் தருமர் சகிப்புத்தன்மையின் சிகரமாக விளங்குகிறார். எந்தவொரு சூழ்நிலையிலும் மனம் தளம்பாது பொறுமை காத்தல் சகிப்புத்தன்மை ஆகும். யாவரிடத்திலும் அன்பு வைத்தால் சகிப்புத்தன்மை தானே வந்து சேரும்.

**ஸ்ரீ.சரண்யா**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்ஞானமாகி...

முந்தி எழுந்து
முழு உலகிலும்
வந்த வலமாக
வளர்ந்த நெறி
வளமார்ந்த வழி

சிந்துவெளியில் சிறந்து விளங்கி
சிந்தை கவர்ந்த
சீரிய சமயம்
நேரிய வழி

வித் அடிகொண்டு வேதமாய் எழுந்து
சத்து சித்து
ஆனந்தமான
தத்வார்த்தமான
பரப்பிரம்மம்
புத்தியில் பரிந்து கொண்ட
புண்ணிய சமயம்

ஆகமாகி அருகணையும்
ஆண்டவனின்
சாகசம் சொல்லும்
அருஞ்சமயம்
திருநெறி

விதையாகி வித்தையாகி
விருட்சமாகி
விழுதுகள் பரப்பி
விரிந்த சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதையாகி
சத்தியமாகி
சரித்திரம்கண்ட
சாத்துவிக சமயம்

கதையாகி
காவியமாகி காலமெல்லாம்
கதிரவனென
உருவாகி
உதயமாகி
ஔிர்கின்ற சமயம்

அறிவியலான சமயம்
ஆரோக்கிய வழிகாட்டும் சமயம்
பொறிவழி செல்லா
அறிவாலடக்கும் ஆன்மீக நெறி

அன்புநெறி ஆனந்தவழி
இன்பம் இலங்கு நெறி
ஈகையின் பயன்
ஈடேற்றமே எனும் இறைநெறி

மாதா பிதா குரு தெய்வம் போற்றும் நெறி
ஆதாரமாக புருடார்த்தம் பேணும் வழி
சித்தசுத்தி முத்திக்கு முன்னிற்கும்
அன்புநெறிஆன்ம ஈடேற்றம்
வேதமார்க்கம் வீடுபேறு

நன்நெறியாதலின் நானிலம் போற்றுதும் சன்மார்க்க நெறிதரும்
சாந்தி சமாதானம்
இந்து சமயமே சிறந்த சமயமே

**கி.தசாங்கி**

கால்நடை வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய நன்நெறிகள்

சமயம் என்பது மானிட சமுதாயத்தை நல்வழியில் வாழ வழிகாட்டுவதாகும். உலகில் பல மதங்கள் இருந்தாலும் இவை அனைத்தும் போதிப்பது ஒற்றுமை, அன்பு. இரக்கம், கருணை போன்ற மனித நல்லொழுக்கங்களைத் தான். சமயம் பற்றிக் காந்தியடிகள் குறிப்பிடுகையில் சமயம் இல்லாமல் மனிதன் உயிர்வாழ முடியாது"என உறுதியாகக் கூறியுள்ளார். அந்தளவிற்கு மனித வாழ்வில் சமயம் முக்கியம் பெறுகிறது. சமயங்கள் இடையே சடங்குகள், வழிபாட்டு முறைகள் மாறுபட்டாலும் அடிப்படை சமயக்கொள்கைகள் ஒன்றே எனக் கூறலாம். அவ்வகையில் சமயக்கருத்துக்களில் கூறப்படும் நல்லவற்றை மட்டும் எடுத்து அதன்படி வாழ்ந்தால் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழமுடியும்.

அனைத்து சமயங்களும் அன்பையும், கருணையையும், நோக்கமாகக் கொண்டது. அவ்வகையில் இந்துமதம் பற்றிய கருத்தில்"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்ற திருமூலரின் கருத்துப்படி "அன்பே சிவம்"என்ற வாசகமே சைவசமயத்தின் ஆணிவேர். இந்து மதத்தின் முதல் தோன்றலானது வரலாற்றுக் கூற்றுப்படி கி.மு. 1900 முதல் கி.மு. 1400 வரையான காலப்பகுதியாகும். இதற்கு அமைவான சான்றுகளாக 500 ஆண்டுகளிற்கு முன் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் சிவனின் உருவ அமைப்பு கொண்ட சிலைகள், ஓவியங்கள் ஆதாரமாக உள்ளது என ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்து மதத்திற்கு "சனாதன தர்மம்" என வேறு பெயர் உள்ளது. இதன் பொருள் "அழிவில்லாத அறம்" என்பதாகும். அதாவது அறவழி நின்று வாழ்வது. மனிதர்கள் நன்னெறி நின்று வாழும்போது தான் அவன் மனிதனாகவே கணிக்கப்படுவான். நன்கு ஆராய்ந்து பார்த்தால் மனிதராய்ப் பிறப்பது நல்வழி நின்று வாழ்ந்து, இன்ப துன்பங்களை கடந்து, சுகம், கஸ்டங்களை அனுபவித்து, எதிர்கால சந்ததியினருக்கு நல்வழிகாட்டி இறுதியில் இறைவனை அடைவதாகவே உள்ளது. ஆகவே மனிதரின் நோக்கம் நல்வழி. வாழ்ந்து இறைவனை அடைய வேண்டும் என்பதுதான். ஆனால் இன்றைய சமுகத்தினர் நவீன வளர்ச்சியில் இந்து சமய பண்பாட்டு பழக்கவழக்கங்கள் மாற்றமடைந்து கொண்டுள்ளது. ஆகவே இந்து சமயத்தில் உள்ள நல்நெறிமுறைகளை அனைவரும் கடைப்பிடிக்க வைக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்நெறிமுறைகள் அனைத்தும் இணையும் போது மனிதன் வாழ்வில் சலனமில்லாத மேம்பாட்டை அடைய முடியும். வேதங்கள், உபநிஷத்துவங்கள் கற்றுத்தான் நல்வழிநின்று இறைவனை அடைய வேண்டும் என்பதில்லை. வெளிவேஷம் இல்லாத தூய்மையான அன்பிலும் கருணையிலும் இறைவனை அடையலாம். நல்வழி வாழலாம். இதற்கான சில வழிகளாக இந்து சமயத்தில் இவை கூறப்பட்டுள்ளது.

உலகில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்புடன் இருக்க வேண்டும். கருணையைக் கைவிடக்கூடாது. இதை வலியுறுத்தவே, “அன்பே சிவம், அதுவே நலம்” என்றனர்.

*பொறுமை மற்றும் எதையும் சகித்துக் கொள்ளும் மன உறுதி வேண்டும்.

*மற்றவர்களை நினைத்துப் பொறாமைப்படக்கூடாது.

*உடல். மனம். செயலில் எப்போதும் தூய்மையுடன் இருத்தல் வேண்டும்.

*தன் முனைப்பின் காரணமாகவும், பேராசை காரணமாகவும் எழக்கூடிய வலி மிகுந்த உழைப்பு வேண்டும்.

*எப்போதும் கலகலப்பாக இருக்க வேண்டும். இறுக்கமற்று இருக்க வேண்டும்.

*எப்போதும் நல்ல நடத்தையுடன் இருக்க வேண்டும். தாராள மனதுடன் இருப்பது சிறந்தது.

இந்து சமயம் மனிதனிற்கு முழுமையான சுதந்திரத்தைக் கொடுத்துள்ளது என்பதனாலேயே வழிபாடுகள் மனிதனின் வாழ்வியலுடன் இணைந்த எளிமையான முறைகளாக உள்ளது. மற்றும் கதைகள் புராணங்கள் அனைத்தும் மனித வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையவையாகக் கூறி நல்வழிப்படுத்தியுள்ளனர். மற்றும் சமய நிகழ்வுகள் அனைவரும் சமன் எனும் கருத்தையும் சமூக ஒற்றுமையையும் ஏற்படுத்துகிறது. வாழ்வில் எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் “கடவுள் எம்மை வழிநடத்துவார்”என்று நம்பிக்கையிலேயே பலர் வாழ்கின்றனர். இறைசிந்தனை தரக்கூடிய புராணங்கள், இதிகாசங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடிய பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மை முழுமையாக இறைவனிடம் ஒப்படைக்கச் செய்யும். இது இந்துசமயத்தில் உள்ளசிறப்பு எனக் கூறலாம்.

இந்து தர்மத்தால் எம் வாழ்வை மேம்படுத்த சில கடமைகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. தினமும் சூரியன் உதிப்பதற்கு முன்பு படுக்கையில் இருந்து எழ வேண்டும். காலையில் நீராடி தூய ஆடை அணிந்ததும் தவறாமல் இறை வழிபாடு செய்ய வேண்டும். காலை. மாலை இரு நேரமும் நெய் விளக்கேற்றி நைவேத்தியம் படைத்து வழிபாடு செய்வது மிகவும் நல்லது. நேரம் இருப்பவர்கள் உரிய மந்திரங்கள் சொல்லி வழிபடுங்கள். நெற்றியில் திருநீறு, குங்குமம் அணியாமல் இருக்கக் கூடாது. தினமும் புராண இதிகாச தேவார திவ்ய பிரபந்தம் உள்ளிட்ட இடத்தில் தினமும் தியானம் பழக வேண்டும். ஆலயங்களில் நடத்தப்படும் பஜனை, சத்சங்கம், கதாகாலட்சேபம், சமய சொற்பொழிவுகளைச் சென்று கேட்க வேண்டும். வீட்டில் நம் கண்ணுக்கு அடிக்கடி படும் இடத்தில் "ஓம்"படத்தை மாட்டி வைக்கவும். விரத நாட்கள், பண்டிகை தினங்களை பொழுதுபோக்கு நாட்களாகக் கருதாமல் ஐதீகத்தை உணர்ந்து ஆத்மார்த்தமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவை தவிர இன்னும் நிறைய இந்துதர்மக் கோட்பாடுகள் உள்ளன. அவற்றை சரியான முறையில் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இந்து சமயத்தில் அதிகமான மூட நம்பிக்கைகளும் உள்ளன. இறைவன் என்பவர் யார், அவர் எதை எதிர்பார்ப்பார்? எதில் இருப்பார், என்ற சரியான விளக்கம் இருந்தால் மூடநம்பிக்கை வளர்வதைத் தடுக்கலாம். அதற்கு இந்து சமயத்தின் தன்மை சிறப்புகளை இக்காலத்தினர் உணர வேண்டும்.

எமது முன்னோர்கள் இறைவழிபாட்டின் தன்மை உணர்ந்து நல்வழி நின்று சமூகத்திற்கு பல விடயங்களைக் கூறியதாலேயே இன்று அனைவரும் மனிதத் தன்மையுடன் உள்ளோம். தற்போது இறைசிந்தனை, நன்னெறிகள் அனைத்தும் நவீன வளர்ச்சியில் காணாமல் ஆக்கப்படுமாயின் எதிர்காலம் மிகவும் மோசமான நிலை ஏற்படக் கூடும். மனதை ஒருநிலைப்படுத்தவும், மனத்தூய்மை, சமூக ஒற்றுமை உயிர்களிடத்தே அன்பு ,அனைவரையும் சமமாக பார்க்கும் எண்ணம் இவை தான். இறைவனை அடைய வழி, என்பதனை புரிந்து கொண்டு பலநூறு ஆண்டு பழமையான இந்து சமயத்தின் தன்மையை உணர்ந்து அதை சரியான முறையில் பின்பற்றி வாழ்வில் "மனிதருள் மாணிக்கமாய் வாழலாம்."

**ஹ.அஜந்தன்**

காஸ்நடை வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம்

அனைத்து மதங்களிலும், பல்வேறு காவியங்கள் நூல்களிலும் கூறப்படும் அனைத்து அறக் கருத்துக்களையும் "அன்பே சிவம்" என்று ஒற்றை வாரத்தையில் கூறிய சிறப்புவாய்ந்த, தொனமையான மதம் இந்து சமயமே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அனைவரிடமும் அன்பு கொள்ளுமிடத்து பொறாமை, பொய், களவு, இகழ்தல் போன்ற தீய எண்ணங்கள் அழிந்து மனிதன் தூய்மையானவனாகின்றான். இதுவே இந்து சமயத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். சுலபமாக ஒட்டுமொத்த பார்வை வேண்டுங்கால் பெருவாரியான இந்துக்கள் நான்கு அடிப்படை நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்கின்றனர் கர்மம், மறுபிறவி, எங்கும் தங்கும் தெய்வீகம் மற்றும் தர்மம். இந்த நான்கு நம்பிக்கைக் கோட்பாட்டைப் பின்பற்றி வாழும் ஒருவரை நாம் இந்து என அழைக்க முடியும். கர்மம் என்பது காரியம் அல்லது செயல் எனப் பொருள்படும். மானுடன் நல்லதை விதைத்தால் நல்லது கிட்டும். தீயதை விதைத்தால் தீயது கிட்டும். மறுபிறவி என்பது சாவைப் பற்றிய பயத்தை நீக்குவதற்காகவும் ஆறுதல் கூறாகவும் இருந்து வருகின்றது. எங்கும் தங்கும் தெய்வீகம் என்பதால் கருதப்படுவது, எண்ணிலடங்கா தோற்றங்களை உடைய கடவுள் ஒவ்வொரு அணுவிலும் வியாபித்து உள்ளதை உணர்வதாகும். தர்மம் என்பதாவது கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தபோது, அதற்கு ஒரு நெறியையும் தோற்றத்தையும் ஆளுகின்ற சட்டங்களையும் வழங்கியுள்ளார். இதுவே கடவுளின் தெய்வீக சட்டம் ஆகும்.

இந்து மதம் தனது போதனைகளும் பயிற்சிகளும் காலத்தால் 8000 ஆண்டு மற்றும் அதற்கு மேலும் வழக்கத்தில் உள்ளதெனப் பெருமை கொள்கின்றது. இப்பெருமையை இக்காலம் வரை எடுத்து வர உதவியவை இந்து மறைநூல்களாகும். வியக்கத்தகு வகையில் அதிகமான மறை நூல்களை இந்து மதம் பெருமையுடன் கொண்டுள்ளது. அதி உயர் புனிதமும் மதிப்பும் உடையவை வேதமும் ஆகமங்களும் ஆகும். இவை இரண்டும் புனிதமான ஆழமான நூல்கள் கடவுளாலேயே ஞானம் பெற்ற முனிவர்களுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வெளிப்படுத்தப்பட்டன. வேதங்கள் பொது மறை எனவும் ஆகமங்கள் சிறப்பு எனவும் சொல்லப்படுகின்றது. ஆகமங்கள் நேரடியாக வழிபாட்டு விதிகள் யோகங்கள், மந்திரங்கள் தந்திரம், கோவில் கட்டுமானம் ஆகியன பற்றி நுணுக்கமான தெளிவுரைகளைக் கூறுகின்றன. வேதங்களின் மிகவும் பரவலாக அறியப்பட்ட பக்தி உபநிஷதம் ஆகும். இதிலிருந்தே மற்றதின் அடிப்படைக் கோட்பாடு கிடைக்கின்றது. இந்து மறை நூல்களை வாழ்நாள் வழிகாட்டியாகவும் ஆறுதலாகவும் தழுவியிருக்கும் செயல் ஒருவர் இந்து என்பதற்கு தெளிவான அறிகுறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தர்மத்தை பின்பற்றி கோட்பாடுமிக்க, ஆக்கும்திறன் வாய்ந்த வாழ்க்கை வாழ வேண்டும்" என்ற ஆழமான இச்சை இந்து வாழ்க்கைப் பாதையில் காணப்படுகின்றது. பின்பற்றுபவர்களிடையே உண்மையாயிருப்பது. விசுவாசம், மனநிறைவு போன்ற நற்பண்புகள் விதைக்கப்படுகின்றன. கடவுளுக்கும் மனிதகுலத்துக்கும் ஆன தன்னலமற்ற காரியம் சேவையென அறியப்படுகின்றது. இது ஆணவத்தை மென்மையாக்கி தெய்வீகத்திடம் செல்லும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. தானம், மனிதாபிமானக் காரியங்கள் பலவற்றின் மூலமாக வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக அடுத்தவருக்கு உணவளிக்கும் அன்னதானம். அதனையே 'தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்' என இந்து மதம் கூறுகின்றது.

ஒரு வேளை இந்து மதத்தின் மிகவும் புத்தெழுச்சியூட்டும் பாங்கு என்ன எனும் கேள்வி எழுந்தால், அதன் திறந்த சிந்தனையும் சுதந்திரப் போக்கை ஊக்குவிப்பதுமே எனலாம். மறைநூல்களும். குருமார்களும் பின்பற்றுபவர்களை உண்மையைப் பற்றிக் கேள்வி கேட்கவும் ஆராயவும் ஊக்குவிக்கின்றன.

இந்து மதம் உறுதிக் கொள்வது யாதெனில், மத அனுபவங்களால் பிற தெய்வ வெளிப்பாடு நிச்சயம் வேறுபடும். அனைத்து நம்பிக்கை வகைகளும் ஏற்றுக்கொள்ளப்படும், ஒரே குறியை நோக்கி ஒவ்வொருவனும் தன்னுடைய பாதையில் வழிகாட்டப்படுகின்றான். இவையே இந்து மதத்தின் சில மையப் பண்புக்கூறுகள். இவற்றால் தான் இந்து மதம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

**ந.சோபிக்கா**

கால்நடை வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணங்கள் விளம்பிடும் சிவனவனின் மகிமை

ஆங்காங்கே அலைப்பாய்ந்து, நிலைக் கொள்ளாது நின்றிடும் மனித மனத்தையும், ஐம்புலன்களையும் ஒரு நிலைப்படுத்தி, இறையருள் பெற்றிடும் நிமித்தம், இறையன்போடு முழுநாளும் பரம்பொருளிடம் ஒடுங்கிடும் திருநாள் தனை பொதுவில் சிவராத்திரி என்றிடுவர். பரம்பொருளாம் சிவனுக்காக எடுத்திடும் விரதங்கள் எத்தனை எத்தனையோ இருப்பினும், மாசி மாதத்து தேய்ப்பிறை பதினான்காம் நாள் கிருஷ்ண பட்ச சதுர்த்தசியில் எம்மவர்களால் எடுத்தாளப்படும் சிவராத்திரி விரதமே அதிசிறப்பு வாய்ந்ததாகும்.

சிவராத்திரி எனும் பதத்தின் பதவிளக்கப்படி பார்த்தால், ராத்திரி என்பது இருள் காலத்தைக் குறித்திடும். இந்நிலை தனை இறைவனவன் உலகம் முழுவதையும் ஒடுக்கிடும் ஊழிக்காலம் என்றும் உரைத்திடலாம். உலக உயிர்கள் தொடக்கம் பஞ்ச பூதங்கள் வரை அனைத்தும் செயலற்றுக் கிடக்கையில், பரம்பொருளவன் மட்டும் தனித்து நின்று, ஊழிக்காலம் முடிந்ததும் ஒடுங்கிய உலகதனை உருவாக்கிட வேண்டி, சோதி வடிவினனாய் தனை மாற்றி, படைத்தல், காத்தலுக்கென முறையே பிரம்மா , விஷ்ணுவை தோற்றுவித்த நாள் என சிவராத்திரி பற்றி சிறப்புற எடுத்துரைக்கப்படுகிறது.

இத்தகையதாய் சிவனவனின் பரிபூரண அருளைப் பெற்றிடும் சிவராத்திரி எனும் நாளின் தோற்றுவாய்ப் பற்றி புராண, இதிகாச ஐதீகங்களில் பல கதைகள் எடுத்தாளப்பட்டுள்ளன. அவ்வாறு எடுத்தாளப்பட்ட கதைகளில் இன்றுவரையிலும் பேசுபொருளாய் அமைந்திட்ட கதைகளை நோக்கிடுவோமேயானால்,

குறிப்பாய், அப்பர் சுவாமிகள் தன்னுடைய தேவார அடிகளின் வாயிலாக, " செங்கண்ணனும், பிரம்மாவும் தன்னுள்ளே எங்கும் தேடி திருச்சிலவும் காணகிலார் இங்கிட்டு இருக்கிறேன் லிங்கத்தார் தோன்றினார்" என்று கூறுவதானது பொதுவில் நாம் அனைவரும் அறிந்திட்ட அடி முடி தேடிய கதையையேயாகும்.

ஆம், முன்னொரு காலத்தில் படைக்கும் கடவுளாம் பிரம்மனுக்கும், காக்கும் கடவுளாம் விஷ்ணுவுக்கும் "தம்மில் யார் பெரியவர் ? தம்மில் யார் சிறந்தவர்?" என்ற வாதமானது எழப்பெற்றதாம். இவர்களிருவரது மோதலால் உலகமானது நிலைக்கொள்ளாது, உலக உயிர்கள் பாதித்திடுமோ என அச்சம் கொண்ட தேவர்கள் பரம்பொருளாம் சிவனிடம் சரணடைந்து, இப்புவிதனையும், புவி வாழ் உயிரினங்களையும் காத்திடும் படி வேண்டினர். தேவர்களின் வேண்டுதலையேற்ற நீலகண்டன் பிரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் இடையில் பெரும் நெருப்புப் பிழம்பாய் தோன்றி, அவர்களை அயரவைத்ததோடு மட்டுமல்லாமல் "இப்பிழம்பின் அடியையும், முடியையும் எவர் முதலில் காண்கிராரோ அவரே பெரியவர்" என்று காத்தல் மற்றும் படைத்தல் கடவுளர்களுக்கிடையில் போட்டி தனை உருவாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே பெருமாள் வராக வடிவம் கொண்டு நிலத்தை அகழ்ந்து, அடி காணப் பயணித்திட, பிரம்மா அன்னப்பட்சி வடிவம் கொண்டு முடி காண, வான் நோக்கி உயரப் பறந்தார். காலங்கள் பல கடந்து அவர்களது உடலும், உள்ளமும் சோர்வடைந்தது. வராகமெனினும், அன்னப்பட்சியெனினும் பரம்பொருளின் நெருப்புச் சோதியின் அடியையும், முடியையும் காணவியலாது போக, இறுதியில் பெருமாளும், பிரம்மாவும் பரம்பொருளை துதித்திட, தேவர்கள் கை தொழ, நெருப்புப் பிழம்பில் லிங்கம், மான், மழு, அபய, வரத முத்திரைகளைத் தாங்கியவராய் எம்பெருமான் திருவருட் காட்சியளித்தார். இவ்வாறு சிவன் அச்சோதியின் நடுவே இலிங்கோட்பவராக தோன்றிய இரவே சிவராத்திரி எனப்பெயர் பெற்றது என்ற கதையானது வழிவழியாக இந்துமதத்தவரால் போற்றப்பட்டு வருகிறது.

இதுபோல் ஒரு பொழுதில், சிவபெருமானின் கண்களை விளையாட்டாகப் பொத்தினாராம் சிவனின் பத்தினி உமாதேவியார். அதனால் இவ் உலகங்கள் அனைத்துமே இருளில் மூழ்கிப் போனது. இருளில் மூழ்கிய உலகத்திற்கும், உலக உயிர்களின் அவதிக்கும் காரணம் தான் என தன் பாவம் தனைப் போக்க, உமாதேவி தவம் தனை மேற்கொண்டார். நான்கு சாமமாய் இரவெல்லாம் சிவனவனை பூஜித்தார். இதனால் மனமிறங்கிய முழுமுதற் கடவுள் "உனக்கென்ன வரம் வேண்டும்" என வினவ உமாதேவியும், "இத்தினம் தனில் எவர் ஒருவர் பயபக்தியுடன், முழு மனத்தோடு தங்களை பூஜிப்பார்களோ, அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் தந்திட வேண்டும்" என்றார். அவ் வேண்டுதலை சிவனவன் ஏற்றுக் கொண்டமையால் அந்நாள் சிவனைக் கொண்டாடிடும் சிவராத்திரியாயிற்று.

இத்தகையதாய் அடிமுடி தேடிய கதை, உமாதேவியார் தன் பாவம் நீங்கப்பெற்ற தினம் போக இன்னொரு கதையும் சிவராத்திரி வரலாற்றை அழகுற எடுத்தியம்புகிறது.

ஒரு மகாசிவராத்திரி தினம் தனில், வியாதன் எனும் நாமம் கொண்ட வேடனொருவன் தன் குடும்பம் பசியாற வேண்டி வேட்டைக்குச் சென்றான். சிவராத்திரி பற்றி அறிந்திராத அவன் நாளெல்லாம், பொழுதெல்லாம் அலைந்தும் மிருகங்கள் கிடைக்காது போகவே, தன் குடும்பத்தாரின் நிலையெண்ணி பரிதவித்து, வரும் வழியில் நீர் நிலை ஒன்றைக் கண்டு நீர் அருந்தினான்.
அப்போது, "நீரினை அருந்த நிச்சயம் ஏதேனும் மிருகம் வந்திடும்" என்ற நம்பிக்கையில், சிறிது நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு அருகிலிருந்த மரத்திலேறி உட்கார்ந்துகொண்டான். அது வில்வ மரம் என்பதும், அதன்கீழ் ஒரு சிவலிங்கம் இருப்பதும், அன்று சிவராத்திரி என்றும் அவனுக்குத் தெரியாது.

அவ்வேளைதனில் ஒரு பெண்மான் வந்து நீரருந்தவே, மானைக் கண்ட வேடன் அம்பை எடுத்து வில்லில் பூட்டினான். அது முதல் சாமம் முடிவடையும் தறுவாய். ஆக, அவனது அசைவினால் ஒரு வில்வ இலையும் சிறிது தண்ணீரும் மரத்தின் கீழிருந்த சிவலிங்கம் மீது விழுந்தன. வேடன் தன்னைக் கொல்லக் குறிப்பார்ப்பதை உணர்ந்த அப் பெண்மான், "என் குட்டிகள் என்னை ஆவலாய் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும். ஆகவே தயைக்கூர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கொல்லாதே." என்றுரைக்க, வியாதனோ, "என் குடும்பத்தாரின் பசியைப் போக்க உன்னை கொன்றிடத்தான் வேண்டும்" என்றான். அதற்கு பெண்மான் "எனில், என் குட்டிகளைப் பாதுகாப்பாய் இளையப் பெண்மானிடம், ஒப்படைத்து விட்டு வருகிறேன். எனை நம்புங்கள்" என்று கூறவே மானின் வேண்டுகோளுக்கு வேடன் இசைந்தான். மான் தன் இருப்பிடம் நோக்கி ஓடியது.

மீண்டும் வருவேனெனச் சென்ற, அந்த பெண்மானுக்காக வியாதன் காத்துக்கொண்டிருந்தான். அக்கணம் இரண்டாம் சாமம் முடிவடையும் தருணம். அப்போது

மற்றொரு பெண் மான் நீர் பருக வந்தது. அதைக் கொல்ல வில்லில் அம்பைப்பூட்டினான் வேடன். அந்த அசைவில் ஒரு வில்வ இலையும், தண்ணீர்த்துளியும் லிங்கத்தின் மீது விழுந்தன. அவ்வோசையைக் கேட்டு நிமிர்ந்த மான் தன் உயிரெடுத்திட வேடன் வைத்த குறியைக் கண்டு, "என்னைக் கொல்லாதே என் மூத்தாளை தேடியே இங்கே வந்தேன். அவளது குட்டிகளும் என் பொறுப்பில் தான் உள்ளன. ஆதலால் அவளிடம் குட்டிகளை ஒப்படைத்துவிட்டு வருகிறேன்" என்றுரைத்தது. வேடன் அதற்கும் அனுமதியளித்து காத்திருந்தான்.

இப்போது மூன்றாம் சாமம் முடிவடையும் தருணத்தில் ஒரு ஆண் மான் நீர் அருந்த வரவே அதற்கும் குறி வைத்தான் வேடன். அந்நிலையில்,ஒரு வில்வ இலையும், தண்ணீர்த்துளியும் லிங்கத்தின் மீது விழுந்தன. தன்னைப் பார்த்து குறிவைத்த வேடனிடம் அந்த ஆண் மான் "என் மனைவிகளையும் , குட்டிகளையும் பாதுகாப்பான இடம் தனில் ஒப்படைத்து விட்டு வருகிறேன்" என்றுக்கூற, வேடனும் அனுமதியளித்தான்.

வேடனிடம் அனுமதி வாங்கி இருப்பிடம் சென்ற மான்கள் நிகழ்ந்த நிகழ்வதனை தமக்கிடையில் எடுத்துரைத்து "யார் செல்வது" என்ற வாக்குவாதத்தை ஏற்படுத்தவே இறுதியில் "சத்தியத்தைக் காப்பாற்றிட மூவருமே செல்லலாம்" என வேடனை நோக்கிச் செல்ல முடிவெடுக்கவே, பெற்றோர்களைத் தொடர்ந்து குட்டிகளும் தம்முயிர் பற்றி பொருட்படுத்தாது செல்ல ஆரம்பித்தன. இப்போது நான்காம் சாமம் முடிவடையும் தறுவாய். ஆக கூட்டமாய் வந்த மான்களைக் கண்ட வேடன் வில்லை எடுத்திடவே, அப்போது அந்த அசைவினால், ஒரு வில்வ இலையும், தண்ணீர்த்துளியும் லிங்கத்தின் மீது மீண்டும் விழுந்தன.

ஆக தன்னையறியாது, சிவலிங்கத்திற்கு நான்கு சாமக்காலப் பூஜைகளையும், நித்திரையின்றி வியாதன் முடித்த காரணத்தால் அவனுக்கு ஞானம் பிறந்தது. அவ்வேளையில் வேடன் இருப்பிடம் வந்த மான்கள் "கொடுத்த சத்தியத்தை காக்க நாம் வந்தோம். எங்களைக் கொன்று குடும்பத்தோடு பசியாறிக் கொள்ளுங்கள்" என்றன.

சிவ பூஜையால் ஞானம் பெற்ற வியாதனோ, ஐந்தறிவு விலங்குகளிடம் உள்ள பண்பானது , ஆறறிவு கொண்ட தன்னிடத்தே இல்லாமற் போயிற்று என, தலைகுனிந்து மான்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் தவறாத குணத்திற்கு அடிபணிந்தான். அப்போது அங்கே தோன்றிய சிவன் "உன்னையறியாமல் சிவ பூஜையை நீ செய்து இருப்பினும் சிவபலன் முழுதும் உனக்கானதாகும். உனக்கு வேண்டும் வரமதனைக் கேள்" என்று கூற வியாதனோ "தன் பாவங்களைப் போக்கியருள" வேண்டினான். அதனால் இறைவன் "நீ இனி குகன் எனும் நாமம் கொள்வாய். அத்தோடு இப்பூவலகில் நாராயணன் இராமவதாரம் எடுத்திடும்போது, அவர் உன்னை தன் சகோதரராக ஏற்றுக்கொள்வார்" என்று அருள்பாலித்ததோடு சிவராத்திரி பற்றிய மகிமையையும் எடுத்துரைத்தார்.

இத்தகையதாய் சிவராத்திரியின் மகிமை தனை எடுத்துரைத்திடும் புராணக்கதைகள் ஏராளம். இதுபோல ஆறறிவு படைத்த மனிதர்களும், தெய்வ நிலையில் போற்றப்படுபவர்களும் இவ்விரதம் தனை அனுஷ்டித்து சிவபலன் பெற்றதாக வரலாறானது உரைத்திடுகிறது. இந்நாள் தனில் "பசித்திரு, விழித்திரு, தனித்திரு" எனும் அம்சங்களை பின்பற்றி விரதம் அனுஷ்டிப்போர் சிவனருளை முழுதுமாய் அடைந்திடுவர் என்பர். ஆக சிவராத்திரி அதனின் மகிமையை உணர்ந்து, இரவெல்லாம் விழித்திருந்து நான்கு சாமகாலப் பொழுதும் சிவனவனை வணங்கினால், புண்ணியத்தின் பேற்றினை பெற்றிடலாம் வாழ்வின் உயர்ந்தபட்ச அனுகூலங்களை அடைந்திடலாம் வாழ்வில் செய்திட்ட பாவங்கள் அனைத்தையும் போக்கிடலாம் உளத்தூய்மையை அடைந்திடலாம் சௌபாக்கியங்களைப் பெற்றிடலாம் ஆக, நாமும் சிவராத்திரி அதனின் மகிமை உணர்ந்து சிவனவனை போற்றிடுவோமாக.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

**கஜனி சிவராஜா**
கலைப்பீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனே என் சிந்தையுள்...

சிவனை முழுமுதற் கடவுளாக்கி
சைவ சமயம் என வேர் பதித்து
இந்து சமயம் என கிளை பரப்பி
வெந்து தணிந்த சுடலைச் சாம்பலை
அங்கமெலாம் தங்கமெனத் தான் பூசி
பிறை சந்திரனும் புனல் கங்கையும்
நெற்றிக் கண்ணில் அனல் அக்னியும்
வெற்றிக்கு எடுத்துக்காட்டாய் திரிசூலமும்
புலித்தோல் ஆடையும் மண்டையோட்டு மாலையும்
விடை வாகனமும் சடைவார் குழலும்
இடப்பாகத்தில் உமையாள் குடியிருக்க
விக்னம் தீர்க்க விநாயகனையும்
முன்வினை அறுக்க முருகனையும்
என்வினை அறுக்க அபயகரத்தையும்
தன்னகத்தே சொரூப சிரிப்பையும்
மண்ணகத்தே அடியவர்களுக்கு அருளையும்
விஸ்ணுவுடன் புணர்ந்து அரிகர ஐயப்பனையும்
மும்மூர்த்திகளில் முதல்வனாயும்
எம்மவருக்கு அரும்பெரும் சோதியாயும்
சம்பந்தருக்கு தந்தையாகி
நாவுக்கரசருக்கு ஆண்டானாகி
சுந்தரருக்கு தோழனாகி
மணிவாசகருக்குக் குருவாகி
எனக்கு மெய்நிகர் பதியுமாகி
என்னவன் சிவனவனின் சிந்தையைப் பணிகிறேன்

**தி.தினுஜன்**
பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ விழுமியங்கள்

உலகிலுள்ள எல்லா மதங்களினுடைய நோக்கிலும் சமயம் என்பது ஒரு வாழ்க்கை நெறி அல்லது வாழும் முறை எனலாம். பண்பாட்டின் ஒரு கூறாக ஒழுக்கம் அமைகிறது. சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய அறமாக ஒழுக்கமும்,அன்பு நெறியும் அமைகிறது. அன்பே சிவம் என்கிறது திருமந்திரம்.

சைவநெறியானது ஒழுங்குபடுத்தப்பட்ட கலாசார மரபுகளைப் பேணக்கூடிய ஒழுகலாறுகளை சமயம் சார்ந்த அறவாழ்க்கையாகப் போதிக்கிறது. நீதியான வாழ்க்கை முறையினை மேற்கொள்ளும் வகையில் எமது சமய நூல்கள் பல விழுமியங்களை வலியுறுத்துகின்றன. மனித வாழ்வில் எமது ஆன்மீக இலட்சியத்தை எய்துவதற்கு விழுமியங்கள் உதவுகின்றன.

1.கடமை

2.வாய்மை

3.அன்புடைமை

4.பிறரை மதித்தல்

5.ஒழுக்கமுடைமை

6.செய்ந்நன்றி மறவாமை

போன்றவை, சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்களாகும்.இவற்றுள் அன்புடைமை, வாய்மை பற்றி பார்ப்போம்.

**அன்புடைமை**

அன்பின் வழியது உயிர் நிலை... என்பது வள்ளுவர் வாக்கு. ஆகவே, மனித வாழ்வு மட்டுமின்றி உலக ஜீவராசி அனைத்தும் அன்பினை அடிப்படையாக கொண்டுள்ளன. பிற உயிர்களுக்கு அன்பு காட்டுதல், பேணுதல் என்பன அன்பே வடிவான கடவுளுக்கு பிரியமான தொண்டாக அமையும். அதன் மூலம் சமயம் வலியுறுத்தும் இலட்சியவாழ்வும் நிறைவேறும்.

எமது கடவுள் வழிபாடு அன்பினை அடிப்படையாகக் கொண்டது. அன்பு தான் சிவம். இதனால் தான் அன்பும் சிவமும் ஒன்றுதான் எனத் திருமூலர் குறிப்பிடுகிறார். உலகிலுள்ள அனைத்திலும் கடவுள் நிறைந்திருப்பதால் எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டல் அவசியமாகும். அத்துடன், மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை நாம் உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பில்லாத வாழ்வு என்புதோல் போர்த்த உடம்பு என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். “எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்...” எனத் தாயுமானவர் இறைவனை வேண்டுகிறார். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல். உயர்ந்த அறமாகும். அந்த மனோநிலை அன்பினால் உண்டாகிறது. யாவர்க்கும் உண்ணும் போது ஒரு கைப்பிடி எனத் திருமூலர் குறிப்பிடுவது அன்பினால் விளைந்த ஜீவகாருண்யத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**வாய்மை**

இந்து மதம் வலியுறுத்தும் முக்கிய அறங்களில் வாய்மை முக்கியம் பெறுகிறது. உள்ளத்தில் கோடாது உண்மையில் வாழும் வாழ்க்கை முறையே வாய்மையாகும் என அறநூல்கள் போதிக்கின்றன. வாய்மை என்பதற்கு தீமை தராத சொற்களை விளம்புதல் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்

நேர்மையாகவும் கடமை உணர்வோடும் செய்யப்படுகின்ற செயலால் மனிதரும் தெய்வமாகலாம். “உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் முன் அறியப்படும்.” என்ற சிலப்பதிகாரக் கூற்றும் நோக்கத்தக்கது. மகாத்மாகாந்தி,அரிச்சந்திரன் போன்றோர் வாய்மையே வெல்லும் என்ற இலட்சிய வாழ்விற்கு முன்னுதாரணமாக விளங்கினர். இந்து தர்மத்தில் வாய்மை, உண்மை, சத்தியம், நேர்மைய, கடைமை, பொய்யாமை ஆகிய சொற்கள் எல்லாம் ஒரு பொருளையே குறிப்பதாக உள்ளது. பொய் பேசுதல் வாய்மைக்கு இழுக்காகும். ஒருவனுடைய உள்ளத்துத் தூய்மை அவனுடைய வாய்மையால் அறியப்படும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

சமயம் காட்டும் வழியில் தான் வாழ்க்கை அமைகிறது. ஆகவே தான் மனித வாழ்க்கை விழுமியங்களால் மெருகூட்டப்படுகிறது.

**த.ரிதுர்சன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தசஷ்டி

அறுபடை ஆண்டவா அனுதினம் வேண்டவா
அருளாலே எமைக் காக்கும் வேலவா
நித்தம் உனை வேண்டவா சத்தம் கொண்டு பாடவா
மலை இறங்கி பக்தர்களை காண வா

அழகென்ற சொல்லுக்கு முருகா உந்தன்
அருளின்றி உலகிலே பொருளேது முருகா
அன்பிற்கு எல்லையோ முருகா உந்தன்
அருளுக்கு எல்லை தான் இல்லையே முருகா

நேற்றைய வாழ்வு அலங்கோலம் உந்தன்
அருள் நெஞ்சினில் கொடுத்தது சுடர் தீபம்
சேவற் கொடியானே ஆறுமுகத்தானே
உன்னை வேண்டிடும் அடியார்க்கு துயரில்லை

வாரும் என் அப்பா வந்தெனை ஆட்கொள்ளும்
சக்தியும் நீயே சகலமும் நீயே கந்தா
சிங்கார வேலனே சிவ சக்தி பாலனே
கலியுக வரதனே நரகாசூரனை அழிக்க நீ வா

**த.ரிதுர்சன்**
பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னை நன்றாக இறைவன் படைத்தனன்
## தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

அன்பே சிவம் என்பதை அழகாகத் தமிழில் சொல்லி, என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே எனப் பாடினார் திருமூலர். திருமூலருக்கு இப்பெயர் வர ஒரு காரணமுண்டு. அட்டமா சித்திகளையும் கைவரப் பெற்ற யோகியானவர், தமிழ் நாட்டிலே பொதிகை மலையில் சில காலம் தங்கியிருப்பதற்கு விரும்பி கயிலையினின்றும் புறப்பட்டார். வழியிலே காவிரிக்கரையில் பசுக்கள் கூட்டமாக கண்ணீர் வார நின்றமையைக் கண்டார். வழக்கமாக மேய்த்து வரும் மூலன் என்பவன் தான் செய்த வினையின் காரணமாக இறந்து கிடந்தான். தம்மை அன்போடு பராமரித்து வந்த மூலனது இறப்பை தாங்கமாட்டாது பசுக்கள் உணவும் உறக்கமும் இன்றி அவ்விடத்திலேயே சுற்றிச் சுழன்று திரிவதைக் கண்ணுற்ற யோகியார், அவற்றின் துயரைப் போக்க விரும்பினார். மூலன் உயிரோடு எழுந்தாலன்றி அவற்றின் துயரம் நீங்காது என உணர்ந்த யோகியார், மூலனின் உடலுக்குள் உயிர்கொடுக்க முடிவு செய்தார். தனது உடலை மறைவான இடத்தில் விட்டு, கூடுவிட்டு கூடுபாயும் சித்தின் மூலம், மூலனின் உடலினுள் புகுந்தார்.

மூலனது உடல் உயிர்பெற்று எழுந்தது. அதாவது, மூலனின் உடலில் யோகியார் எழுந்தார். மூலன் உயிர் பெற்றதாகக் கருதிய பசுக்கள் மகிழ்ச்சியோடு புல் மேய்ந்தன. மாலையானதும் தமது கன்றுகளை நினைத்து காத்தனூரை நோக்கி நடக்கத் தொடங்கின. மூலனின் உடலிலிருந்த யோகியாரும் அவற்றைத் தொடர்ந்து சென்றார்.

பசுக்கள் தங்கள் மேய்ப்பனின் வளவினுட் புகுந்தன. மூலனது உடலினுள் நின்ற யோகியார் அதனை பார்த்தபடி நின்றார். தாம் உள்ளே புகவில்லை. இதை அவதானித்த மூலனது மனைவி அவரை உள்ளே வருமாறு அழைக்கவே, யோகியார் ஒன்றும் பேசாது அவ்விடத்தைவிட்டு அகன்று, பொதுமடம் ஒன்றை அடைந்து யோகநிலையில் வீற்றிருந்தார்.

மூலனது மனைவி செய்வதறியாது மறுநாள் அதிகாலையில் அயலவரையும் அழைத்துக் கொண்டு மூலனை தேடியலைந்து அம்மடத்தை அடைந்தாள். யோகநிலையில் வீற்றிருந்த கோலத்தை கண்டு "மூலன் இனி இல்வாழ்க்கைக்குரியவன் அல்லன்" என்று கூறி அவனது மனைவிக்கு ஆறுதல் கூறி அழைத்துச் சென்றனர். நெடுநேரம் கழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக நிலையினின்றும் விடுபட்ட யோகியார், தனது உடலை வைத்த இடத்திற்குச் சென்று பார்த்த போது உடலைக் காணவில்லை. திகைத்த யோகியார் எல்லாம் இறைவன் திருவருளாகவே உணர்ந்தார். அங்கே கோயில் கொண்ட இறைவனை வணங்கி கோயிலுக்கு வெளியே மேற்குத் திசையிலிருந்த அரசமரத்தினடியில் யோகநிலையில் அமர்ந்தார். அவ்வாறே ஆண்டுக்கொரு தடவை ஒரு திருமந்திரமாக 3000 ஆண்டுகள் வாழ்ந்து 3000 திருமந்திரம் பாடினார். மூலன் எனும் உடலில் வாழ்ந்து பிறவித் துன்பம் போக்கியமையால் இப்பெயர் பெற்றார். அவற்றுள் ஒரு பாடலிலே "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற அடி வருகிறது. அதாவது தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே இறைவன் தோற்றுவித்தான் என்பதை மிகவும் தத்துரூபமாகக் கூறுகின்றார். இறை சிந்தனையே இன்றும் என்றும் மானிடம் பயன்பெறு வழியாகும். திருமூலரின் திருமந்திர மொழியும் இதுவே. எனவே மானுடர்களாகவே நாமும் திருமந்திரக் கருத்துக்களை ஏற்று அதற்கிணங்க செயற்படுவோமாக. அதன் மூலமாக எமது பிறவியை அவப்பொழுதாக்க முடியாமல் தவப்பொழுதாகக் கழிக்கமுடியும்.

**சாகித்தியா கிருபாகரன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கைலாயமும் அதன் மீதான நம்பிக்கைகளும்

சைவசமயிகளின் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் தன் தேவி பார்வதியுடனும் புத்திரர்களாகிய விநாயகர், முருகனுடனும் வாழ்ந்து வரும் இடம் கைலாயம் என இந்துக்கள் நம்புகிறார்கள். பிரம்மாவின் இருப்பிடம் சத்தியலோகம், விஷ்ணுவின் இருப்பிடம் வைகுண்டம் போல் சிவனுடைய இருப்பிடம் திருக்கைலாயம் என புராணக்கதைகளும் ஆன்மீகக்கதைகளும் கூறுகின்றன. சத்யலோகமும் வைகுண்டமும் மனிதக்கண்களுக்கு புலப்படாது என்றும் மனிதக்கண்களுக்கு புலப்படும் ஒரே தேவலோகம் கயிலாயம் எனவும் கூறப்படுகிறது.

கயிலாய மலை, கைலை மலை, கைலாச மலை, திருக்கைலாய மலை, கைலாசம் என அழைக்கப்படும் கைலாயம் இமயமலைத் தொடரில் உள்ள ஒரு புகழ்பெற்ற பர்வதம் ஆகும். இதன் உயரம் 6638மீ ஆகும். இது சீனாவின் திபெத் மாகாணத்தில் உள்ளது. இம்மலையில் இருந்துதான் சிந்து நதி, பிரம்மபுத்திரா நதி, சட்லெச்சு ஆறு மற்றும் காக்ரா ஆறும் உற்பத்தியாகின்றன. இது மிகச்சிறந்த சுற்றுலாத்தளமாக இருக்கும் அதேவேளையில் மிகவும் ஆபத்தானதாகவும் காணப்படுகிறது.

கைலாசம் எனும் பெயர் "கெலாசா" எனும் சமஸ்கிருத வார்த்தையிலிருந்து உருவானதாகும். இது படிகக்கற்கள் என பொருள்படும். இம்மலை சூரிய ஒளியில் அழகிய படிகக்கற்களைப் போலவே ஜொலிப்பதால் கைலாசம் எனப் பெயர்பெற்றது.

கைலாயமலை இந்துக்களால் மட்டுமல்லாது பொன் பௌத்தர்கள், திபெத்தியர்கள் மற்றும் சமணர்களதும் புனிதத்தலமாக விளங்குகிறது. இம்மலை ஒவ்வொரு மதத்தின்படியும் ஒவ்வொரு நம்பிக்கை கொண்டதாக இருக்கிறது. இந்து மதத்தின்படி இங்கு சிவன் வாழ்வதாகவும் அவ்வப்போது தன் மனைவி உமாதேவியாரோடு தியானம் செய்வதாகவும் அந்நேரம் மயான அமைதி நிலவுவதாகவும் அங்கு சென்று வந்தவர்கள் கூறுகின்றனர். பல இந்துசமயப் பிரிவுகள் இம்மலையை ஆன்மாக்கள் இறுதியில் சென்றடையும் சுவர்க்கம் என கருதுகின்றனர். கைலை மலையை ஒரு மிகப்பெரிய சிவலிங்கமாகக் கண்ட பக்தர்கள் அநேகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் சிவன் தனக்கென்னவெல்லாம் தெரியுமோ அதை சக்தி வடிவில் கைலையில் சேர்த்துவைத்திருப்பதாகக் கூறுகின்றனர். யோகமுறையில் சிவன்தான் முதல்யோகியாகப் பார்க்கப்படுகின்றார். அவர் ஆதியோகியாக அழைக்கப்படுகின்றார். அவரே முதல்குரு. முதல்முறையாக அவரே தனது ஏழு சீடர்களுக்கு யோகவிஞ்ஞானத்தை பகிர்ந்தார். அவ்வேழு சீடர்களும் சப்தரிஷிகள் என அழைக்கப்பட்டனர். சிவனே உலகின் மிகப்பெரும் ஞானி. அவரைத்தேடும் போது மலையைக் குடைந்தோ கற்களைத் தோண்டியோ காணமுடியாது. அவர் தனக்குத்தெரிந்த ஞானஅறிவுகளை கைலையில் சேர்த்து வைத்துள்ளார் என்றும் யோகிகள் கூறுகிறார்கள். சமணர்கள் கைலைமலையை மேருமலை என்று அழைக்கின்றனர். இங்குதான் முதல் ஜைன தீர்த்தங்கரான "ரிஷிபானந்தா" மோட்சம் அடைந்ததாக அவர்கள் நம்புகின்றனர்.

கைலாயம் தொடர்பான பௌத்தர்களின் நம்பிக்கையை நோக்கினால் அவர்கள் கைலாசத்தை உயிர்நிலையின் அச்சாணியாகக் கருதுகின்றனர். கி.பி 7ம் நூற்றாண்டில் புத்தமதம் நன்கு பரவியிருந்த போது புத்தசக்ரசம்வாரா இருந்தார் என்று நம்பப்படுகிறது. மேலும் உள்ளூர் மதமாகிய போன் என்பவர்கள் அவர்களது கடவுள் வாழ்ந்த இடமாக கைலாயத்தை கருதுகின்றனர்.

இந்துக்களின் முக்கிய வழிபாட்டுத்தலமாகத் திகழும் கைலை திருநொடித்தான்மலை எனவும் அழைக்கப்படுகின்றது. இத்தலத்தின் தீர்த்தமாக மானசரோவரம் ஏரியும் சிந்துநதியும் கொள்ளப்படுகிறது. மானசரோவர் ஏரி உலகிலேயே மிகவும் உயரத்திலுள்ள நன்னீர் ஏரியாகும். இது பிரம்மதேவரால் உருவாக்கப்பட்டதாக ஆன்மீகவாதிகளால் நம்பப்படுகிறது. பாலையும் நீரையும் தனித்தனியாகப் பிரிக்கும் அன்னப்பறவைகளின் வாழ்விடமாகவும் இது காணப்படுவதாக நம்பப்படுகிறது. மேலும் முனிவர்களும் தேவர்களும் பிரம்மமுகூர்த்தத்தில் இங்கு சிவபெருமானொடு சேர்ந்து நீராடுவதாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது. கைலாயத்திற்கு மிக அருகில் இருக்கும் இவ்வேரியில் நீராடிச் செல்வதால் பக்தர்கள் முக்தியடைவார்கள் என்றும் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானசரோவர் ஏரிக்கு அருகில் "இராட்சதலம்" எனும் நீர் ஏரி ஒன்றும் உண்டு. இது மிகவும் உப்புத்தன்மை கொண்டதாக காணப்படுகிறது. இந்த ஏரியில் இராவணன் தவம் செய்ததாகவும் அதனாலேயே இது உப்பாக மாறியதாகவும் சொல்லப்படுகிறது.

இதுமட்டுமல்லாது தன் தாய் வழிபடுவதற்காக இராவணன் கைலை மலையை பெயர்க்க முற்பட்டதாகவும் அப்போது கோபம்கொண்ட சிவபெருமான் தன் கால்பெருவிரலால் மலையை அழுத்த இராவணன் அதன்கீழ் அகப்பட்டதாகவும் பின் தன் தவறை உணர்ந்து தன் தலையொன்றை கொய்து சாமகானம் வாசித்து சிவனை வழிபட்டு வரங்கள் பெற்றதாகவும் கதைகள் உண்டு.

உலகில் பலபகுதிகளில் இருந்தும் வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கானோர் கைலாய யாத்திரையை மேற்கொள்கின்றனர். இது பல்லாண்டு காலமாக நிகழ்ந்து வரும் ஒரு மரபாக கருதப்படுகிறது. பலமதத்தவரினதும் புனிதத்தலமாக இது விளங்குவதால் பல மதத்தினரும் இங்கு வருகின்றனர். பொம்பா எனப்படும் பொன் பௌத்தத்தினர் திபெத்தின் ஆதிமதத்தினர் ஆகும். இந்துக்கள் கைலை மலையை வலமாக சுற்றும் போது இவர்கள் இடமாக வலம் வருகின்றனர். 52கி.மீ நீளம் கொண்ட இக் கிரிவலம் பாதையில் நடந்து மலையைச் சுற்றுவது யாத்திரீகர்களின் ஒரு முக்கிய கடமையாக கருதப்படுகிறது.

இந்த மலையை சுற்றி வரும்போது இரண்டே இரண்டு இடங்களில் தான் இதன் அற்புதக்காட்சியை காணமுடியும். சூரியஒளியில் பிரதிபலிக்கும் இம்மலையின் காட்சி சுகு, ஜெய்தி எனும் இரு இடங்களிலேயே காணலாம். கைலாயம் செல்லும் அனைவருக்கும் இதுபோன்ற காட்சி தென்படுவதில்லை. அதனால் இதை அரிதிலும் அரிய காட்சி என்றும் கௌரிசங்கர் காட்சி என்றும் அழைக்கின்றனர்.

இதுவரை கைலாயமலையில் யாரும் ஏறியது இல்லை. இது பல மதத்தவரின் புனிதத்தலமாக காணப்படுவதால் மலையேற அனுமதியும் கிடையாது. 1962 ஆம் ஆண்டு ""க்ரட்லஜ்" என்பவர் இம்மலையை வடமுகமாக ஏற முற்பட்டபோது அதன் உயரம் 6000 அடிக்கு செங்குத்தாக இருந்ததால் அம்முயற்சியை கைவிட்டார். 1936 ஆம் ஆண்டு "ஹொர்பர்ட் டைச்சி" என்பவர் கயிலை மலையில் ஏற முற்பட்ட போது அங்குள்ள மலைவாழ் மக்களின் தலைவரை கைலை மலை ஏறுவது பற்றி கேட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பாவங்களற்ற மனிதனால் மட்டுமே அதை பற்றி நினைக்க முடியும்” என்று சொன்னதாக கூறப்படுகிறது.

இந்துக்களின் முக்கியதலமான இது பல நாயன்மார்களாலும் வழிபடப்பட்டு பாடல் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் தென்கைலாயம் எனும் திருக்காளத்தி கோயிலை தரிசித்த பின்பு அங்கிருந்தே கயிலாயம் நோக்கி மனதாற்கண்டு இத்தலம் மீது படிகம் பாடினார். அப்பர் பெருமான் கைலாயத்தையும் அங்கு இறைவன் வீற்றிருக்கும் அற்புதக்காட்சியையும் காணவேண்டி யாத்திரை மேற்கொண்டு, இவ்யாத்திரையின் பலனாக திருவையாற்றில் கயிலைத் தரிசனத்தையும் கண்டார். இவரின் திருக்கயிலைத் திருத்தாண்டகங்கள் “போற்றித் திருத்தாண்டகங்கள்” என்று போற்றப்படுகின்றன. சுந்தரர் இறைவன் அருளால் திருஅஞ்சைக்களத்திலிருந்து வெள்ளையானை மீதேறி கைலாயம் சென்றபோது இறைவனின் கருணையை எண்ணி “தானென முன்படைத்தான்” என்று பதிகம் பாடியவாறே சென்றார். இப்பதிகம் பின்னர் வருணனால் திருஅஞ்சைக்களத்தில் சேர்க்கப்பட்டு உலகிற்கு கிடைத்தது. இதுமட்டுமல்லாது காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள், பெருமிழலைக்குறும்பர் நாயனார், ஔவையார் ஆகியோரும் கயிலையைத் தரிசித்ததாக கூறப்படுகிறது.

இம்மலை பற்றி பல சமய நம்பிக்கைகள் காணப்பட்டாலும் நிறைய மர்மங்களும் ஒளிந்துள்ளன. அதிலும் சிவன் ருத்ரதாண்டவமாடும் போது பனிமலைச்சறுக்கல்கள் உருவாகுவதாகவும் சிவன் பார்வதி மானசரோவரில் தோன்றும் காட்சி கண்ணுக்குத் தெரிவதாகவும் பலர் கூறியுள்ளனர். ஆனால் உண்மையை கண்டறிகிறேன் என செல்பவர்கள் இறந்துவிடுவதாகவும் பரவலாக கூறப்படுகிறது.

இதுமட்டுமல்லாது ரஷ்ய நாட்டு கண்மருத்துவரும் மலையேற்ற வீரருமான டாக்டர் “எர்ன்ஸ்ட் முல்டஷேவ்” கயிலை மலை உண்மையில் மலையே இல்லை என்றும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நம்மை விட அனைத்திலும் முன்னேறிய நாகரீகத்தை சேர்ந்த மனிதர்களாலோ அல்லது வேற்றுக்கிரகவாசிகளாலோ கட்டப்பட்ட மிக ஆற்றல் வாய்ந்த பிரமிட்டுக்களாக அவை இருக்கலாம் என்கிறார். பல அமானுஷ்ய ஆற்றல்களை கொண்ட இம்மலையின் இரகசியங்களை அறிய முற்பட்டு இம்மலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய பல மலையேற்ற வீரர்கள் மீண்டும் உயிருடன் திரும்பவில்லை என இம்மலையின் ஆற்றல் பற்றி உணர்ந்தவர்கள் கூறுகின்றனர். வேறுசில மலையேற்ற வீரர்கள் இம்மலையின் ஒரு மர்மமான பகுதியை அடைந்த போது பல ஆண்டுகள் முதுமையடைந்தவர்களாக மாறியதாகவும் அதற்கு பின் ஓராண்டு காலத்தில் ஒவ்வொருவராக இறந்துவிட்டதாகவும் கூறுகின்றனர்.

இவ்வாறு கயிலையை பல அதிசயங்களும் மர்மங்களும் சூழ்ந்துள்ள போதும் அதன் மீதான யாத்திரீகர்களின் ஈர்ப்பு மிகவும் கூடுதலாகவே உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கோடை காலங்களில் கைலை செல்ல இந்திய அரசே ஏற்பாடுகளை செய்து கொடுக்கின்றது. இத்தலத்திற்கு ஒருமுறையாவது சென்று தரிசிப்பது இந்துக்களின் பிறவிப்பலனை அடைந்ததற்கு சமமாகவே கொள்ளப்படுகிறது.

**-ஜெ.பார்கவி-**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரமும் வாழ்க்கையும்

திருமந்திரம் என்பது திருமூலரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் படைப்பு ஆகும். இது மனித வாழ்க்கைக்கு மிகவும் தேவையான பல விடயங்களை கூறி நிற்கிறது. இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதால் இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு பொருத்தமான நூலாக இருக்குமா என்ற கேள்வி நம்மில் பலருக்கு எழுவதுண்டு. ஆனால், எக்காலத்திலும் மனிதன் ஒழுக்கத்தில் இருந்து தவறிச்செல்லும் பாதை ஒன்றாகவே இருக்கின்றது. எனவே இது எக்காலத்திற்கும் பொருத்தமான நூலாகும். இதில் உள்ள மூவாயிரம் பாடல்களில் இன்றைய இளம் தலைமுறைக்கு மிகவும் அவசியமான மூன்று தலைப்புக்களையும் அவற்றிற்குரிய மூன்று பாடல்களையும் பற்றி பார்ப்போம்.

**1) உடலும் இளமையும் நிலையற்றது**

வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக லாதென நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்
எச்சக லாதுநின் றிளைக்கின்ற வாறே

விளங்கிக் கொள்வது:

தேடிய சொத்துக்கள், உடல் கொண்ட இளமை ஆகியவற்றை இழந்தவனை சுடுகாட்டில் எரிக்கப்படுவதை கண்கூடாக பார்த்த மனிதர்கள் கூட செல்வத்தை தேடி அலைகின்றனர். இதனால் அவர்களின் பிறப்பே பயனற்று போகின்றது. எனவே நம் உடலானது நிலையற்ற தன்மை உடையது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

**2) கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை**

கல்லா தவரும் கருத்தறி காட்சியை
நல்லா ரெனிலருட் கண்ணான் மதித்துளோர்
கல்லாதார் உண்மைகள் றாநிற்பர் கற்றோரும்
கல்லாதவரும் இன்பம் காணுகி லாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக் கொள்வது:

கல்வி கற்காமல் இருப்பவன் கூட கடவுளை வணங்கி ஒழுக்கமாக இருப்பதன் மூலம் மன நிம்மதியாக வாழ்கிறான். ஆனாலும் பெரிய பட்டப் படிப்பை படித்தவன் கூட கர்ம வினை பற்றி அறியாமல் மனதாலும் உடலாலும் தீமைகளை செய்து துன்பத்தை அனுபவிக்கின்றான்.எனவே எவ்வளவு உயரத்தை அடைந்தாலும் ஒழுக்கத்தில் இருந்து தவறும் இடத்து மன நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியாது.

**3) மது அருந்துதல் ஆனந்தத்தை தருவதில்லை**

மயக்கும் தியங்குங்கள் வாய்மை
அழிக்கும் இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முடங்கும் நயங் கொண்ட ஞானத்து முந்தி
இயங்கும் இடையறா ஆனந்தம் என்பதே

விளங்கிக் கொள்வது:

மதுவானது குடிப்பவரின் புத்தியில் தடுமாற்றத்தையும் மனச் சஞ்சலத்தையும் ஏற்படுத்தும். உண்மை பேசுவதை தடுத்து பொய் கூற வைக்கும். இது மட்டும் அன்றி இன்பம் என நினைத்து பல இழிவான செயல்களை செய்வார்கள். ஆனால் இவ் இழிய செயல்கள் அவர்களின் இலட்சியத்தை அடைய தடையாக இருக்கும் என்பதை அவர்கள் அறிவதில்லை.

இந்த மூன்று பாடல்களும் அதன் விளக்கங்களும் எங்கள் சமூகம் பற்றிய எண்ணத்தில் சிறிதளவாவது மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் என நம்புகிறேன். திருமந்திரம் சமூக பிரச்சனையை விளக்கும் ஒரு இந்து சமய நூல். எனவே நாம் எல்லோரும் அதை கற்று பயன் பெறுவோமாக.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா"

**சி.திருமேனன்**
பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகளின் பெருமை

திருமுறைகள் இறையருள் பக்தி மேலீட்டினால் செந்தமிழ் பாடல்களால் பாடிய பாடல்களாகும். மூன்று வயதுடைய ஞானசம்பந்தக்குழந்தை முதல் அமைச்சராக இருந்த சேக்கிழார் ஈறாக இருபத்தேழு அருளாளர்களால் கசிந்து உருகிப் பாடிய பாடல்களின் தொகுப்பே பன்னிரு திருமுறைகளாகும். சோழப்பேரரசனான இராஜராஜ சோழனின் வேண்டுகோளுக்கேற்ப நம்பியாண்டார்நம்பி அவர்களால் தொகுக்கப்பட்டதாகும்.

மூன்று வயதில் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் மெய்ஞானம் கைவரப்பெற்று 'தோடுடைய செவியன்' என்று தொடங்கி முதலாம் இரண்டாம் மூன்றாம் திருமுறைகளை அருளினார். சூலை நோய் கொடுத்து ஆட்கொள்ளப்பட்ட நாவுக்கரசர் 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கி 4ஆம் 5ஆம் 6ஆம் திருமுறைகள் என அடுத்த மூன்று திருமுறைகளைத் தந்தருளினார். திருமணப்பந்தலில் இறைவனால் தடுத்தாண்ட சுந்தரருக்கு 'பித்தா' என்று அடியெடுத்துக் கொடுக்க 'பித்தா பிறை சூடி' எனத் தொடங்கிப் பாடி 7ஆம் திருமுறையைத் தந்துள்ளார். தேனூறுவாசங்கள் அறுநூறும் அமுதூற மொழிந்த மணிவாசகரின் பாடல்களை இறைவன் தமது திருக்கரத்தால் எழுதித் திருச்சிற்றம்பலமுடையார் என்று கைச்சாத்துமிட்டாரென்றால் இதன் பெருமை தான் என்னே! 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என ஆடவல்லானாகிய நடராசப்பெருமானே கெஞ்சிக் கெஞ்சிக் கேட்க மணிவாசகர் பாடி அருளியவை திருக்கோவையார் ஆகும். திருவாசகமும் திருக்கோவையாரும் 8ஆம் திருமுறையில் அடங்குகின்றன.

திருமாளிகைத்தேவர் முதலாக ஒன்பதின்மர் பாடியருளிய திருவிசைப்பாவும் சேந்தனார் பெருமான் அருளிய திருப்பல்லாண்டும் 9ஆம் திருமுறையில் வருகின்றன. தவயோகி திருமூலநாயனார் அருளிய திருமந்திரம் மூவாயிரம் 10ஆம் திருமுறையாகப் போற்றப்படுகின்றது. மதுரைச் சோமசுந்தரேஸ்வரப் பெருமான் முதலாக பன்னிருவர் பாடிய பாடல்கள் 11ஆம் திருமுறையாக விளங்குகின்றது. அடியார் பெருமை பேசும் திருத்தொண்டர் புராணம் பாட 'உலகெலாம்' என்று எம்பிரான் அடியெடுத்துக் கொடுக்க 'உலகெலாம் உணர்ந்து ஓதுதற் கரியவன்' என்று பாடிய புராணம் 12ஆம் திருமுறையாக விளங்குகின்றது

பன்னிரு திருமுறைகளும் சிவனையே முழுமுதற் கடவுளாகப் போற்றுகின்றன. இனிய தமிழில் ஓசை நயம் பொங்க பக்திச்சுவை சொட்டும் பன்னிரு திருமுறைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வேதமாகும். வேதம் ஆகமம் உபநிடதங்கள் என்பன இந்துசமயத்தத்துவ நூலாக விளங்குகின்றன. அது போல தமிழ்த் திருமுறைகளும் விளங்குகின்றன. தேவாரங்கள் வேதத்தின் சாரமாகவும் திருவாசக உபநிடதத்தின் சாரமாகவும் திருமந்திரம் ஆகமத்தின் சாரமாகவும் போற்றப்படுகின்றன.

வேத மந்திரம் சக்தி வாய்ந்தது. அது போன்ற சக்தி திருமுறைகளுக்கும் உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பட்டிருந்த கதவைத் திறக்கச் செய்தமை கல்லில் கட்டி கடலில் போட்ட போது அக்கல் தெப்பமாக மாறியமை போன்ற பல அற்புதங்கள் நிகழ திருமுறைகள் உதவின. இதன் மூலம் திருமுறைகளுக்கும் மந்திர சக்தி உண்டு என்பதை நாம் அறியலாம்.

தமிழ் திருமுறைகளின் தலையாய பேறு திருவடிப்பேறாகும். அதாவது முத்தி நிலை அடைதலாகும். வினை கெடுத்து சிவசக்தி அருளும் திறன் திருமுறைகளுக்கு உண்டு என்பதை 'திருநெறிய தமிழ் வல்லார் தொல்வினை தீர்த்தல் எளிதாமே' என்றும் 'பாடல் பத்தும் பாட வல்லார் பாவம் மறையுமே' என்றும் 'சொல்லிய செல்வர்' 'சிவபுரத்தின் உள்ளார் சிவனடி கீழ்' என்றும் அருளாளர்கள் பாடிய வாசகங்கள் சான்றாகும்.

திருமுறைகள் பண் சுமந்த பாடல்களாய் பாமரருக்கும் பழக்கமான பாட்டு வடிவில் அமைந்திருக்கின்றன. மொழிக்கு மொழி தித்திக்கும் இன்சொற்களால் அமைந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் சொரியச் செய்வது திருவருளை பதிய வைக்கும் திறனும் உண்டு. உடல் நோய், உள நோய், உயிர் நோய் ஆகிய மூவகை நோய்களையும் நீக்கும் மருந்தாக விளங்குகிறது. உணர்ந்து ஓதுபவர்களுக்கு இம்மைப் பயனும் மறுமைப் பயனும் முழுமையாகக் கிடைக்கும்.

இத்தகைய திருமுறைகளை நாள்தோறும் உணர்ந்து ஓதுதல் வேண்டும். ஆலயங்களில் திருமுறைகள் ஓதி பூவும் நீரும் இட்டு வழிபட வேண்டும். ஆலயத்தில் திருமுறைகள் ஓதும் வேளையில் பக்தி சிரத்தையுடன் அமைதியாக எழுந்து நின்று பிரார்த்திக்க வேண்டும். அதை விடுத்து அவ்வேளை பிற கருமம் செய்தல் வீண் வார்த்தை பேசுதல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது. நமது இச் செயல் அருளாளர்களை அவமதிக்கும் செயலாக்கி விடும்.

**சு.விதுர்சன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி கொலுவின் சிறப்பு

இந்து சமயத்தை பின்பற்றுகின்ற மக்களால் வெகு விமர்சையாக அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் ஒன்றாக நவராத்திரி காணப்படுகின்றது. நவராத்திரி என்பது சக்திக்காக அனுஷ்டிக்கப்படும் ஒன்பது இரவுகள் என பொருள்கொள்ளப்படுகின்றது. நவராத்திரியின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக கொலு வைத்தல் காணப்படுகிறது. கொலு என்பது தெலுங்கு சொல்லின் தமிழ் வடிவம். வீற்றிருத்தல் என்பது இதன் பொருளாகும். உலக உயிர்கள் அனைத்தும் தங்களை தெய்வ நிலைக்கு உயர்த்திக்கொள்ள பாடுபட வேண்டும் என்பதே கொலுவின் தத்துவமாகும்.

கொலு என்பது பல படிகளை கொண்ட மேடையில் பலவித பொம்மைகளை நேர்த்தியாக வைத்து அலங்கரிப்பதாகும். நவராத்திரி கொலு எப்படி வைக்க வேண்டும் என்பதில் ஒரு முறை உண்டு. கொலு மேடை 9 படிகள் கொண்டதாக அமைப்பது சிறப்பு. சிலர் 5, 7, 9, 11 என வசதிகளுக்கு ஏற்றபடி வைத்து கொலு பொம்மைகளை அலங்கரிப்பார்கள்.

முதல் படியில் புல், செடி, கொடி ஆகிய தாவர வகை பொம்மைகளை வைக்க வேண்டும். இயற்கையை பாதுகாக்க வேண்டும், அதனுடன் ஒன்றி வாழ வேண்டும் என்பதை முதல் படியில் வைக்கப்பட்டுள்ள பொம்மைகள் உணர்த்துகின்றன. இரண்டாம் படியில் சங்கால் செய்யப்பட்ட பொம்மையை வைக்க வேண்டும். நத்தை பொம்மைகளை குறிப்பாக வைக்க வேண்டும். நத்தை போல் நிதானமாக வாழ்க்கையை நடத்தி உயர்ந்த இடத்தை பிடிக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். மூன்றாம் படியில் எறும்பு, கரையான் புற்று பொம்மைகள் அவசியம் இருக்க வேண்டும். எத்தனை முறை உடைத்தாலும் கரையான் திரும்ப திரும்ப புற்றை கட்டுவது போல எத்தனை முறை கலைத்தாலும் எறும்புகள் ஒன்று சேர்ந்து சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும் என்பதை இந்த பொம்மைகள் உணர்த்தும். நான்காம் படியில் நண்டு, வண்டு போன்ற பொம்மைகள் வைக்க வேண்டும். நண்டுகளும் வண்டுகளும் ஆழமாக ஊடுருவிப் பார்க்கும் குணம் கொண்டவைகள். எந்தவொரு விஷயமாக இருந்தாலும் ஆழமாக சிந்தித்து செயலாற்றுவதை இந்த பொம்மைகள் உணர்த்தும். ஐந்தாம் படியில் மிருகங்கள், பறவைகள் உள்ளிட்ட பொம்மைகளை வைக்க வேண்டும். மிருக குணத்தை விட வேண்டும், பறவைகள் போல கூடி வாழ வேண்டும் என்பது இதன் பொருளாகும். ஆறாம் படியில் மனித பொம்மைகளை வைக்க வேண்டும். கீழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் கொடிய விலங்குகளின் கணங்களை தவிர்த்து, நல்ல விலங்குகளான பூச்சிகளிடம் இருந்தாவது நல்லதை கற்றுக்கொண்டு, மனித நேயத்துடன் வாழ வேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது. ஏழாவது படியில் முனிவர்கள் மற்றும் மகான்களின் பொம்மைகளை வைக்க வேண்டும். மனித நிலையில் ஆன்மீக சாதனைகள் செய்து மேல் நிலைக்கு உயரவேண்டும் என்பதை இது குறிக்கும். எட்டாம் படியில் தேவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் பொம்மைகளை வைக்க வேண்டும். ஆன்மீக நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து உயர்நிலையை அடைவதை இது காட்டுகின்றது. ஒன்பதாவது படியில் பிரம்மா, விஷ்ணு, சிவன் மற்றும் அவரவர்களின் தேவியர்களின் சிலைகளையும் வைக்க வேண்டும். தேவ நிலையில் இருப்பவர்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுவதை இது குறிக்கும்.

கொலு வைப்பது என்பது குழந்தைகளிடம் பொம்மைகளை காட்டி மகிழ்ச்சிப்படுத்துவது மட்டுமின்றி, இது போன்ற உயர்ந்த தத்துவங்களை அவர்களுக்கு புரியும் வகையில் பக்குவமாக எடுத்து சொல்ல வேண்டும். இதுவே நவராத்திரி கொலுவின் முக்கிய சிறப்பாகும்.

**அ.அனுசாந்தன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சாங்கம்

பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கங்கள் எனப் பொருள்படும். பஞ்சாங்கத்தினுள் வாரம், திதி, யோகம், நட்சத்திரம், கரணம் என்பன அடங்குகின்றன. ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பஞ்சாங்கம் பின்னிப் பிணைந்துள்ளது. வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிலும் பஞ்சாங்கம் பார்ப்பது ஒரு வழக்கமாக உள்ளது.

நாள் கோள் பார்த்தல், பல்லி சொல்லும் பலனை அறிதல், பல்லி விழும் பலனை அறிதல், காகம் கரையும் பலனை அறிதல் எனப் பலவற்றைப் பஞ்சாங்கம் மூலம் கணிக்கலாம். பஞ்சாங்கம் முதன்முதலாக குப்தர்களால் கணிக்கப்பட்டது. பின்னர் பலரும் பஞ்சாங்கத்தைக் கணித்துக் கொண்டனர். மூவகை பஞ்சாங்கங்கள் உள்ளன. அதாவது வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம், சித்தாங்க பஞ்சாங்கம் என்பனவாகும். இதில் வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் என்பன புழக்கத்தில் உள்ளன.

சைவசமயத்தினரிடையே பஞ்சாங்க முறைக்கேற்ப சடங்கமைத்தல் பிரதான அம்சமாகும். பஞ்சாங்கம் பார்ப்பதன் மூலம் ஒருவர் தனக்கான குற்றங்களை இனங்கண்டு பரிகாரம் செய்யவும் முடியும். வாரங்கள் ஏழு ஆகும். சோமவாரம், மங்களவாரம், புதன்வாரம், பிரஹஸ்பதிவாரம், சுக்கிரவாரம், சனிவாரம், ஞாயிறுவாரம் என்பனவாகும். திதிகள் முப்பது உள்ளன. நட்சத்திரங்கள் இருபத்தேழு உள்ளன. பூமியைச்சுற்றிவரும் சந்திரன் குறித்த நேரத்தில் அந்த இருபத்தேழு பிரிவுகளில் எந்த பிரிவில் நிற்கின்றதோ அந்தப்பிரிவுக்குரிய நட்சத்திரமே அந்த நேரத்துக்குரிய நட்சத்திரமாக கொள்ளப்படுகின்றது.

சந்திரன், ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடப்பதற்கு எடுக்கும் காலப்பகுதியே யோகம் எனப்படுகின்றது. நட்சத்திரம் இருபத்தேழு என்பதால் யோகமும் இருபத்தேழு ஆகின்றது. திதி சந்திரன் வளர்வதையும் தேய்வதையும் அடிப்படையாக கொண்டு கணிக்கப்படுகின்றது. ஒரு திதியின் அரைப்பங்கு கரணம் எனப்படுகின்றது. அதாவது ஒரு திதியின் முற்பகுதி ஒருகரணமாகவும் பிற்பகுதி மற்றொரு கரணமாகவும் கருதப்படுகின்றது. ஒரு திதிக்கு இரண்டு கரணங்கள் என்றவகையில் முப்பது திதிகளுக்கும் அறுபது கரணங்கள் அமைகின்றது. எனவே வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் எனும் ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய பஞ்சாங்க முறைப்படி நாமும் செயற்பட்டு நற்பலன்களை பெறுவோமாக...

**கி.அனிஸ்ரனா**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறம் செய்ய விரும்பு

இன்றைய சமுதாயத்தில் மனிதப் பிறவி வாழ்வாங்கு வாழ அறவழிப் பாதை இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஒரு தனி மனித வாழ்க்கைக்கு அறநெறி அல்லது ஒழுக்க நெறி என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஒழுக்க நெறியின் மாற்று வடிவமே அறநெறியாகும். நாம் விண்ணுலகத்தில் சொர்க்கப் பயனை அனுபவிக்க மண்ணுலகில் அறநெறியின் கீழ் செயற்பட வேண்டும் என்பது எம் முன்னோர்களின் வாக்கு. இதன் காரணமாகவே "அறம் செய்ய விரும்பு" என்று ஔவையார் தனது ஆத்தி சூடியில் குறிப்பிட்டுள்ளார்.

அறம் என்ற சொல்லிற்கு கடமை, நோன்பு, தர்மம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை போன்றன பொருள் கொள்ளப்படுகின்றன.மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர்.பிறவி தோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என பொருள் கொள்ளப்படுகின்றது. தனி மனித நடத்தை பெரும்பாலோரால் பின்பற்றப்பட்ட பொழுது ஒழுக்கமெனும் பண்பாக மலர்ந்து வாழ்க்கை நெறியாக மாண்புற்றது அறம் ஆகும். மக்களாய்ப் பிறந்த நாமெல்லாம் இம்மையிலும் மறுமையிலும் மேன்மை பெற்று வாழ வேண்டுமானால் அறத்தையே செய்ய வேண்டும். நாம் முற்பிறவியிலே செய்த அறத்தின் பயனாகவே மனித சரீரம் நமக்கு கிடைத்திருக்கின்றது. இப்பிறவியிலேயும் அறத்தைச் செய்வோமானால் மறுபிறப்பில் பேரின்பத்தைப் பெற முடியும். அறத்தைச் செய்வதற்கு கால வரையறையில்லை. இளமையில் செய்யக்கூடாது, முதுமையில் செய்ய வேண்டும் என்ற நியதி இல்லை.

எப்பொழுதும் எந்நேரத்திலும் அறம் செய்யலாம். இந்த நிலையில்லாத உடம்பு இருக்கும் பொழுதே நிலையான அறத்தைச் செய்து நாற் பொருட்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைந்து கொள்ள வேண்டும். அறத்தைச் செய்வதற்கு கால வரையறையில்லை. இளமையில் செய்யக்கூடாது, முதுமையில் செய்ய வேண்டும் என்ற நியதி இல்லை. எப்பொழுதும் எந்நேரத்திலும் அறம் செய்யலாம். இந்த நிலையில்லாத உடம்பு இருக்கும் பொழுதே நிலையான அறத்தைச் செய்து நாற் பொருட்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைந்து கொள்ள வேண்டும். எத்தனையோ பணம் படைத்தவர்கள் தாமும் அனுபவிக்காது பணத்தினை வீணாக்குகிறார்கள். மக்களாய்ப் பிறந்த நாமெல்லாம் இம்மையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமையிலும் மேன்மை பெற்று வாழ வேண்டுமானால் அறத்தையே செய்ய வேண்டும் என ஔவை மூதாட்டி குறிப்பிட்டுள்ளார். இந் நிலையில்லாத உடம்பு இருக்கும்போதே நிலையான அறத்தைச் செய்து துணையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்கின்றார் வள்ளுவர். இதனையே இவர் தனது குறட்பாவில் "அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை" என குறிப்பிட்டுள்ளார்.

அறம் செய்வோரிடத்து நான்கு குற்றங்கள் இருக்கக் கூடாது என்று கூறுகின்றார் வள்ளுவர். அதாவது பொறாமை, அவா, வெகுளி, இன்னாச்சொல் போன்ற நான்கையும் களைந்தவனே அறஞ் செய்யும் ஆற்றல் உடையவனாவான் என்று குறிப்பிடுகின்றார். இக்குற்றங்களை உடையோர் செய்யும் அறம் அறமாகமாட்டாது இதுவே தெய்வப் புலவரின் அறம் பற்றிய தெளிவுரையாகும். இதனை பின்வரும் குறட்பாவின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். "அழுக்கா றவா வெகுளி யின்னாச்சொன் னாங்கு மிழுகாத வியன்ற தறம்" என குறிப்பிட்டுள்ளார். மேலும் அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தின் மூலமும் அறம் பற்றி தெளிவாக குறிப்பிடுகின்றார். ஆரம்ப காலங்களில் வாழ்ந்த தமிழ் அரசர்கள் பல அறங்களையெல்லாஞ் செய்து வந்தார்கள். அன்றும் பாரத நாட்டிலே ஆலயங்கள் தோறும் ஆதீனங்கள் பல அறப்பணிகளையெல்லாம் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்று இவ் அறம் அருகி வரும் நிலையிலேயே காணப்படுகின்றது.

பொதுவாக நோக்கும் பொழுது பிறவிப்பயனை தருவதும் அழியாப் பேரின்பத்தைத் தருவதும் அறமேயாகும். இத்தகைய மேலான அறத்தை செய்து பிறவிப் பயனை அடைந்து முக்தி பெற வேண்டும். இதன் காரணமாக நம் மனித வாழ்க்கையில் அறப்பணியை மேற்க்கொண்டு முடிவில் வீடு பேற்றை அடைந்து பிறவிப்பயனில் சொர்க்கத்தை நாட நாம் எத்தனிக்க வேண்டும். அறஞ்செய்யாது பிறவியாகிய கடலை நீந்தி கரை சேர முடியாது என்பது முன்னோர் வாக்காகும்.

**செ. கஜநிலானி**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ம தத்துவம்

கர்மா அல்லது வினைப்பயன் என்பது ஒருவரின் தற்போதைய மற்றும் முன்னைய ஜென்மத்தில் செய்த செயல்களின் கூட்டுத் தொகையாகும். இது எதிர்கால இருப்பில் அவர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்றது. இந்து சமயத்தில் கர்மா என்ற சொல்லுக்கு செயல் என்பது பொதுவான பொருள். ஒவ்வொரு செயலுக்கும் எதிர்வினை ஏற்படும் என்பது உலகப் பொது வழக்கு. அது போலவே இந்து சமயத்திலும் ஒவ்வொருவரின் செயல் வினைக்கும் அதற்கேற்றால் போல் பலன் கிட்டும் என்பதைக் குறிப்பதற்கு "கர்மா"எனும் சொல் பயன்படுகின்றது. இதனை வினைப் பயன் என்றும் கூறுவர்.

"ஒருவன் எப்படி நடக்கிறானோ,
அவனும் அது போலவேயாகிறான்"என்கிறது
யசூர் வேத பிரகதாரண்ய உபநிடதம்.

கர்மா என்பது ஒருவருக்கு விதிக்கப்பட்ட தலைவிதி அல்ல. அது அவரவர் வினைப்பயன் அல்லது கர்மவினை அகும். அவரவர் கர்மம் அவரவர் செய்யும் செயலில் தான் இருக்கின்றது.நல்ல செயல்களை செய்தால் அதன் பயன் நன்மை தரும். மாறாகத் தீவினையோ, துன்பம் தருமென்பது வேதவாக்கு. ஒருவரின் அனைத்துச் செயல்களின் பயன்கள். அவரவர் முற்பிறவிச் செயற்பாடுகள் உட்பட அவரது கர்மாவினைத் தீர்மானிக்கின்றது. நல்வினை, தீவினைகளின் தொகுதியே வினைப்பயன். இவ் வினைப்பயன் சஞ்சித கர்மம், பிராப்த கர்மம், ஆகாமிய கர்மம் என மூன்று விதமாகப் பிரிக்கப்படுகிறது.

சஞ்சித கர்மம் என்பது சேமித்த நல்வினை, தீவினைகளின் தொகுதியாகும். வரும் பிறவிகளில் செயற்படப்போவது இவ் வினைப்பயனே ஆகும். இப் பிறவியில் இவ் வினைப்பயன் செயற்படாத நிலையிலுள்ளது. இதில் ஒரு பகுதிதான் குறிப்பிட்ட பிறவியில் செயற்படும். பிராப்த கர்மம் என்பது செயல்படுகின்ற வினைப்பயனாகும். ஒரு குறிப்பிட்ட பிறவியில், அந்தப் பிறவிக்கு ஏற்ற வினைப்பயன்கள் மட்டும் செயற்படுகின்றன. அவ்வாறு ஒரு பிறவியில் செயல்படத் தொடங்கியுள்ள வினைப்பயனே இதுவாகும். ஆகாமிய கர்மம் என்பது வர இருக்கிற வினைப் பயனின் விளைவாக இப்பிறவி அமைந்தாலும், வினைப்பயன் அனுபவிக்கின்ற வேளையிலே புதிய வினைப் பயன்கள் சேர்கின்றன. இவ்வாறு ஒரு பிறவியில் சம்பாதிக்கின்ற வினைப்பயன் இதுவாகும். இது செயலின் தன்மைக்கு ஏற்ப இப்பிறவியில் பலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தாலும் தரலாம் அல்லது விடலாம். வேதாந்தப்படி தீவினை செய்தோர் மறுபிறவியில் உழன்று பூமியில் இழிவாகவும் நல்வினை செய்தோர் பிதிருலோகம் சென்று நல்வினை முடிந்ததும் பூமியில் உயர்வாகவும் பிறப்பர். வாழ்வில் தீவினையில் விலகி மனவடக்கம். புலனடக்கம், தியாகம், தவம் போன்ற நற் குணங்களுடன் மெய்யியல் சாஸ்திர துணையுடன் ஆத்மாவை அறிந்து மன அமைதி பெறுதலே மரணமிலாப் பெருவாழ்வு நிலையாகும்.

**செ.கஜநிலானி**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயிலும் திருவிழாவும்

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம்தானம் அரன் எனத் தொழும்"

என்று மெய்கண்டாரின் சிவஞானபோதம் குறிப்பிடுகின்றது. திருக்கோயில் வழிபாட்டை சைவசமயக் குரவர்களும் நூல்களும் அன்றிலிருந்து வலியுறுத்தி வருகின்றன. சைவ மக்களாகிய நாம் சிவபிரானையும் சிவசக்தியையும் வழிபடுகின்றோம். இறைவனின் விக்கிரகங்களை வைத்துப் பூசைகள், மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்றன நடத்தி ஆன்ம ஈடேற்றத்திற்கான அருளைப் பெறுகின்றோம்.

ஆலயங்களில் ஆண்டுக்கொருமுறை கொடியேற்றி சில தினங்கள் பெரும் விழாக்களாக எடுக்கப்படுவதே மகோற்சவம், என்று பொருள்படும். இறைவனின் ஐந்தொழில்களையும் மகோற்சவம் உணர்த்தி நிற்கின்றது. கொடித்தம்பம் நிறுவிய ஆலயங்களில் வருடத்திற்கொரு முறை நடாத்தப்படும். கொடித்தம்பம் இல்லாத ஆலயங்களில் செய்யப்படுவது அலங்கார உற்சவம் ஆகும்.

கொடியேற்றமும் அதன் முன் நடைபெறும் மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, பேரிதாடனம், சமஸ்ததேவ ஆவாகனம் போன்ற கிரியைகள் படைத்தல் தொழிலைக் குறிக்கும். கொடிமரம் பதி, கொடிச்சீலை - பசு, இரண்டையும் இணைக்கும் மஞ்சட்கயிறு - திருவருட்சக்தி, தெற்பைக்கயிறு - பாசம் என்பவற்றின் குறியீடாகும். ஆணவம் வலியிழந்து, ஆன்மா மலநீக்கம் பெறுதற் பொருட்டுத் திருவருளாகிய கொடியை ஏற்றுவதையே கொடியேற்றம் உணர்த்தி நிற்கின்றது.

இரண்டாம் திருவிழாத் தொடக்கம் சப்பறத் திருவிழா வரையான வாகனத் திருவிழாக்கள் காத்தல் தொழிலைக் குறிக்கின்றது. வாகனத் திருவிழாக்களில் இடபம், யானை, மூசிகம், மயில், அன்னம், கிளி, ஆட்டுக்கடா, நாகம், கருடன் போன்ற பல வாகனங்களில் இறைவன் வீதியுலா வருவார். கைலாச வாகனம், மஞ்சம், முத்துச் சப்பறம், பூந்தண்டிகை, பூச்சப்பறம் என்பவற்றிலும் இறைவனை அலங்கரித்து வீதியுலாக் கொண்டு வருவர். ஏதாவதொரு நாளில் பக்தோற்சவமும் நடைபெறும். பக்தோற்சவம் என்பது பகதர்களாகிய நாயன்மார்களின் திருவுருவங்கள் இறைவனைப் பார்த்தவாறு திருவீதியுலா வருதலாகும். சப்பறத் திருவிழாவிற்கு முதல் நாள் பூந்தண்டிகைத் திருவிழாவும் மாலையில் வேட்டைத் திருவிழாவும் (மிருக யாத்திரை) நடைபெறும். இறைவன் குதிரையில் சென்று கொடிய விலங்குகளை அழிப்பது மனிதரிடமுள்ள தீய சக்திகளை அழிப்பதைக் குறித்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கும். அடியாரின் ஆணவ வலிமையைக் குறைத்தல் இவ்விழாவின் பாற்படும். தேர் அக்கினிச் சுடரின் வடிவத்தைக் கொண்டது. அழித்தல் தொழிலைச் செய்த இறைவனைக் குளிர்விக்க பச்சை ஆடைகளுடன் நறுமணம் மிக்க இலை மாலைகளால் அலங்கரித்து பன்னீர் தூவுவர் இறைவன் ஆலயத்துள் சென்றவுடன் பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும்.

ஆன்மாவுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட மாயா காரியங்களாகிய தனு, கரண, புவன, போகங்கள் நான் என்ற செருக்கை எழுப்புவன. அவற்றைச் சக்தியால் இடித்துச் சுத்த சுண்ணாம்பாக்கி இறைவனிடத்தில் ஏப்பிக்க அவர் மறைப்புத் தொழில் எனும் திரோபவத்தைச் செய்வர். இதை சூர்ணோற்சவம் குறிக்கின்றது. சுவாமி தீர்தமாடுவதற்காக வாசனைத் திரவியங்களை இடித்தல் சூரணோற்சவம் எனப்படும். இடிக்கப்பட்ட வாசனைப் பொடியை இறைவனுக்குச் சாத்திய பின் தீர்த்தம் ஆடப்படும்.

மகோற்சவ காலத்தில் இறைவன் வீதிவலம் வரும் போது தரிசிப்பவர்களுக்கு சாம்பவதீட்சை கிடைக்கின்றது. இதனால் மலம் நீங்கி ஞானம் கிட்டும். முக்தி கைகூடும். இவ் விழாக் காலத்தில் அவ் ஊர்மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் ஒற்றுமையாகச் செயலாற்றும் சந்தர்ப்பம் அமைகின்றது. இது சமூக மேம்பாட்டை ஏற்படுத்தும்.

“நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே”

**சௌமியா அதியமான்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து பண்பாட்டு வளர்ச்சியில் சபாபதி நாவலரின் பணியும் பங்களிப்பும்

யாழ்ப்பாணத்தின் இருதயம் கோப்பாய். மருத நிலம் பரவி நெய்தல் சூழ்ந்த கார் கண்ட போது ஏர் கொண்டு உழவுத் தொழில் செய்யும் பசுமைப்பூமி. சைவத்தமிழ் மரபு காத்து வளர்த்த சான்றோர் பதிவு அப்புண்ணிய பூமியின் வடகோவையில் பிராமண ஓடை என்னும் குறிச்சியில் உயர் சைவ வேளாண் குலதிலகராய் சபாபதி நாவலர் தோன்றினார். சபாபதி என்ற பெயருக்கு பொருத்தமாக உயர் சபைகளின் பதிமாகவே விளங்கினார்.

19ம் நூற்றாண்டில் தோல் இருக்கச் சுளை புடுங்கும் தன்மையரான கிறிஸ்தவ பாதிரிகளின் ஆதிக்கத்தின் மத்தியில் எதிர் நீச்சலிட்டு சைவத்தமிழ் மரபு நெறிதவறாது வாழ்ந்து காட்டிய பெருமைக் குரியவர் சபாபதி நாவலராவர். நீர்வேலி சிவசங்கர பண்டிதரோடு தொடர்பு கொண்டு சமய இலக்கிய இலக்கண நூல்களைக் கற்றார். இளமையில் கல்வி சிலையின் எழுத்தாங்கு எழுத்துப்பிழையின்றி எழுதவும் நூல்களை ஆய்வு செய்யவும் கற்றிருந்தார்.

சபாபதி நாவலர் சைவத்தமிழ் இலக்கியத் தேடல் நோக்கில் தென் தமிழகத்தில் திருவாவடுதுறையில் அமைந்து நவகோடி சித்தபுரம் எனப் பெயர் பெற்றுத்திகழும் சைவ ஆதீனங்களில் பழமை பெற்றுத்திக்ழும் ஆதீன நூலகத்தினூடாக பல சைவ சித்தாந்த தமிழ் இலக்கிய நூல்கள் வெளிவரக் காரணராயிருந்தார். அக்காலத்தில் ஆதீனத்துத் தமிழ் வல்ல அறிஞர்களின் பங்களிப்பும் சபாபதி நாவலர் பெருமானுக்கு நாவலர் என்னும் விருது வழங்கிக் கௌரவித்தது. இதன் மூலம் கோப்பாய், நல்லூர் ஆகிய எமது மண்ணிடைப் பிறந்தார் தமிழகம் போற்றும் தொண்டராகினர். இதனாலேயே 1960ம் ஆண்டு கோப்பாயில் நடந்த சபாபதி நாவலர் பெருவிழாவில் கலந்து கொண்ட திருவாவடுதுறை ஆதீனவித்துவான் தண்டபாணி தேசகர் வடகோவை சபாபதிநாவலரும் நல்லை நகர் ஆறுமுக நாவலரும் இந்த ஞான பூமியில் உதித்தன ராயினும் அவர்கள் பயன் தந்தது தமிழகத்துக்கேயாகும் என்று புகழாரம் சூட்டினார்.

சபாபதி நாவலரது பெயரால் வட கோவையில் அவர்தம் வழிபடுதெய்வமான செல்வ விநாயகர் ஆலயத்தின் முன்பாக வாசிகசாலை அமைந்துள்ளது. அதன்கண் அன்னாரது ஆக்கங்களடங்கிய நூல்கள் பல சேமிக்கப்பட்டிருந்தது. போர்க்கால சூழலில் சிதைந்து போனமை சைவத்தமிழ் மக்களின் பேரிழப்பாகும்.

சபாபதி நாவலர் தமதூரிலுள்ள மகிழடி வைரவர் கோவிலின் ஆடு, கோழி பலியிடல்களை நிறுத்துவிக்கவும் அரும்பாடுபட்டவர். செல்வ விநாயகர் ஆலயத்திற்கு திரவிரட்ட மணிமாலையும் சுளிபுரம் விநாயகர் மீது திரு ஊஞ்சல், பள்ளு ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகங்களும் பாடியுள்ளார். இவர் சைவ சூடாமணி, நாவரரேறு ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார். அவர் எழுதி வெளியிட்ட நூல்களில் திராவிட பிரகாசிகை விசேடமானது. சென்னை மாநகரில் இருந்து ஞானாமிர்தம் என்னும் சைவத்தமிழ் சஞ்சிகை ஒன்று வெளியிட்டு வந்தார்.

எமது முன்னோர் செய்த தவப்பயனாக எமது பூமியில் அவதரித்து பிறசமய நெறிபுகாது திரு நீற்றின் ஒளி வீசச் செய்து சைவ மரபு காத்து தமிழ் வளர்த்து எம்மையெல்லாம் சைவத்தமிழராய் வாழவழிவகுத்த தெய்வப் பிறவியான சபாபதி நாவலரின் பாதச் சுவடுகளைப் போற்றுவோம். அவரது உருவச்சிலை எமதுள்ளத்திலிருந்து நீங்காது ஆயினும் எதிர்காலமும் அறியும் வகையில் நிலையான உருவச்சிலை அமைய வேண்டுமென்பது பெருவிருப்பாகும்.

**பிறின்ஸ் டைனீசியஸ் டில்ஷான்**
பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை நெறிப்படுத்தும் இந்துசமயம்

இந்து சமயத்திற்கு "சனாதன தர்மம்" என்ற பெயரும் உண்டு இதன் பொருள் "என்றுமுள்ள வாழ்க்கை நெறி" என்பதாகும். அதாவது எந்த வழியில் அணுகினாலும் இறைவனை அடையலாம் என்பது இதன் அடிப்படையாகும். தற்போது விஞ்ஞானம் பெற்றுள்ள அபரிமிதமான, பிரமிக்க வைக்கும் வளர்ச்சி, உலகம் முழுவதும் எல்லா இனத்திலும் கலாசாரப் பண்பாடுகளில் மாபெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டை காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் போற்றிப்பேணி வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது அதற்கு இந்து சமயத்தில் உள்ள வாழ்வியல் நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியது மிக, மிக அவசியமாகும். இந்து சமய வாழ்க்கை என்பது அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம், ஒழுக்கம், ஒற்றுமை, செயல், தியாகம், நம்பிக்கை உட்பட பல்வேறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது. ஆன்மிகம் இன்றைய முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் பஞ்சாங்கம் மேற்கண்ட அனைத்தும் ஒருங்கிணையும் போது அது ஒரு சிறந்த ஆளுமையை வளர்க்கும். இந்து சமயத்தின் இந்த ஒருங்கிணைந்த பயிற்சியைப் பெறும் போது மனிதன் வாழ்க்கையில் சலனம் இல்லாத மேம்பாட்டை எட்ட முடியும். பொதுவாக இறைவனை அடைவதனை இறை தரிசனத்தை கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம் ஆகிய நான்கு வழிகள் மூலம் பெறலாம் என்று நம் முன்னோர்கள் வரையறுத்துள்ளனர். ஆனால் உண்மையில் இறைவனை நெருங்குவதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. வேதங்கள், உபநிஷத்துகள் கற்றவனுக்கு இறைவன் அருள் கிடைக்காமல் போகலாம். வேதபாராயணம் பற்றி ஒரு வரி கூட தெரியாதவனுக்கு இறைவன் காட்சி கொடுக்கலாம். எனவே இறைவழிபாட்டில் வெளிவேஷங்கள் தேவை இல்லை. இயல்பான வழிபாடே போதுமானது இதற்கு மேலும் உதவும் வகையில் 8 வகை குணங்களை இந்து சமயம் வரையறுத்துள்ளது.

1. உலகில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்புடன் இருக்க வேண்டும். கருணையை கைவிடக்கூடாது. இதை வலியுறுத்தவே, 'அன்பே சிவம், அதுவே நலம்' என்றனர்.

2. பொறுமை மற்றும் எதையும் சகித்துக் கொள்ளும் மன உறுதி வேண்டும்.

3. மற்றவர்களை நினைத்துப் பொறாமைப்படக்கூடாது.

4. உடல் மனம் செயலில் எப்போதும் தூய்மையுடன் இருத்தல் வேண்டும்.
5. தன் முனைப்பின் காரணமாகவும் பேராசை காரணமாகவும் எழக்கூடிய வலி மிகுந்த உழைப்பு வேண்டும்.

6. எப்போதும் கலகலப்பாக இருக்க வேண்டும். இறுக்கமற்று இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எப்போதும் நல்ல நடத்தையுடன் இருக்க வேண்டும் தாராள மனதுடன் இருப்பது சிறந்தது.

8. எல்லா மோகங்களும் வலுவற்றவை, நிலையற்றவை என்பதை உணரவேண்டும்.

இந்த எட்டு வகைக் குணங்கள் மூலம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பெற முடியும் இவை இறைவனை எளிதில் காண உதவும் இந்து சமயத்தின் முக்கிய அம்சமே, அது வேதங்கள் உபநிஷத்துக்கள், தத்துவங்கள், ஆகமங்கள், புராணங்கள், தர்மங்கள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்ட ஆன்மிக அடிப்படையில் தங்கி இருப்பது தான். அது மட்டுமன்றி எந்த நல்ல கருத்தையும் ஏற்றுக் கொள்வது இந்து சமயத்தின் தனித்துவமான சிறப்பாகும். இந்து சமயம் மனிதனுக்கும் அவனது கொள்கை, வாழ்க்கை முறை, வழிபாட்டு முறைகளுக்கு முழுமையான சுதந்திரத்தைக் கொடுத்துள்ளது. அதனால் தான் எத்தனையோ சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் இருந்தாலும் இந்துக்கள் தம் இறைவழிபாட்டை வாழ்வியலோடு ஒருங்கிணைந்த ஒன்றாக எளிமையானதாக வைத்துள்ளனர். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் மக்களின் வாழ்க்கை நடைமுறைகள் ஒவ்வொன்றும் இந்து சமய இறைவழி பாட்டில் எதிரொலித்தபடி உள்ளது. அதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஆதி காலத்தில் காதல் புனிதமாகக் கருதப்பட்டது. அந்த புனிதம் தெய்வங்களின் லீலைகள் மூலம் உணர்த்தப்பட்டது. கிருஷ்ண பரமாத்மா சத்தியபாமாவை காதலித்துக் கரம்பிடித்தார். முருகப்பெருமான் தினைப்புனத்தில் காவல் இருந்த வள்ளியைக் காதலித்து திருமணம் செய்தார். அதுபோல கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஊடல் ஏற்படுவதையும் இறைவழிபாட்டில் காணலாம். சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் சிவம் பெரிதா, சக்தி பெரிதா என்ற ஊடல் ஏற்படுகிறது. இறுதியில் சக்தி இலலாமல் சிவன் இல்லை. சிவன் இல்லாமல் சக்தி இல்லை என்ற தத்துவம் உணர்த்தப்படுகிறது. ஆண், பெண் இருவரில் யார் உயர்வு, யார் தாழ்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. இருவரும் சமம் என்பது ஆலய வழிபாட்டில் பல்வேறு வாழ்க்கை இந்து மத தெய்வக் கோட்பாட்டில் சிவலிங்கத்தின் தத்துவமே இதுதான். அர்த்த நாரீஸ்வரர் வழிபாடு தத்துவமும் இதனை உள்ளடக்கியது தான். எந்த நிலையிலும் ஆண் - பெண் சரிநிகர் சமம் என்பதை இந்து மதம் காலங் காலமாக உணர்த்தியபடி உள்ளது இந்த அடிப்படையில் தான் இந்து ஆலயங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் மையங்களாக உருவாக்கப்பட்டவையாகும். தேர்த்திருவிழா நடக்கும் போது தேரை ஏழை - பணக்காரர் தாழ்ந்த சாதி - உயர்ந்த சாதி என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் வடம் பிடித்து இழுப்பார்கள். 'இறைவன் முன்பு நாம் அனைவரும் சமம்' என்ற மிகப்பெரிய வாழ்வியல் நெறி அங்கு உணர்த்தப்படுகிறது. மேலும் வாழ்வில் எவ்வளவு துன்பம், துயரம் பிரச்சனைகள் வந்தாலும் அத்தனையையும் அடிபணிய வைப்பது ஆலய வழிபாடு தான். நான் கும்பிடும் கடவுள் என்னை வழிநடத்துவார். என்ற அசைக்க முடியாத இரும்பு நம்பிக்கையில் தான் இன்று 99 சதவீதம் பேர் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறோம். இந்த தெய்வ நம்பிக்கையும் அசாத்திய துணிச்சலும் தான் மனதில் உள்ள பயத்தை எல்லாம் தவிடு பொடியாக்குகிறது. நம்பினார் கெடுவதில்லை. இது நான்மறைத் தீர்ப்பு. புராணங்கள். இதிகாசங்கள், நாயன்மார், ஆழ்வார்களின் பாடல் களும் நம்மை நெறிப்படுத்தும் சக்தி படைத்தவை. இவை கடவுளிடம் நம்மை முழுமையாக ஒப்படைக்க செய்து விடும். கடவுளிடம் இருந்து எதையும் எதிர்பார்க்காத தன்மை உண்டாகும். இப்படி நமது வாழ்வியலின் ஒவ்வொரு செயலிலும் இந்து சமயக் கோட்பாடுகள் இரண்டறக் கலந்துள்ளது. அந்த கோட்பாடுகளை சரியாகக் கடைப்பிடிப்பவர்களே பிறவிச் சுழலில் இருந்து விடுபட முடியும் இந்து தர்மத்தால் மட்டுமே பிறப்பு - இறப்பு சூழலில் இருந்து நம்மை விடுவிக்க முடியும் அதற்கு ஒவ்வொருவரும் சில கடமைகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். தினமும் சூரியன் உதிப்பதற்கு முன்பு படுக்கையில் இருந்து எழவேண்டும் காலையில் நீராடி தூய ஆடை அணிந்ததும் தவறாமல் இறைவழிபாடு செய்ய வேண்டும். காலை, மாலை இரு நேரமும் நெய்விளக்கேற்றி நைவேத்தியம் படைத்து வழிபாடு செய்வது மிகவும் நல்லது. நேரம் இருப்பவர்கள் உரிய மந்திரங்கள் சொல்லி வழிபடுங்கள். நெற்றியில் திருநீறு, குங்குமம் அணியாமல் இருக்கக் கூடாது. தினமும் புராண இதிகாச தேவார - திவ்ய பிரபந்தம் உள்ளிட்ட சமய நூல்களைப் படிக்க வேண்டும்.

* வீட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தினமும் தியானம் பழகவேண்டும்.
* ஆலயங்ளில் நடத்தப்படும் பஜனை, சத்சங்கம், கதாகாலட்சேபம், சமய சொற்பொழிவுகளைச் சென்று கேட்க வேண்டும். வீட்டில் தம் கண்ணுக்கு அடிக்கடிபடும் இடத்தில் 'ஓம்' படத்தை மாட்டி வைக்கவும்
* விரத நாட்கள், பண்டிகை தினங்களை பொழுதுபோக்கு நாட்களாகக் கருதாமல் ஐதீகத்தை உணர்ந்து ஆத்மார்த்தமாகக் கடைப்பிடிக்க வேண்டும். மாதத்துக்கு ஒரு தடவையாவது வீட்டில் நாம சங்கீர்த்தனம் செய்வது அல்லது சிறப்பு வழிபாடுகள் நடத்தலாம்.
* மடாதிபதிகள், துறவிகள், ஞானிகளைச் சந்தித்து ஆசி பெற வேண்டும். துறவிகள் பார்வை நம் மீது பட்டால் தோஷங்கள் விலகும். தினமும் ஆலயம் செல்ல வேண்டும் முடியாதவர்கள் வாரத்துக்கு ஒரு தடவையாவது ஆலயத்துக்குச் சென்று நிதானமாக மனதை ஒருமுகப்படுத்தி இறைவழிபாடு செய்ய வேண்டும்.
* ஆலயத்துக்குச் செல்லும் போது தனியாகச்செல்லாமல் மனைவி மற்றும் குழந்தைகளை அழைத்து சென்று உரிய முறைப்படி வழிபாடு செய்ய வேண்டும். இவையெல்லாம் நம் வாழ்வை மேன்மைப்படுத்தும் இவை தவிர இன்னும் ஏராளமான இந்து தர்ம கோட்பாடுகள் உள்ளன. இவை மூலம் நாம் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஞானச் சுரங்க மான நமது இந்து சமயப் பண்பாட்டில் அள்ள அள்ளக் குறையாத பலன் தரும் விஷயங்கள் ஏராளமாக உள்ளன. தினமும் ஆலயத்துக்குச் சென்றால் நாளடைவில் வழிபாட்டு இரகசியங்கள் உங்களுக்குப் புரிந்து விடும். ஆலய வழிபாட்டில் உள்ள கேள்விகளுக்கு விடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கத் தொடங்கி விடும் அந்த விடைகள் உங்களை முழு மனிதனாக்கும். மனிதருள் மாணிக்கமாக நீங்கள் ஒளி வீசுவீர்கள். அந்த நிலையைப் பயன்படுத்தி பிறவிப் பெருங்கடலிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

**கஜனிகா சுதாகரன்**

பொறியியல் பீடம் (E 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி விரதம்

நவராத்திரி விரதம் என்பது மக்களைத் துன்புறுத்தி வந்த மகிசாசுரன் என்ற அரக்கனுடன், ஆதிபராசக்தி 9 நாட்கள் போரிட்டு 10வது நாளில் அவனை வதம் செய்து வெற்றிகொண்டதாக நம்பப்படுகிறது. இதனை நினைவுகூரும் வகையில் நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.
நவராத்திரியில் பராசக்தியான துர்க்கா பரமேஸ்வரியையும், மகாலட்சுமியையும், சரஸ்வதிதேவியையும் பூஜிக்கிறோம். பராசக்தி மூன்றாக இருந்தாலும், முப்பத்து முக்கோடியாக இருந்தாலும், அத்தனையாகவும் இருப்பது ஒரே பராசக்திதான்.

இந்துக்களின் சிறப்பு விரதங்களில் ஒன்றான நவராத்திரி விரதம் இந்துக்களால் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டு வரும் சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகின்ற ஓர் புனிதமான விரதமாகும். இவ் விரதமானது புராட்டாதி மாதத்தில் சூரியன் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் **கல்வி, செல்வம், வீரம்** என மூன்று சக்திகளைக் கொண்ட **துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி** ஆகிய மூன்று தேவியர்களை நோக்கி அனுஷ்டிக்கும் விரதம் ஆகும். நவராத்திரியின் பொருள் என்பது **நவ+ராத்திரி** என்பன சேர்ந்து உருவானது. அதாவது ஒன்பது இரவுகள் என பொருள் கொள்ளப்படுகின்றது. நவராத்திரி ஆரம்பிக்க கூடிய முதல் தினம் தொடக்கம் ஒன்பது நாள் முழுவதும் காலையில் நீராடி சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை போன்ற பெண் தெய்வங்களுக்கு பூச்சூடி, கற்பூரம், பழம் இதனுடன் நெய்வேத்தியம் வைத்து தெய்வங்களுக்குரிய மந்திரங்களைக் கூறி வணங்க வேண்டும்.

நவராத்திரியின் முதல் மூன்று நாட்களும் வீரசக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிக்காலம், இதில் இறைவன் உலகத்தை வாழ்விக்க அருள்கிறான். அடுத்துள்ள மூன்று நாட்களும் செல்வசக்தியின் தோற்றமான லட்சுமியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன போகங்களைக் கொடுக்கும் முறையை அருள்கிறான். இறுதி மூன்று நாட்களும் கல்விசக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் முன் அறிந்தவாறு அருள் வழங்குகின்றான் என்பது சிவாகமத்தின் உள்ளுறையாகும். இவ் ஒன்பது தினங்களிலும் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவிகளை கும்பங்களில் ஆவாகனம் செய்து, ஆலயங்களிலும் இல்லங்களிலும் வழிபடுவார்கள்.
ஒன்பதாவது நாளாகிய மகாநவமி அன்று உபவாசம் இருந்த மறுநாள் விஜயதசமி அன்று விரதம் விட வேண்டும். விஜயதசமி அன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் சுவையுள்ள உணவுப் பதார்த்தங்கள் தயார் செய்து சக்திக்கு நிவேதித்து நவமியில் வைத்துள்ள புத்தகம் இசைக்கருவிகளை பாராயணம் செய்து குடும்ப அங்கத்தவர்களுடன் பாறணையைப் பூர்த்தி செய்யலாம்.
இவ் விரதம் தீமைகளை அழித்து தர்மத்தை நிலை நாட்டும் விரதம் ஆகும். வறுமை நீங்கும், வாழ்க்கையில் வறுமையை நீக்கி செல்வச்செழிப்பினை வழங்கக்கூடிய விரதம் ஆகும். மகிசாசுரன் என்ற அரக்கனை அழித்து உலகிற்கு நன்மையை அருளிய சக்தி கஷ்டங்கள், துன்பங்கள், நோய்கள் அனைத்தையும் இல்லாது ஒழிப்பார் என்ற நம்பிக்கையில் வழிபாடு இடம்பெறும். கொலு வைக்கும் நிகழ்வானது அனைத்து இடங்களிலும் சக்தி நிறைந்துள்ளார் என்பதை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

உலக வாழ் அனைத்து இந்துக்களாலும் இவ்விழா மிகவும் விமர்சையாக கொண்டாடப்படும். ஆலயங்களில் விஜயதசமி அன்று வன்னி மரத்துடன் கூடிய வாழை வெட்டுவது வழமை. பண்டாசுரனுடன் தேவி போர் செய்து அவனை அழிக்க முடியாமல் சிவபிரானை வழிபட்டு விஜயதசமியில் போர் செய்யும் போது அவன் வன்னி மரத்தில் ஒளிந்தான். தேவி வன்னி மரத்தை சங்கரித்து அசுரனை சங்காரம் செய்தாள் என்பர். இதுவே நாளடைவில் கன்னிவாழை வெட்டு என்று மருவி வழங்கலாயிற்று அசுரனை சங்கரித்த நேரம் மாலைப்பொழுது என்பதால் அதனை ஞாபகப்படுத்தும் முகமாக வாழை வெட்டுவது வழக்கம்.

இவ் விரதத்தை அனுஷ்டிப்பதால் கடன் தொல்லை நீங்கும், பிறவிக்கடன் மற்றும் பிறரிடம் வாங்கிய கடன் தொல்லைகள் தீரும், பகை தீரும், நமக்கு வெற்றி கிடைக்கும். நவராத்திரி விரதமானது சிறப்பு மிக்க ஒன்பது நாள் விரதம். மக்கள் மனதில் மகிழ்ச்சி, மன நிம்மதி கிடைக்கும். மனதில் மகிழ்ச்சியையும் பக்தி உணர்வினையும் விதைப்பதாக இருக்கின்றது. விரதத்தின் மகிமையைத் தெரிந்துகொண்டு சிறுவர்களும் பக்தியுடன் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். பண்டிகையாக கொண்டாடும் விரதமான நவராத்திரி விரதம் இந்துக்களின் புனித, சிறப்பு மிக்க நன்மை தரும் விரதம் ஆகும். இதனை இந்துக்களான நாம் அனைவரும் உணர்ந்து அனுஷ்டித்து நன்மை பெறுவோம்.

ஒருவர் தன் வீட்டிலேயே மாபெரும் பிரபஞ்ச சக்தியையும் ஐம்பூத சக்திகளையும் தருவித்து தெய்வீகசக்தியை நிலைபெறச் செய்து, ஆனந்தமாக வாழ நினைத்தால் நவராத்திரி விரதத்தை மேற்கொள்வது நன்று.

**ஜெ.சயானந்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாடு

'யாமிருக்கப் பயமேன்' என எம்மைக் காக்கும் தெய்வம் முருகன், கையிலே வேலேந்தி நம் துயர்களைபவரும் அவரே, ஈழத்துத் தமிழர்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் இறை நாமங்களைத் தம் பிள்ளைகளின் பெயராகச் சூட்டும் மரபினை அனைவரும் அறிவர். அறிஞர்களின் ஆராய்ச்சிகளின் படி பழைய ஈழத்தமிழர்களின் பெயர்கள் கந்தபுராணத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இதிலிருந்து ஈழத்தவரின் முருக பக்தி புலப்படுகிறது.

இலங்கைக்கும் முருகனுக்குமென்றே தனியொரு வரலாறு உள்ளது. வேடுவர் குலப்பெண் வள்ளியை காந்தருவ முறையில் திருமணம் செய்த இடம் இலங்கையில் தென்பகுதியிலுள்ள கதிர்காமம் என்கிறது முருக வரலாறு. அந்த வகையில் கதிர் காமக்கந்தன் ஆலயம் இலங்கையில் மட்டுமன்றி உலகமெங்கும் புகழ் பெற்றதாக விளங்குகிறது. தென்பகுதியில் மட்டுமன்றி வடக்கிலே நல்லூர் கந்தசுவாமி, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி, இணுவில் கந்தசுவாமி எனப் பல ஆலயங்களும் கிழக்கிலே சித்தாண்டி முருகன் ஆலயம் எனப் பல புகழ் பூத்த ஆலயங்கள் மண்ணிற்கு பெருமை சேர்க்கின்றன.

"பார்வதி மகனே குகதேவனே - எம்
பாவங்கள் தீர்க்கின்ற குருநாதனே,
சேவலும் மயிலோடும் விளையாடுவாய் - அந்த
சேனாதிபதி நீயே சிவபாலனே"

"உன்னை நீயே அறிவாய்" எனச் சோக்கிரடீஸ் அவர்களும் அதற்கு முன்னரே தன்னை அறியத் தனக் கொரு கேடில்லை எனத் திருமந்திரம் தந்த திருமூலரும் சொல்லியவை தத்துவ விசாரங்களே, இந்தத் தத்துவ விசாரங்களின் மூலமாக இருப்பவர் முருகப் பெருமானே, எம் பெருமானின் தோற்றம் பற்றிப் பல்வேறுபட்ட இதிகாசங்கள் எடுத்தியம்பி நின்றாலும் அவரின் தோற்றம் உலக ஈடேற்றத்துக்கு உரியது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

'அருவமும் உருவப்போகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள்
பன்னிரெண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறது முருகனின் பிறப்பைக் கூறும் பாடலடி யொன்று காலந் தோறும் முருகனடியார்கள் தோன்றி அவரது திருவிளையாடலுக்கு உட்பட்டு அவர்மேல் பல பாடல்களை எழுதிப்பாடி முத்தியின்பம் பெற்றிருக்கின்றனர். அந்த வகையில் தெய்வப் பெண் புலவரான ஔவைக்கு சுட்ட பழந்தந்து அவரின் தீந்தமிழ்ப் பாடல் கேட்டு குறும்பு பேசி அருங்காட்சி தந்தார். தீயநட்பினால் கெட்டழிந்த அருணகிரியைத் தடுத்தாட்கொண்டு தம்புகழைத் தேனமுதான தீந்தமிழ்த் திருப்புகழாகப் பாடவைத்தார். தமது கந்தக் கோட்டத்தில் பூசனை செய்த கச்சியப்ப சிவாச்சாரியார் மூலம் தமது வரலாறு கூறும் கந்த புராணத்தை எழுதுவித்துப் பெரும்புலவர் மகாசபையில் அரங்கேற்றஞ் செய்தார். கந்தபுராணம் தூய மக்களின் வாழ்க்கை நெறியாக அமைந்தது. இதனையே கந்த புராண கலாசாரமெனப் போற்ற வைத்தனர்.

தென்னிந்தியாவில் தமிழகத்தில் தோன்றிய கந்த புராணக் கலாசாரம் அவ்விடத்தில் சிறப்புடன் போற்றப்படவில்லை தமிழ்ப்பண்பை அதன் கலாசாரத்தை இதய சுத்தியுடன் ஆசாரசீலமாக யாழ் மண்ணில் அனுசரிக்க வைத்தவர் எமது ஆறுமுகநாவலர் பெரு மானாவார்.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் அமைந்த முருகனாலாயங்களில் கந்தபுராணக் கலாசாரம் மேம்பட்டது. முன்பிருந்த சமய பக்தியின் குன்றிய அனுசரனை நாவலர் பெருமானால் தொடக்கப்பட்ட போதனை மற்றும் புராண படனப் பரம்பல் மேம்படவும் இன்றுவரை ஈழத்தில் கந்தபுராண கலாசாரம் மேலோங்கியுள்ளது. மட்டக்களப்பில் திராவிட இனத்தின் வழிபாடாக அமைந்து கந்தபுராணக் கலாசாரத்தைப் போற்றி வருகின்றனர். யாழ் மண்ணில் மாவிட்டபுரம் செல்வச்சந்நிதி, கந்தவனக்கடவை, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மற்றும் இணுவில் கந்தசுவாமி கோயில்கள் மிகப் பிரசித்தமானவை. மேலும் முருகனாலயங்களில் முருகபக்தி மேலோங்கவும் கந்தபுராணக் கலாசாரம் வழியாக அமைந்துள்ளது.

இலங்கையின் மத்திய மாகாணத்தில் பேராதனைப் பல்கலைக்கழகப் பிராந்தியத்தில் அமைந்துள்ள குறிஞ்சிக்குமரன் அனைவருக்கும் அருளாசி வழங்கி அருள்பாலித்து வருகின்றார். முழுக்கமுழுக்க பொறியியல் பீட மாணவர்களின் நிர்வாகத்தில் ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் திருவிழாக்களும், விரதங்கள் பண்டிகைகளும் தவறாமல் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஒன்பது பீடங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் இறைபணிகளில் ஈடுபடுவது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரிய விடயமாக உள்ளது. ஆகவே அழகன் முருகனின் அடிபணிந்து அவன் ஆசிபெறுவோம்.

**ரிஷோமிகா செயராபன்**
பொறியியல் பீடம் (E 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் வடிவம் உணர்த்தும் தத்துவங்கள்

சிவபெருமானின் உருவ அம்சங்கள் மனிதனின் வாழ்க்கை நெறியை உணர்த்துகின்றது. நாம் எப்படி வாழ 'வேண்டும் என்பதைக் காட்டுவதே சிவ வடிவம். சிவனுடைய ஜடா முடியில் அவர் வைத்திருக்கும் "சந்திரன்" நம் வாழ்வில் இன்பமும் துன்பமும் வளர் பிறையாகவும் தேய் பிறையாகவும் மாறி மாறி வரும் என்பதை உணர்த்துகின்றது ஜடா முடியில் காணப்படும் "கங்கை" சொல்லும் தத்துவமானது எப்பொழுதும் தன்னைப்போல் தூய்மையான உள்ளம் இருக்க வேண்டும் என்பதையே ஆகும்.

சிவனின் கழுத்தைச் சுற்றியுள்ள "பாம்பு" நம்மை ஒவ்வொரு நிமிடமும் பாவப் படுகுழியில் தள்ள சந்தர்ப்பம் பார்த்தபடி நச்சுப்பாம்பாக நம்மைச்சுற்றி வளைத்துக் கொள்ள காத்திருக்கின்றது என்பதையும் ஆடையாக அணிந்திருக்கும் "புலித்தோல்" நம்மனம் மிருக உணர்ச்சிகளுக்கு இணங்காது உயர்வான குணத்துடன் இருக்க வேண்டும் என உணர்த்துகின்றது. சிவபெருமான் ஐந்து நாகங்களை ஆபரணமாக அணிந்திருப்பதன் தத்துவம் யாதெனில் நம்மைச்சுற்றி நாகங்களைப் போல் நிற்கும் ஐம்புலன்களை அடக்குவதை விளக்குகின்றது.

சிவபெருமானின் கையில் உள்ள "மான்" என்ன தத்துவத்தை நமக்கு உணர்த்துகின்றது என்றால், மானின் நான்கு கால்களும் நான்கு வேதங்கள் சிவபெருமான் தான் வேதப்பொருளாக உள்ளவர். இதை உலகிற்கு உணர்த்துவதற்காகவே மானை கையில் ஏந்தியுள்ளார். வேதநாயகன் ஈசன் என்பதை அவரின் கையில் உள்ள மான் உணர்த்துகின்றது. சிவன் அர்த்தநாரீஸ்வரராக நிற்பது பெண்ணுக்கு சரிபாதி இடம் உண்டு என்பதை உணர வைக்கவேயாகும்.

சிவபெருமான் தன் உடம்பின் மீது சாம்பல் அல்லது விபூதி பூசிக்கொண்டிருப்பதை நாம் கவனித்திருப்போம் விபூதி என்பது மனித வாழ்க்கையின் முடிவைக் குறிக்கும். மனிதன் தன் முடிவை மறந்து விடக்கூடாது என்பதற்காகவே தான் தன் உடம்பு முழுவதும் விபூதியை பூசிக்கொண்டுள்ளார், சிவபெருமான். உலகத்தில் பிறந்த அனைத்து உயிரினமும் சாம்பலாக வேண்டும் என்பது இயற்கையின் நியதி.

சிவபெருமானின் கையில் உள்ள சூலாயுதம் மூன்று கூரிய முனைகளைக் கொண்டது இது சிவனின் இச்சா, கிரியா மற்றும் ஞான சத்தியைக் குறிக்கிறது. இச்சையினால் படைத்தலும் கிரியையால் காத்தலும் ஞான சக்தியால் நன்மை பெறுதலும் ஆகும். துலாயுதம், வல்வினைகளை அழித்து நன்மை பயப்பதை குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் கையில் உள்ள உடுக்கை பிரபஞ்ச படைப்பின் ஒலியை ஒலிக்கிறது. உடுக்கையை அடிக்கும் போது ஓம் என்ற பிரணவ மந்திர ஒலி பிறக்கிறது. இந்த நாத ஒலி பிரபஞ்ச ஆக்கத்தின் பிறப்பிடம். பிரபஞ்ச படைப்பை ஆக்கும் ஆனந்தத் தாண்டவத்தை தொடங்கும் முன்னர் சிவன், உடுக்கையை 14 முறை அடிக்கிறார். இது பிரபஞ்ச இயக்கத்துக்குத் தேவையான சாத்திரத்தை உருவாக்குகிறது. இவ்வாறு பிரபஞ்ச இயக்கத்துக்குத் தேவையானவற்றை உருவாக்கிய பின்னர் சிவன், ஆனந்தத் தாண்டவத்தை தொடங்குகிறார். ஆகவே உடுக்கை பிரபஞ்சப் படைப்பின் ஒலிக்குறிப்பாகும்.

சிவனின் கோபத்தை நினைத்துப் பார்க்கும் போது நமக்கு தோன்றுவது அவரின் நெற்றிக்கண் என்றறியப்படும் மூன்றாவது கண் சிவனின் நெற்றிக்கண் ஞான ஒளி மற்றும் விழிப்புணர்வைக் குறிக்கும் உருத்திராட்ச மாலையை சிவபெருமான் அணிந்திருக்கிறார். சிவனின் கழுத்தில் உள்ள உருத்திராட்ச மாலை 108 உருத்திராட்ச மணிகளைக் கொண்டதாகும் அது இந்த அண்டத்தை உருவாக்க உதவும் கூறுகளைக் குறிக்கும் அனைத்துவித கூறுகளுக்கும் சிவபெருமானே தலைவர் என்பதையும் அது குறிக்கிறது.

தர்ம தேவதையானவள் தான் அழியாது என்றும் நித்தியமாக இருக்க விரும்பி ரிஷப உருவம் கொண்டு சிவனிடத்தில் வேண்டினாள். சிவனும் அவள் வேண்டுதலை ஏற்று ரிஷபத்தை வாகனமாக ஏற்றுக் கொண்டார் தருமத்துக்கு அழிவில்லை. தருமத்தையே வாகனமாகக் கொண்டவன் இறைவன் என்பதையே சிவபெருமானின் ரிஷபவாகனம் உணர்த்துகின்றது.

சிவபெருமானின் உருவ அம்சங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தை சித்தரிக்கின்றன. சிவனின் இடுப்பைச் சுற்றி இடது தோள்பட்டை வரை புலித்தோல் ஆடை, கழுத்தைச் சுற்றி பாம்பு, ஜடா முடியில் பிறை நிலவு, கொன்றை மற்றும் கங்கையையும் கையிலே திரிசூலம் மற்றும் உடுக்கை, உடல் முழுவதும் பூசப்பட்ட சாம்பல், இவை அனைத்துமே சிவனுடைய அடையாளம் ஆகும்.

**அக்ஷயா வீரசிங்கம்**

பொறியியல் பீடம் (E 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

நம் அன்றாட வாழ்வில் நமக்கு ஏற்படும் பிரச்சினைகளினாலும் ஓய்வற்ற தொடர்ச்சியான வேலைகளினாலும் மன அழுத்தம் ஏற்படுகின்றது. மனதில் ஏற்படும் பல குழப்பங்களினாலும் மன விரக்தியினாலும் மனதினால் ஒரு செயலில் தனது ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்ட முடியாமல் இருக்கின்றது. அதுவும் தற்போதைய காலகட்டத்தில் மனிதன் இயந்திரமாக ஓடிக்கொண்டிருக்கின்றான். அதுபோலவே மனித மனதும் பல எண்ண ஓட்டங்களினால் ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த அலைபாயும் மனதை ஒரு நிலைப்படுத்தி அமைதிப்படுத்த சிறந்த மருந்து தியானமே ஆகும்.

தியானத்தின் பலன் என்ன? என்ற கேள்விக்கு முற்காலத் துறவிகளின் வாழ்க்கை வரலாற்றை நோக்கினாலே பதில் கிடைத்துவிடும். தியானத்தில் கிடைக்கும் ஓய்வு நீங்கள் ஆழ்ந்த உறக்கத்தில் பெறும் ஓய்வை விட ஆழமானது. தியானம் மனம் கிளர்ச்சிகளிலிருந்தும் தேவையற்ற எண்ண ஓட்டங்களிலிருந்தும் விடுபட்டு அமைதியாகவும் சாந்தமாகவும் இருக்க உதவும்.

தியானத்தில் இரண்டு நிலைகள் உள்ளன.

1. நம் மனதில் ஏதாவது ஒரு உருவத்தைக் குறித்தோ அல்லது ஒரு மந்திரத்தைக் குறித்தோ தொடர்ந்து சிந்தனை செய்து மனதிலுள்ள எல்லாவிதமான எண்ணங்களையும் அகற்றிவிடுதல் வேண்டும். குறித்த உருவத்தின் மீது அல்லது மந்திரத்தின் மீது கவனம் செலுத்த ஆரம்பிக்கும் போது ஒரு புதுமையான அனுபவம் உண்டாகும். இதுவரை மனதில் புதைந்து இருந்த நூற்றுக்கணக்கான நினைவுகள் கண் முன்னே தோன்றும். இதிலிருந்து விடுபட்டு மனம் ஒருநிலைப்பட நாம் எடுத்துக் கொண்ட மந்திரம் அல்லது உருவத்தைப் பற்றி மட்டும் உணர்ந்து அந்த பொருளின் பாவத்துடன் நம்மை அதில் பிணைத்துக் கொள்ள வேண்டும்.

2. எவ்வித இடர்பாடுகளும் இல்லாமல் அமைதியாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். கண்களை மூடி கால் முதல் தலை வரை எல்லா உறுப்புக்களையும் ஓய்வில் வைத்திருக்க வேண்டும். காதுகள் திறந்திருந்தால் வெளிச்சத்தங்கள் இடையூறு செய்யும். மனதிலிருந்து பல எண்ணங்கள் எழும். நாம் அதை பொருட்படுத்த தேவையில்லை. வேடிக்கை பார்ப்பவரைப் போல எண்ணங்களிலிருந்து ஒதுங்கி விட வேண்டும். அப்போது நம் காதுகள் திறந்திருந்தாலும் எவ்வித இடர்பாடுகளும் இருக்காது.

தியானத்தின் பயன்கள் பல உள்ளன. நம் மனதிற்குள் இருக்கின்ற கவலை, பயம், சோகம் இவையெல்லாம் தியானம் செய்ய ஆரம்பித்த சில நாட்களிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைய ஆரம்பிக்கும் மனதில் உள்ள தேவை இல்லாத எண்ணங்களை வெளியேற்ற முடியும் எந்த வேலையிலும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் ஈடுபட முடியும் ஆழ்ந்து கவனிப்பது, மற்றவர்கள் கூறுவதை உள்வாங்குவது போன்ற திறமைகளை வளர்த்துக்கொள்ளலாம். தன்னம்பிக்கைத் திறன் அதிகரிக்கும். நமது வாழ்விற்கு எது நல்லது எது கெட்டது என்பதை நாமே ஆராய்ந்து முடிவெடுக்கலாம். ஆளுமைத்திறன் அதிகரிக்கும். இவ்வாறு தியானத்தின் மூலம் பெறும் நன்மைகளைக் கூறிக்கொண்டே செல்லலாம்.

எனவே, எமது வாழ்வை நாமே கட்டுப்படுத்தி மன அமைதியோடும் மன நிறைவோடும் வாழ்வைக் களித்து இன்பம் பெற தியானத்தின் சக்தியைப் பெறுவோம்.

**ஆ.பேபிஷாமினி**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தலங்களின் சிறப்புகள் பற்றிக் கூறும் தலபுராணங்கள்

யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவரத்திகளின் ஆட்சிக் காலம் கி.பி. 13ம் நூற்றாண்டு - 17ம் நூற்றாண்டு வரை நிலவியது. இக் காலப்பகுதியில் சமயச் சார்புடைய இலக்கியங்கள் எழுந்தன. அவற்றுள் தட்சண கைலாயபுராணம், திருக்கரசை புராணம், வியாக்கிர பாத புராணம் என்பன மேற்படி காலப்பகுதியைச் சார்ந்தன. இவற்றுள் முதல் இரண்டுமே நூல்வடிவில் எமக்குக் கிடைப்பன வியாக்கிர பாத நூலின் 2 பாடல்கள் கிடைத்துள்ளன.

புராணம் என்ற இலக்கிய வகையில் ஒரு கிளையான தலபுராணம் பிரிவைச் சேர்ந்த இவ் இலக்கியங்கள் முறையே திருக்கோணேஸ்வரம், திருக்கரசை ஆகிய தலங்களின் சிறப்பை உரைப்பன. இவற்றின் கதை மூலங்கள் வட மொழிப் புராணமரபைச் சார்ந்தவை. இவ் வகையில் ஈழத்தில் பண்டு தொட்டுப் பேணப்பட்டு வந்த பொருளாக இத் தலபுராணங்கள் கொள்ளப்படுகின்றன.

தல புராணம் என்ற இலக்கிய ஆக்கம், குறித்த ஒரு தலத்தின் இறைவன் புகழை மையப்படுத்தி அதன் சூழலில் உள்ள மக்களின் பண்பாட்டையும் வரலாற்றையும் விரித்துரைப்பதை நோக்கமாகக் கொண்டது. பெரும்பாலான புராணங்கள் நம்பிக்கையின் அடிப்படையிலேயே கர்ண பரம்பரைக் கதைகளை உள்வாங்கி பாடப்பட்ட போதும் ஆட்சி யாளர்களின் திருப்பணி செயற்பாடுகளையும் அவர்களது ஆட்சிப் பிரதேச நிலைகளையும் சுட்டிச் செல்வதை பெரும்பாலான தல புராணங்களின் ஊடாகவும் கண்டு கொள்ளலாம். தனது ஆட்சிப் பரப்பின் நிலைபேற்றையும் விஸ்தரிப்பையும் நிலைநிறுத்தும் பொருட்டு சமய தலங்களை அமைப்பதும் புணர் அமைப்பதும் அவை பற்றிய புராணங்களை செய்விப்பதும் அரசின் முக்கிய செயற்பாடு ஆகும். இந்த வகையாலே யாழ்ப்பாணத்து அரசர் காலப் புராணங்கள் மேற் கூறப்பட்ட பண்புகளை உள்வாங்கி அமைந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற தல புராணங்களை குறிப்பிட்டு விளக்குக?

யாழ்ப்பாண மன்னர் காலம் என சிறப்பிக்கப்படுகின்ற ஆரியச்சக்கர வரத்திகளின் ஆட்சிக் காலமானது சமய, சமூக, பொருளாதார நிலைகளில் மிகவும் சிறப்புற்று காணப்பட்டது. மன்னன் சமயத்தைச் சார்ந்து இருந்தமையால் சமயம் சார்பான இலக்கியங்கள் பெரும்பாலும் தோற்றம் பெற்றன. அந்த வகையில் தலங்களின் சிறப்பினை எடுத்துரைக்கும் தல புராணங்களும் தோற்றம் பெற்றன. தல புராணங்களின் வரிசையிலே தட்சண கைலாய புராணத்தை நோக்கின் இதன் கதை அம்சம் வட மொழி மச்சேந்துப் புராணத்தில் இருந்து பெறப் பட்டமை ஆகும். காற்றினால் பறித்து வீசப்பட்ட மகாமேரு மலைச் சிகரம் ஒன்றும் கைலாய மலை சிகரம் ஒன்றும் ஈழமாகும். அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையும் அமைத்தது என்பதும் கைலாய மலையில் இருந்து கொணர்ந்து நிறுவப்பட்ட இலிங்கமே கோணேஸ்வரத்தில் பூசைக்குரியதாக திகழ்கின்றது என்பதும் இப் புராணத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படையான செய்தி ஆகும்.

குளக்கோட்ட மன்னன், கஜ பாகு மன்னன் ஆகியோர் ஆட்சி செய்த வரலாற்றைப் பேசுகின்றது. இந்நூல் சிங்கை சேகராஜ சேகரனினால் பாடப்பட்டதாகக் கருதப்படுகின்றது. நூலாசிரியர் இந் நூலுக்கு கைலாச புராணம் என்ற பெயரையே இட்டு இருந்தார். ஆனால் காலப் போக்கில் இந்நூல் தட்சணகைலாய புராணம் என்னும் பெயரைக் கொண்டது.

இந்நூல் பாயிரம் நீங்கலாக ஈழமண்டல சருக்கம், திருமலைச் சருக்கம், புவனோற்பதிச் சருக்கம், அர்ச்சனா விருத்திச்சருக்கம், தருசனாமுத்திச் சருக்கம், திருநகரச்சருக்கம் ஆகிய 7 சருக்கங்களைக் கொண்ட விருத்தப் பாக்களால் ஆனது இந்நூலின் 2 பதிப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

1. க. சிவ சிதம்பர ஐயர்பதிப்பு 1887
2. தோ. வைத்தியலிங்க தேசியபதிப்பு 1916

இது இரண்டு பதிப்புக்களிலும் பாடல் தொகை, பாட பேதங்கள், தகவல் முரண் பாடுகள் என்பன உள்ளன. அவற்றுள் முதலாவது பதிப்பே பெரிதும் நம்பகமானது என பேராசிரியர் சி.பத்ம நாதன் கருதுகின்றார்.

திருக்கரசை புராணத்தினை நோக்கினால் இது கரசை என்னும் பதிகத்தில் எழுந்தருளி இருக்கும் சிவ பெருமானின் புகழை விரித்துக் கூறுவது ஆகும். இப் பதி திருகோணமலைப்பகுதியில் மகாவலி கங்கைக் கரையோரத்தில் அமைந்துள்ளது. கரைசயம் பதியில்

"அகத்திய ஸ்தாபனம்"

எனவும் வழங்குவர். அகத்திய முனிவரே இதனை ஸ்தாபித்தார் எனவும் இப் புராணம் சூதம் முனை அருளிச் செய்த வட மொழிப் புராணத்தினைத் தழுவிச் செய்யப்பட்டது. என புராண வரலாறு கூறும் இந் நூலின் முதல் நூலின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இந் நூலை எழுதியவரை அந்நூலின் துணை கொண்டு கரசைப்புலவர் என்ற காரணப் பெயரால் அழைப்பர்.

இந் நூலின் கண் கடவுள் வாழ்த்து, குரு வணக்கம், அவை அடக்கம், புராண வரலாறு ஆகியன கொண்ட பாயிரப்பகுதியை விட இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம் பூசைச் சருக்கம் ஆகிய 4 சருக்கங்கள் உள்ளன இதனை ஒரு தல புராணம் என்றே கொள்ளத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாக்கிரபாத புராணம் என்ற நூல் வட மொழியில் உள்ள வியாக்கிரமான்மியம் என்ற நூலில் மொழி பெயர்வு என்பர் இதனைத் தமிழில் விருத்தப்பாவில் செய்தவர் அள வெட்டி வைத்தியநாதத் தம்பிரான் என்று அழைக்கப்படுபவர். அவரை வைத்திய நாத முனிவர் என்றும் அழைப்பார். வியாக்கிரபாத புராணம் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தைச் சேர்ந்தது எனக் கூறுவார். அது அச்சில் பதிப்பாக்கப்பட்ட நூலாகத் தெரியவில்லை. அதனால் இப்பொழுது கிடைத்தற் கரியதாயிற்று எனவே அதன் காலத்தைப் பற்றியோ பொருளைப் பற்றியோ சொல்வதற்கு இயலாது உள்ளது.

**உ.சஞ்சீவன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

குடமுழுக்கு அல்லது கும்பாபிஷேகம் என்பது என்ன?

கோவில் கும்பாபிஷேகம் நிறைய பார்த்திருப்பீர்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் கும்பாபிஷேகம் என்பது என்ன அதில் என்ன என்ன பூஜை செய்கிறார்கள் என பலருக்கும் தெரியாது ஆதலால் அதை பற்றிய ஒரு சிறு விளக்கம்...

**கும்பாபிஷேகத்தின் வகைகள்.**

1. ஆவர்த்தம் – ஓரிடத்தில் புதிதாக ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்யப் படுவது.
2. அனாவர்த்தம் – பூஜை இல்லாமலும் ஆறு,கடல் இவற்றால் சிதிலமடைந்திருந்தாலும் அக்கோயிலைப் புதிதாக நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது.
3. புனராவர்த்தம் – கருவறை,பிரகாரம்,கோபுரம் முதலியன பழுது பட்டிருந்தால் பாலாலயம் செய்து அவற்றை புதுப்பித்து அஷ்ட பந்தனம் சார்த்தி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது.
4. அந்தரிதம் – கோயிலுள் ஏதேனும் தகாதன நேர்ந்து விடின் அதன் பொருட்டு செய்யப்படும் சாந்தி.

**கும்பாபிஷேகத்தில் விக்ரகப் பிரதிஷ்டையில் மேற் கொள்ளப்படும் அவசியமான கிரியைகள் பற்றிய விளக்கம்.**

1. அனுஞை – (அனுமதி வாங்குதல்) செயல்களைச் செய்யும் ஆற்றல் மிக்க ஓர் ஆசாரியனைத் தேர்ந்து எடுத்து இச்செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்தல்.
2. சங்கல்பம் – இறைவனிட்த்தில் நமது தேவைகளைக் கோரிக்கையாக வைத்தல்.
3. பாத்திர பூஜை – இறைவனுக்காக செய்யப்படும் பூஜைக்குண்டான பூஜா பாத்திரங்களை சுத்தம் செய்யும் பொருட்டு அந்தந்த பாத்திரங்களுக்குரிய தேவதைகளைப் பூஜை செய்தல்.
4. கணபதி பூஜை – செயல் இனிது நிறைவேற கணபதியை வழிபடுதல்.
5. வருண பூஜை – அவ்விடத்தை சுத்தம் செய்யும் பொருட்டு வருண பகவானையும் சப்த நதி தேவதைகளையும் வழிபடுதல்.
6. பஞ்ச கவ்யம் – ஆத்ம சுத்தி செய்யும் பொருட்டு பசு மூலமாக கிடைக்கும் பால், தயிர், நெய், பசுநீர், பசுசாணம் முதலியவைகளை வைத்து செய்யப்படும் கிரியை.

வாஸ்து சாந்தி – தேவர்களை வழிபட்டுக் கும்பாபிஷேகம் எவ்வித இடையூறுமின்றி இனிது நிறைவேற் செயலுக்கும் செய்பவர்க்கும் இடையூறு வராதபடி காக்கச் செய்யும் செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பிரவேச பலி – எட்டு திக்கிலும் உள்ள திக்கு பாலகர்களுக்கு உரிய பிரதிஷ்டை செய்து அவர்களை அந்தந்த இடத்தில் இருக்க செய்தல் (துர் தேவதைகளை வர விடாமல் காக்கும் பொருட்டு)

8. மிருத்சங்கிரஹணம் – (மண் எடுத்தல்) அஷ்ட திக் பாலகர்களிடம் அனுமதி பெற்று சுத்தமான இடத்திலிருந்து மண் எடுத்து அப்பள்ளத்தில் அபிஷேகம் செய்தல். (ஆலயம் நிர்மாணம் செய்ய பூமித் தாயான பூமா தேவியை கஷ்டப்படுத்தியதன் காரணமாக பூமா தேவியை மகிழ்விக்க செய்யப்படும் கிரியை)

9. அங்குரார்ப்பணம் – (முளையிடுதல்) எடுத்த மண்ணை பாலிகைகளில் விதைகளையிட்டு முளை வளர செய்தல். இதில் 12 சூர்யர்களான வைகர்த்தன், விவஸ்வதன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, லோகபிரகாசன், லோகசாட்சி, திரிவிக்ரமன், ஆதித்யன், சூரியன், அம்சுமாலி, திவாகரன் போன்றவர்களையும் சந்திரனையும் வழிபடுதல்.

10. ரக்ஷாபந்தனம் – (காப்புக்கட்டுதல்) கிரியைகளைச் செய்யும் ஆசாரியனுக்கும் செய்யும் கர்த்தாவுக்கும் எவ்வித இடையூறுகள் வராதபடிக் காத்தற் பொருட்டு அவன் கையில் மந்திர பூர்வமாகக் காப்பு (கயிறு) கட்டுதல்.

11. கும்பலங்காரம் – கும்பங்களை (கலசம்) இறைவன் உடம்பாக பாவித்து அலங்காரம் செய்தல்.

12. கலா கர்ஷ்ணம் – (சக்தி அழைத்தல்) விக்ரகத்தில் இருக்கும் சக்தியை கும்பத்திற்க்கு மந்திர பூர்வமாக அழைத்தல்.

13. யாகசாலா பிரவேசம் – கலசங்களை யாகசாலைக்கு அழைத்து வருதல்.

14. சூர்ய, சோம பூஜை – யாகசாலையில் சூர்ய சந்திரனை வழிபடுதல்.

15. மண்டப பூஜை – அமைக்கப்பட்டிருக்கும் யாகசாலையை பூஜை செய்தல்.

16. பிம்ப சுத்தி – விக்ரகங்களை மந்திர பூர்வமாக சுத்தம் செய்தல்.

17. நாடி சந்தானம் – யாகசாலை இடத்திற்கும் மூல திருமேனிக்கும் தர்பைக் கயிறு, தங்க கம்பி, வெள்ளிக் கம்பி, அல்லது பட்டுக் கயிறு இவற்றால் இணைப்பு ஏற்படுத்துதல். ( இறைவனின் சக்தியில் ஒரு பகுதியை இந்த இணைப்பு மூலமாக விக்ரகங்களுக்கு கொண்டு சேர்த்நல்)

18. விசேஷ சந்தி – 36 தத்துவ தேவதைகளுக்கும் அர்க்யம் தருவது, உலகத்தில் உள்ள அனைத்து ஆத்மா பித்ருக்களுக்கு அர்க்யம் தருவது.

19. பூத சுத்தி – இந்த பூத (மனித) உடம்பை தெய்வ உடம்பாக மந்திர பூர்வமாக மாற்றி அமைத்தல்.

20. ஸ்பர்ஷாஹுதி – 36 தத்துவங்களை யாகத்திலிருந்து மூல விக்ரகங்களுக்கு கொண்டு சேர்த்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. அஷ்ட பந்தனம் – எட்டு பொருள்களால் ஆன இம்மருந்தினால் மூர்த்தியையும், பீடத்தையும் ஒன்று சேர்த்தல். இதை மருந்து சாத்துதல் என்பர்.
22. பூர்ணாஹூதி – யாகத்தை பூர்த்தி செய்தல்.
23. கும்பாபிஷேகம் – (குடமுழுக்கு) யாக சாலையில் மூர்த்திகளுக்குரியதாக வைத்துப் பூஜிக்கப்பட்ட குடத்து நீரை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்தல். இதனால் அந்த மூர்த்தி அந்த விக்ரகத்தில் எழுந்தருள்கிறார்.
24. மஹாபிஷேகம் – கும்பாபிஷேகம் முடிந்த பிறகு மூல விக்ரகத்திற்கு முறைப்படி அபிஷேகம் அலங்காரம் செய்தல்.
25. மண்டலாபிஷேகம் – பிறந்த குழந்தையாக விக்கிரகத்தில் வீற்றிருக்கும் இறைவனை 48 நாட்கள் விஷேச அபிஷேக பூஜைகள் செய்து முழு சக்தியுடன் இருக்கச் செய்வது.
ஏக குண்டம் – ஒரு குண்டம் அமைத்தல்.
பஞ்சாக்னி – ஐந்து குண்டம் அமைத்தல்.
நவாக்னி – ஒன்பது குண்டம் அமைத்தல்.
உத்தம பக்ஷம் – 33 குண்டம் அமைத்தல்.
கும்பாபிஷேகத்திற்கு செய்யப்படும் யாகங்களை எத்தனை தடவை செய்ய வேண்டும் என்று விதிமுறை உள்ளது. அது 2 காலம், 4 காலம், 8 காலம், 12 காலம் வரை செய்யும் முறை வழக்கத்தில் உள்ளது.
கும்பத்தை நம் சரீரமாக சொல்லப்படும் காரணம்.
யோகஜம் என்ற சிவாகமம் சரீரமாகக் கும்பத்தை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதற்கு விபரமாகச் சொல்லுவதாவது.
கும்பமாகிய குடம் மாமிசமாகும், குடத்திலுள்ள தண்ணீர் இரத்தமாகும், கும்பத்தினுள் போடப்படும் இரத்தினங்கள் சுக்ளமாகும், கும்பத்தின் உள்ளே தர்பையினால் செய்யப்பட்ட கூர்ச்சம் நாடியாகும், குடத்தின் மேலே நெருக்கமாகச் சுற்றப் பட்டுள்ள முப்புரி நூல்களே நரம்புகளாகும், கும்பத்தை சுற்றி போர்த்திக் கட்டியுள்ள வஸ்த்திரமே தோல் ஆகும், குட்த்தின் மேல் இருக்கும் தேங்காய் சிரசாகவும், முகமாகவும் கூறப்படுகிறது, தேங்காயின் மேலே விரித்துள்ள தர்பையினால் செய்யப்பட்ட லம்ப கூர்ச்சம் சிகை /குடுமி ஆகவும், தேங்காய்க்கு அடியில் போடப்படும் மாவிலைகள் ஸ்வாமியின் ஜடாபாரங்கள், உச்சரிக்கப்படும் மந்திரங்களே பிராணனாகும் என்று அங்க கற்பனை சிவாகமத்தில் கூறப்படுகின்றது.

நன்றி

**சோ.பானுஜன்**

பொறியியல் பீடம் (E 21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனவன் பெருமை போற்றுவோம்

சிவன் புகழ்பாடும் இரவிலே - வாரீர் நாமும் இணைந்திடுவோம்
தவ மேன்மையைப் போலே
வரம் கூடிடும் நம்முள்
அவன் பெருமையை பாடி
அகம் மகிழவே சேரீர்
எவர் பழித்திடினும் உம்மை
இவர் வெறுத்திடார் என்றும்

மாசி தேய்பிறை இரவில் - நல்
அருள் வேண்டிய விரதம்
பசி மறந்து பக்தர் - இறை
ஆசியில் ஊறித் திழைப்பர்
நசிப்பேச்சினில் நாமும் சிவாயநம சொல்லிடவே
காசிநாதன் மகிழ்ந்திடுவான்
காட்சியினை அருளிடுவான்

சங்கரநாதனின் அற்புதம் போற்றிட
சங்கமாய் கூடியே வாழ்த்தியே பாடுவோம்
திங்களை முடியிலே சூடிய முதல்வனை -இவ்
அல்லிலே வேண்டியே ஆயுளை நீட்டுவோம்
கங்காதரனவன் நாமம் சொல்லிடின்
கடுந்துயர் ஓடி நம் கவலைகள் தீர்ந்திடும்

நர்த்தன நாதனை நாளும் தொழுதிடு
நற்புகழ் பெற்று நலமாய் வாழலாம்
கீர்த்தனை விரும்பிடும் பரமன் அவனை
அர்ச்சனை செய்து நாம் ஆனந்தம் கொள்ளுவோம்
சொர்க்கம் கண்டிட சோகம் மறந்திட
சொக்கன் அடியினை நாளும் வணங்கிடு
தீர்க்க தரிசனம் தந்திடும் தேவனை
பக்திகொண்டு நாம் பரவசம் காணுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலவிடமுண்ட கண்டனாய் எமை காக்கும் சிவனே ! உனை
காலம் கடக்கினும் சாவிலும் தொழுவேன்
கோலநாயகா ! - உனபதம்பணிகையில்
வேலன் போலவே நானும் ஆகிறேன்
தூல லிங்கத்தில் ஊறித்திளைத்திடின்
மோட்ச ஆனந்தம் எம்மை சேர்ந்திடும்

கங்கை கொண்ட சடையனின் அழகினை
சங்கும் முனங்கியே உயிரும் பெற்றிடும் - அவன்
அங்க வடிவிலே அர்த்தநாதீஸ்வராய்
ஆன்ம சமத்துவ அன்பை உணர்த்துதே
எங்கும் சிவமயம் காண்கிற நொடியில்
மங்கா ஒளியது உலகில் மிளிருதே
பங்கம் இணைந்திடா வாழ்வை அடைந்திட
தில்லை நாதனின் திருவடி நாடுவோம்

யாசகம் செய்து சாபம் தீர்த்தபசுபதியே - இக்
காசினியில் எமை காத்திடுவாயே
பாசமலம் அகற்றிடம் நிர்மலனே - என்
குறைகள் நீக்கிட அருள்வாய் குகனே
நாசங்கள் செய்வோரை அழித்திடும் சிவனே ! - உன்
புகழினை பாட எனை தேற்றிடுவாயே
மாசற்ற மகேஸ்வரன் பாதம் பணிந்து - என்றும்
நித்திய ஆனந்தம் பெற்று மகிழ்ந்திடுவோமே

**தா.ம.லுவகரன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தமெல்லாம் சிவமயம்

அர்த்த (சிவ) ராத்திரியில் கண் விழித்து
அடி முடி கொண்டிராத அநாதிப்பொருளின்
அற்புதங்கள் பல உணர்ந்து கொண்டேன்
சித்தமெல்லாம் சிவமயமாகி நின்றேன்

சித்தரெல்லாம் சிவன் மேல் பித்தராகி
அர்த்தமில்லா வாழ்வதனை நீக்கி
பாச வினைகள் பற்றறுத்து, பற்றற்றான் தாழ்பற்றி நிற்பர்
"சித்தமெல்லாம் சிவமயமே" என

அற்புதங்கள் பல பகிர்ந்து
அருட்காட்சி வடிவங்கள் காட்டி
சிவலிங்கரூபமாய் தடுத்தாட்கொண்டு எம்
சித்தமெல்லாம் சிவமயமே

தூணிலும் துரும்பிலும் நிறைந்தது சிவம்
நானிலம் மீதினில் உயர்ந்தது சிவம்
நாவிலும் பாவிலும் நம்மோடிருப்பது சிவம் - வாழ்வில்
சித்தமெல்லாம் எமக்கு சிவமயமே

**கே.கார்த்தீபன்**
பொறியியல் பீடம் (E21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2022/2023 ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்க 66வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

09.01.2022 - ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இனிதே ஆரம்பமானது. அன்று முதல் பத்து தினங்கள் விஷேஷ அபிஷேக பூஜைகளுடன் வசந்த மண்டப பூஜை இடம்பெற்று திருவீதியுலா வருதலும் சிறப்பாக இடம்பெற்றது.

18.01.2022 - அலங்கார உற்சவ இறுதி நாளன்று விஷேட அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் காலை இடம்பெற்றது. மாலை விஷேட தவில், நாதஸ்வர கச்சேரியும் குறிஞ்சிக் குமரப் பெருமான், விநாயகர், அம்பாள் சமேதரராக வீதியுலா வந்தார்.

01.03.2022 - மஹா சிவராத்திரி தினமான அன்று இரவு வழமை போன்று இம்முறையும் நான்காம் சாமபூஜை விஷேஷ அபிஷேக வழிபாடுகளுடன் இடம்பெற ஆறுகால பூஜையும் இடம்பெற்றது.

14.04.2022 - சுபகிருத் வருஷப் பிறப்பு விஷேஷ அபிஷேக பூஜை வழிபாடுகளுடன் நடைபெற்றது.

03.09.2022 - மஹா கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு ஆலயத்தின் சுற்றப்புற சூழல் தூய்மையாக்கப்பட்டது.

05.09.2022 - ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்று முதல் நாற்பத்து எட்டு நாட்கள் விஷேஷ மண்டலாபிஷேக பூஜைகளுடன் வசந்தமண்டப பூஜை இடம்பெற்று திருவீதியுலா வருதலும் சிறப்பாக இடம்பெற்றது.

26.09.2022 - நவராத்திரி பூஜை கொலுவைப்புடன் ஆரம்பமானது. தொடர்ந்து எட்டு தினங்கள் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. மாலை திருவூஞ்சல் நடைபெற்று விஷேச தவில் நாதஸ்வர கச்சேரியுடன் குறிஞ்சி குமரப்பெருமான் திருவீதியுலா வந்தார்.

07.10.2022 - இந்து மாணவர் சங்க 66வது செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.10.2022 - மண்டலாபிஷேக இறுதி நாளன்று விஷேட அஷ்டோத்திர சத சங்காபிகேம் காலை இடம்பெற்றது. மாலை விஷேட தவில், நாதஸ்வர கச்சேரியும் குறிஞ்சிக் குமரப்பெருமான், விநாயகர், அம்பாள் சமேதரராக வீதியுலா வந்தார்.

24.10.2022 - தீபாவளி தினத்தன்று அபிஷேகம் நடைபெற்று விஷேஷ பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

25.10.2022 - பொறியியல் பீட மாணவர்களால் ஆலய வீதியும், சுற்றுப்புற சூழலும் சுத்தமாக்கப்பட்டன.

26.10.2022 - கந்தசஷ்டி விரதம் ஆரம்பமானது. ஆறு தினங்களும் விஷேஷ அபிஷேகம் இடம்பெற்று, "பஞ்சபுராணம்", கந்தசஷ்டி கவசம்", "கந்தபுராணம்" என்பன பாராயணம் செய்யப்பட்டது.

30.10.2022 - கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான அன்று சூரஸம்ஹாரம் இனிதே நடைபெற்றது.

31.10.2022 - திருக்கல்யாண உற்சவம் சிறப்பாக நடைபெற்று முருகப்பெருமான் வீதியுலா வந்தார்.

28.12.2022 - திருவெம்பாவை விரதம் ஆரம்பமாகி தினமும் அதிகாலை திருப்பள்ளியெழுச்சி ஓதப்பட்டு நடராஜப் பெருமானுக்கு விஷேச பூஜைகள் நடைபெற்று திருவெம்பாவை ஓதப்பட்டது.

06.01.2023 - திருவெம்பாவை பூஜையின் இறுதி நாளான அன்று ஆருத்ரா அபிஷேகம் இடம்பெற்று ஆருத்ரா தரிசனமும் இடம்பெற்றது.

14.01.2023 - தைப்பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு ஆலய வீதி மற்றும் ஆலய சுற்றுப்புற சூழல் சுத்தமாக்கப்பட்டது.

15.01.2023 - விஷேஷ பூஜை வழிபாடுகளுடன் தைப்பொங்கல் சிறப்பாக கொண்டாடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட பூஜை வழிபாடுகளுடன் பிலவ வருஷ மற்றும் சுபகிருது வருஷ விஞ்ஞாபனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக மாதாந்த கார்த்திகை உற்சவங்கள், நடேசர் அபிஷேகங்கள் உள்ளிட்ட அனைத்து விஷேச பூஜை வழிபாடுகளும் உரிய காலத்தில் இடம்பெற்றன. மேலும் பிரத்தியேக அபிஷேக பூஜை வழிபாடுகளும், அடியார்களால் நிறைவேற்றப்பட்டன. ஆலய நித்திய பூஜை, வழிபாடுகள், காலை 07.00 மணிக்கு திருவனந்தலும், காலை 10.30 மணிக்கு பகல் பூஜையும், மாலை 05.30 மணிக்கு மாலை பூஜையும், இரவு 07.00 மணிக்கு அர்த்தஜாம பூஜையும் காலம் தவறாது நடைபெற்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் மாலை பூஜை 05.45 மணிக்கு இடம்பெற்று தொடர்ந்து முருகனடியார்களால் பஜனை வழிபாடுகளும் இடம்பெற்றன.

இவ்வருடம் நாடெங்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக செயற்குழுவால் திட்டமிட்டபடி செயற்பட முடியாது போனது. இதனால் மாதாந்த கூட்டங்களும், கூட்ட முடியாது போனது. பொருட்களின் திடீர் விலையேற்றம், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வருடாந்த தலயாத்திரையும் செல்ல முடியாது போனது. நாட்டின் இந்த அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியிலும் ஆலய நித்திய பூஜைகளும், விஷேச உற்சவ பூஜை வழிபாடுகளும் சுகாதார நடைமுறைகளைப் பேணி பாதுகாப்பான முறையில் காலம் தவறாது சிறப்புற இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இணை செயலாளர்கள்

**திரு.சுபகேதன்**

**திரு.தனுஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1952ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள் மற்றும் தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1952-57 | பேராசிரியர் ரி.ஆர்.வீ.மூர்த்தி | |
| 1957-58 | பேராசிரியர் த.நடராஜா | திரு.ஏ.முத்துக்கிருஷ்ணன் |
| 1959-62 | பேராசிரியர் த.நடராஜா | தி.ரு.க.சிவஜோதி |
| 1962-63 | பேராசிரியர் த.நடராஜா | |
| 1963-64 | பேராசிரியர் த.நடராஜா | திரு.எஸ் நவரட்ணராஜா |
| 1964-65 | பேராசிரியர் த.நடராஜா | திரு.மு.கன்கரட்ணம் |
| 1965-66 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.து.அப்புலிங்கம் |
| 1966-67 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.கு.சண்முகநாதன் |
| 1967-68 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.கிருஷ்ணானந்தசிவம் |
| 1968-69 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.ந.சுகுமாரன் |
| 1969-70 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.ஜெயபாலன் |
| 1970-71 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.என்.சந்திரகாந்தன் |
| 1971-72 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.என்.சந்திரகாந்தன் |
| 1972-73 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.பா.பத்மநாதன் |
| 1974-75 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.குமரேசன் |
| 1975-76 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு.கு.கந்தசாமி |
| 1976-77 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு.கு.கந்தசாமி |
| 1977-78 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு.இ.கைலாசநாதன் |
| 1978-79 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.எஸ்சிவானந்தன் |
| 1979-80 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.கு.சிவகணேசன் |
| 1980-81 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.திரு.போ.யுசீலாந்தன் |
| 1981-82 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | |
| 1982-83 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.சி.பாலகிருஸ்ணன் |
| 1983-84 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.சி.பாலகிருஸ்ணன் |
| 1984-85 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு.ஏ.விஜயரஞ்சன் |
| 1985-86 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு.ஏ.விஜயரஞ்சன் |
| 1986-87 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு.பீ.தயாபரன் |
| 1987-88 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு.பீ.தயாபரன் |
| 1988-89 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு.எஸ்.குகநேசன் |
| 1989-90 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு.இ.சந்திரகுமார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1990-91 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு.செ.இரவீந்திரநாதன் |
| 1991-92 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு.க.வல்லபவானந்தன் |
| 1992-93 | பேராசிரியர் இ.சிவகணேசன் | திரு.தி.நவநீதன் |
| 1993-94 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.க.கணேசநாதன் |
| 1994-95 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.க.நந்தகுமார் |
| 1995-96 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.பா.சஞ்சயன் |
| 1996-97 | கலாநிதி.செ.திருச்செல்வம் | |
| 1997-98 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.உதயசீலன் |
| 1998-99 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.க.இராகவன் |
| 1999-00 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.நே.ராஜரூபன் |
| 2000-01 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.க.கருணாநிதி |
| 2001-02 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.இ.மயூரன் |
| 2002-03 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.ச.சிவஜோதி |
| 2003-04 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.து.அரவிந்தன் |
| 2004-05 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.ப.தயாபரன் |
| 2005-06 | கலாநிதி.செ.திருச்செல்வம் | திரு.நெ.நந்தகுமார் |
| 2006-07 | வைத்தியகலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு.சா.மோகனஜீவ் |
| 2007-08 | வைத்தியகலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு.சி.திவாகரன் |
| 2008-09 | வைத்தியகலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு.செ.ஜெயசுதன் |
| 2009-10 | திரு.வ.தர்மதாசன் | திரு.ந.சிந்துஜன் |
| 2010-11 | திரு.வ.தர்மதாசன் | திரு.த.கோபிராம் |
| 2011-12 | திரு.சிவயோகலிங்கம் | திரு.ச.சசிக்குமார் |
| 2012-13 | திரு.சிவயோகலிங்கம் | திரு.கு.ஜெயமோகன் |
| 2013-14 | திரு.சிவயோகலிங்கம் | திரு.சி.வினோஜ் |
| 2014-15 | திரு.வ.தர்மதாசன் | திரு.கு.அபிராம் |
| 2015-16 | திரு.வ.தர்மதாசன் | திரு.தி.தர்ஷன் |
| 2016-17 | திரு.வ.தர்மதாசன் | திரு.த.வெங்கடேஸ்வரன் |
| 2017-18 | திரு.வ.தர்மதாசன் | திரு.சி.சுஜேந்திரன் |
| 2018-19 | திரு.வ.தர்மதாசன் | திரு.வீ.ராஜ்குமார் |
| 2019-20 | திரு.வ.தர்மதாசன் | திரு.ஜெ.கபிலானந் |
| 2020-21 | திரு.வ.தர்மதாசன் | திரு.ம.மணிவண்ணன் |
| 2021-22 | திரு.த.சிவானந்தவேள் | திரு.ந.சுமித்தரசாந்த் |
| 2022-23 | திரு.த.சிவானந்தவேள் | திரு.க.மாலவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச்செய்தி

இந்து சமுத்திரத்தின் முத்தென திகழும் இலங்காபுரியின் மத்திய மாகாணத்தின் கண்டி மாநகரின் பேராதனைப் பதியில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் குறிஞ்சிக் குமரனுக்கு ஆவணித்திங்கள் 20ம் நாள் (05.09.2022) திங்கட்கிழமை ஆறாவது மகாகும்பாபிஷேக விழா முருகப்பெருமானது அருளாசியுடன் அடியேனின் கைகளினால் நடைபெற்று, இத்தருணம் வெளிவரும் கும்பாபிஷேக சிறப்புமலர் சிறப்புற அமைய எனது ஆசிச்செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் கும்பாபிஷேக விழாவானது நாம் எல்லோரும் எண்ணியவுடன் நடைபெறுவதில்லை. அதற்கு இறையருளும் குருவருளும் பூரணமாக கிடைக்க வேண்டும். கும்பாபிஷேக காரியங்களை செய்ய, செய்விக்க அதனை தரிசிக்கவும் பெரும்பேறு பெற்றிருக்க வேண்டும். அவனருளால்தான் அவன்தாள் வணங்க முடியும்.

இப் பெருங்கைங்காரியத்தினை தற்போதைய எமது நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியிலும் முன்னின்று அயராது பாடுபட்டு உழைத்த பேராதனை பல்கலைக்கழக கல்விசார் சமூகத்தினருக்கும், மற்றும் பணிக்குழுவினருக்கும், குமரன் அடியவர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு, முருகப்பெருமானது திருவருள் கடாட்சம் உங்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென அவன் திருப்பாதங்கள் பணிந்து எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

சுபமஸ்து

இங்ஙனம்

பிரதிஷ்டா பிரதமகுரு,

வேதாகமக் கிரியாபானு, கிரியா கிரமஜோதி, கிரியா சாமரம்

**சிவஸ்ரீ. சிவகுகநாதக் குருக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகக்குழு தலைவரின் வாழ்த்து செய்தி

இன்று இலங்கையில் உள்ள முருகன் கோயில்களில் பிரசித்தமாக விளங்கும் குறிஞ்சிக்குமரன் கோயிலின் 1968ஆம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகத்திலும், 1980 2ஆம் கும்பாபிஷேகத்திலும், இனகலவரங்களில் பாதிக்கப்பட்டு புனரமைப்பு செய்து நடத்தப்பட்ட 1986ஆம் ஆண்டு 3வது கும்பாபிஷேகத்திலும், 1998ஆம் ஆண்டு 4வது கும்பாபிஷேகத்திலும், 2010ஆம் ஆண்டு 5வது கும்பாபிஷேகத்திலும் 2022ஆம் ஆண்டு 6வது கும்பாபிஷேகத்திலும் கலந்து கொண்டதோடு இரண்டுமுறை கும்பாபிஷேக குழு செயலாளராகவும், இரண்டு முறை கும்பாபிஷேக குழு தலைவராகவும் செயற்பட்டவன் என்ற வகையில் கோயில் வளர்ச்சி படிகளை நன்கு அறிந்தவன்.

இந்து பெரியார் சிலர் கூடி அமைத்த இந்த ஆலயத்தில் இன்றைய நிலையைக் கண்டு பூரிப்படைகின்றேன். அதில் தொண்டாற்ற கிடைத்தமைக்காக குறிஞ்சிக்குமரனை பணிந்து சகலருக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

பெருமளவு இந்து மாணவர்கள் கோயிலுக்காக தொண்டாற்றுகின்றனர். இவர்களை சரியான முறையில் அசாரத்துடன் வழிநடத்துவதே முக்கியமானதாகும். அண்மைக்காலமாக மாணவர் ஒத்துழைப்பு சற்று குன்றியுள்ளது. இதை நிவர்த்தி செய்து நிறைவேற்றுவர் என்ற நம்பிக்கை உண்டு.

குறிஞ்சிக்குமரன் கோயிலில் நடைபெறும் எல்லா விழாக்களிலும் மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பங்கு பெறுகின்றனர். அவர்களது ஒருங்கமைப்பும், நடாத்தும் முறையும் மகிழ்ச்சி தருகிறது. இந்து மாணவர்சங்கத்தினர், இந்து பட்டதாரிகள் சங்கத்தினர், பொறுப்பாண்மைக்குழு ஆகியோர் கும்பாபிஷேகத்திற்கு வழங்கிய ஆதரவிற்கும், கடல்கடந்த பட்டதாரிகள் வழங்கிய ஆதரவிற்கும், ஆலோசனைகளுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். குறிஞ்சிக்குமரன் அனைத்து பக்த அடியார்களுக்கும் அருள்பாலிப்பார்.

**பேராசிரியர் வை. நந்தகுமார்**

தலைவர் கும்பாபிஷேகக்குழு - 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் பேராசிரியர் செ. சிவயோகநாதன் அவர்களின் வாழ்த்துரை

குறிஞ்சிக்குமரன் ஆலய ஆறாவது கும்பாபிஷேகம் இந்து மாணவர் சங்கத்தினரின் அயராத உழைப்பினாலும், இந்து பட்டதாரிகள் மன்றத்தின் அளப்பரிய ஒத்துழைப்பினாலும், பொறுப்பாண்மைக்குழுவின் ஒழுங்காற்றலினாலும், முருகன் அடியார்களின் பங்களிப்பினாலும் இனிதே நிறைவேறியுள்ளது. இதற்கு வழிகாட்டிய கும்பாபிஷேக குழுவினரையும் இங்கு பாராட்டவேண்டியது எனது கடமையாகும்.

இக்கைங்கரியம் கைகூடியமைக்கு, குறிஞ்சிக்குமரன் பல்கலைக்கழக மலையுச்சியில், அறிவும், அழகும், இளமையும் பொருந்திய இச்சூழலில் அமர்ந்திருந்து, யாவருக்கும் அருள்பாலித்து ஆட்சி செலுத்துகின்றமையே காரணமாகும்.

இவ்வாலயம் அமைக்கப்பட்ட 1968ம் ஆண்டு முதல் ஆறு கும்பாபிஷேகங்கள் முறையே 1968, 1980, 1986, 1998, 2010, 2022 ஆம் ஆண்டுகளில் இனிதே நடந்தேறியுள்ளன. இந்த ஆறு கும்பாபிஷேகங்களிலும் பங்குபற்றியமையே எனது வாழ்க்கையில் கிடைக்கப்பெற்ற ஒரு பெரும் பேறாகவே கருதுகின்றேன்.

கடந்த 55 வருடகாலமாக இவ்வாலயத்தின் வளர்ச்சியிலும் செயற்பாடுகளிலும் ஏதோ ஒருவகையில் ஈடுபட்டிருந்தமையையிட்டு மனநிறைவு அடைகின்றேன்.

அடியார்கள் அனைவரும் எண்ணிய கருமங்கள் எல்லாம் இனிதே நிறைவேறி, சகல சௌபாக்கியங்களும் பெற்று, நீடூழிவாழ எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் திருவருள் பாலிப்பாராக. இக்குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை, நிலையான மகிழ்ச்சியையும் மனநிம்மதியையும் தருகின்ற ஒரு அமைதியான இருப்பிடமாக பேணப்பாடுபடுவோமாக.

**பேராசிரியர் செ.சிவயோகநாதன்**
முன்னாள் பேராதனைப்பல்கலைக்கழக
இந்து மாணவர்சங்கம் பெருந்தலைவர்,
இந்து பட்டதாரிகள் மன்றத்தலைவர்,
ஆலய பொறுப்பாண்மைக்குழுத்தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகக் குழு – 2022

பேராசிரியர் வை. நந்தகுமார் (தலைவர்)

ரா மகேஸ்வரன் (செயலாளர்)

வி. தர்மதாசன் (பொருளாளர்)

பேராசிரியர் வ. மகேஸ்வரன்

பேராசிரியர் செ. சிவராசசிங்கம்

பேராசிரியர் த. சிவானந்தவேள்

கலாநிதி த. விநாயகதாசன்

கலாநிதி கே.நவரட்ணராஜா

எஸ் மயூரன்

லோ. தசாந்தன்

தி. வெங்கடேஸ்வரன்

கே. தயாளினி

எல். ராகவன் (உபயகாரர்)

எஸ். கருணாகரன் (உபயகாரர்)

பு.புஸ்பலிங்கம் (உபயகாரர்)

**மாணவர்கள்**

ஜெ. கபிலானந்

ச. தினேஷ்

ந. சுமித்ரசாந்த்

கா. கௌசிகன்

ச. தனுசிகன்

ம. மணிவண்ணன்

மா. அமலன்

ர. சோபன்

நா. சுபகேதன்

க. மாலவன்

ச. யாழரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய திருப்பணி வேலைகளின் போது...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய திருப்பணி வேலைகளின் போது...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிஞ்சிக் குமரனின் திருவடிகளில் மலரும் நினைவுகள்

குறிஞ்சிக் குமரன் என்று ஒரு முறை சொன்னாலே ஓடியே வந்து எம்மைக் காப்பாய். உன்னைப் போல ஒரு தெய்வம் உலகில் இல்லை என்று எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட குமரா ! ஞான வள்ளலே ! எங்கள் இன்னல்களைத் தீர்ப்பாயா என்று கேட்கு முன்பே ஓடோடி வந்து எங்கள் கவலைகளை , குறைகளைத் தீர்த்து எங்களுக்கு ஆறுதல் வழங்கும் குறிஞ்சிக் குமரா , முருகா உன்னை வணங்குகிறோம். போற்றினோம் எங்களை என்றும் காத்து அருள்செய்வாயே !

வாழ்க்கைக்கு அர்த்தமே வாழ்வின் நோக்கமே, வாழ்க்கையின் முதலும் முடிவுமாகிய பயனே, இறைவனிடம் பக்தியை வளர்த்துக் கொள்வதும், வீடுபேறு அடைவதும், நெஞ்சம் உமக்கு இடமாக வைத்தேன். கடவுளை நினையாது ஒரு பொழுதும் இருந்தறியேன்.அகத்தின் இருளை அகற்றி ஆண்டவனை அங்கே குடியமர்த்த வேண்டும்.

வாழ்த்த வாயும் , நினைக்க மட நெஞ்சும் தந்த எங்கள் குறிஞ்சிக் குமரனை நினைத்தாலே போதும். குறிஞ்சிக் குமரா உன் திருவடிகளில் என்றும் என் நினைவுகளை நினைக்கிறேன். குமரா உன்னை நினையாது ஒருபொழுதும் இருந்தறியேன். இதனால்தான் என் மகனுக்கு குமரன் எனப்பெயரிட்டு உன்பெயரைத் தினமும் உச்சரிக்கிறேன். குறிஞ்சிக் குமரா எங்கள் வாழ்க்கையின் ஒளி விளக்கே, உங்கள் திருவடிகளில் சிரம்தாழ்த்தி வணங்கி, என் நினைவு இதழைச் சமர்ப்பிக்கிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் (1966-1969) கலைப்பிரிவு மாணவியான எனக்கும் இறைபணி செய்யும் பாக்கியம் கிடைத்தது. 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்பதற்கிணங்க, இந்து மாணவர் சங்கத்தின் உறுப்பினராக எனக்குக் கோவிலில் சரியைத் தொண்டுகள் செய்ய நிறையச் சந்தர்ப்பம் கிடைத்தது. நிறையச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் சிலவற்றையாவது உங்களோடு பகிர நினைக்கிறேன்.

பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதியின் விருப்பத்திற்கேற்ப என்னால் இயன்ற தொண்டுகளைச் செய்தேன். தமிழ் சிறப்புக்கலை மாணவியாயிருந்த நான், சங்கமித்தா விடுதியிலேயே தங்கியிருந்தேன். பேராசிரியர் வீடு எங்கள் விடுதிக்கு அருகாமையில் இருந்தமையால், அவர் அதிகாலையில் குமரன் கோவிலுக்குச் செல்லும் பொழுதெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களையும் கூட்டிச்செல்வார். ஆலயத்தில் செய்ய வேண்டிய சரியைத் தொண்டுகளைச் செய்வோம்.

1968ல் நடந்த கும்பாபிஷேக விழாவிற்கு எங்களால் இயன்ற தொண்டுகளைச் செய்தோம். கோவிலைக் கூட்டிச் சுத்தம் செய்தல், பூமாலை கட்டுதல், அன்னதானத்துக்கான சமையல் வேலை எனப் பல பணிகள் புரிந்தோம். தேவார திருமுறைகள் பாடுதல், உற்சவங்களில் சுவாமி வெளிவரும்போது பின்னால் பஜனை பாடுதல் என்று பல பணிகள். மாணவர்களின் பஜனைப் பாடல் ஓசை விண்ணையே அதிரவைக்கும்.

ஆலயப் பரிபாலனத்திற்குத் தேவையான நிதி சேகரிப்பிலும் இந்து மாணவர் சங்கம் சார்பில் எங்களால் இயன்ற நிதி உதவிகளைச் சேகரித்துக் கொடுத்தோம். என் விடுதியில் உள்ள மாணவிகள் பல ஊரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் விடுமுறையின் போது ஊருக்குச் செல்லும் பொழுது நன்கொடைச் சீட்டுகளைக் கொடுத்து அனுப்புவேன். அவர்களும் இயன்ற நன்கொடைகளைச் சேர்த்து வந்து கொடுப்பார்கள்.நானும் என் சார்பில் கடைகள், வீடுகள் என்று என்னால் இயன்ற நிதியைச் சேகரித்துக் கொடுப்பேன்.

கொழும்பில் சரஸ்வதி மண்டபத்தில் நாடக நிகழ்ச்சி, மலையகத்தில் நடந்த பட்டம்மாளின் கச்சேரி என வெளி மாவட்டங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளுக்குச் சென்று என்னால் இயன்ற உதவிகளைச் செய்தேன். குறிஞ்சிக் குமரன் ஆலய முன்றலில் நடந்த பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளின் பஜனைக் கச்சேரியை மறக்கவே முடியாது. அவரது முருகன் பாடலின் இனிய ஓசை இன்றும் என்காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட குறிஞ்சிக் குமரனின் திருவுலா ஊர்வலக் காட்சியை என்றுமே மறக்கமுடியாது. மங்கல வாத்திய இசையோடு, வேத மந்திரங்கள் ஒலிக்க, மாணவர்களின் தேவாரத்திருமுறை, பஜனைக் கோஷம், மாணவர்களின் அரோகரா என்ற கோஷமும் யாழ்ப்பாணம் தொடக்கம் பேராதனை வரை ஒலித்துக் கொண்டே வந்தது. அதை மறக்கமுடியாது.

பல்கலைக்கழக வாழ்க்கையில், குறிஞ்சிக் குமாரனுக்குத் தொண்டுசெய்யக் கிடைத்த பாக்கியத்தை என் வாழ்வில் என்றுமே மறக்கமுடியாது. எங்கள் திருமணத்தின் பின்பும் என் கணவரோடு சேர்ந்து முடிந்த வேளையில் தைப்பூச விழாவிற்குச் செல்வோம். பட்டதாரிகள் மாணவர் சங்கத்தால் நடைபெறும் திருவிழாவில் எங்கள் பங்களிப்பும் உண்டு. இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையலுக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்வோம். தைப்பூச திருவிழாவில் பிரசாதமாக வழங்கப்படும் இராசவள்ளிக்கிழங்கு மறக்கமுடியாத பிரசாதம். அதேபோல, சாத்துப்படியின் அழகு சொல்லவே முடியாது. வைத்திய கலாநிதி சிவஞானத்தின் கைவண்ணத்தில், அழகான சாத்துப்படியில் முருகன் அலங்காரம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

1983ம் ஆண்டில் நாட்டில் நடந்த ஆடிக்கலவரத்தின் பின், குறிஞ்சிக் குமரன் ஆலயத்திற்குக் கணவரோடு சென்றேன். கோவில் அர்ச்சகர் கோவிலில் ஏற்பட்ட அழிவுகளைச் சொன்னார். அதில் பெருங்கவலை கோவிலில் மயில்களைக் காடையர்கள் வெட்டிக் கொன்றதுதான் மிக்க மனவேதனையைக் கொடுத்தது. காடையரால் சேதமாக்கிய உடைக்கப்பட்ட சிலைகளை எங்கள் வாகனத்தில் பேராசிரியர் குமரவடிவேல் ஏற்றி விட்டார்கள். அப்பொழுது என் கணவர் மின்சாரசபைப் பொறியியலாளராக, சுன்னாகம் மின்சார சபையில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அந்த உடைந்த சிலைகளை காங்கேசன்துறைக் கடலில் கொண்டுசென்று போட்டோம். சிலநாட்கள் கழித்து சென்று பார்த்த பொழுது, அச்சிலைகளை எடுத்தவர்கள் ஒரு மரத்தின் கீழ் வைத்துப் பூசை செய்வதைப் பார்த்து மகிழ்ந்தோம். 1968ல் கும்பாபிஷேகத்தில் பிரதிட்டை செய்த சிலைகளை அப்படிக் கடலில் எறிந்த கவலையில் இருந்த எங்களுக்கு சிறு நிம்மதியைக் கொடுத்தது.

நாட்டின் நிலைமை காரணமாகவும், பிள்ளைகளின் விருப்பப்படியும், தற்பொழுது கனடா நாட்டிலுள்ள, அல்பேட்டா மாகாணத்திலுள்ள, கல்கரியில் வாழ்ந்து வருகிறோம். நல்லூர்க் கந்தன் திருவிழாவினைக் காணவரும் எங்கள் குடும்பம், பேராதனைக் குறிஞ்சிக் குமாரனையும் தரிசித்துவிட்டுத்தான் இங்கு திரும்புவோம்.

2001ம் ஆண்டு கல்கரி வந்தபோது இங்கு வழிபட முருகன் கோவில் இல்லை. ஆனால் , கல்கரி திருமுருகன் சங்கம் கோவில் கட்டும் விருப்போடு பணியாற்றி வந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்த சிலர் தலைவராக திருமுருகன் சங்கத்தில் பதவி வகித்தார்கள். பேராசிரியர் நல்லநாயகம், பொறியியலாளர் திரு.ஞானக்குமார், ஆர்.எஸ் . பிள்ளை என குறிஞ்சிக் குமரனின் அடியார்களைச் சந்தித்தோம். நல்லூர்க் கந்தன், குறிஞ்சிக் குமரன் என முருக வழிபாட்டில் ஈடுபாடுடைய எங்களை, கல்கரியிலும் முருகன் கோவில் அமைக்க வேண்டும் என்பது முருகன் கட்டளை . இதனால், நானும் என் கணவரும், ஏன் எங்கள் குடும்பமே முருகன் கோவில் கட்ட முழு ஆதரவினை கொடுத்தோம். இதனால் நிதி சேகரிப்புக்கு கலை நிகழ்ச்சிகள், நன்கொடை சேகரித்தல் என பல முயற்சிகளில் இடுபட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரின் தாராள மனப்பான்மையால், எங்கள் எண்ணம் நிறைவேறியது. ஆம் , 2019ம் ஆண்டு கல்கரி முருகன் ஆலயமும், அதனைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் சிறப்பாக நடந்தேறியது.

2022ல் நடந்த 6வது குறிஞ்சிக் குமரன் கும்பாபிஷேகத்தில் கலந்து முருகன் அருளாசிபெற எங்களுக்கு பெரும் விருப்பம். நாட்டு நிலைமையால் அது நிறைவேறவில்லை. ஆனால் , கும்பாபிஷேக விழாவினை நேரலை மூலம் தரிசித்து மகிழ்ந்தோம். நன்றிகள் பல. குறிஞ்சிக் குமரனின் இந்து மாணவர் சங்கத்தவருக்கும் கும்பாபிஷேக குழுவினருக்கும்! என்றும் குறிஞ்சிக்குமரன் அடியாருக்கு நல்லாசியும் நல்லருளும் நல்க குறிஞ்சிக்குமரனை வேண்டுகின்றோம்.

அன்புடன்

**திருமதி .புவனா ஞானலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக நிகழ்வுகளின் போது...








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக நிகழ்வுகளின் போது...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக நிகழ்வுகளின் போது...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுருகாற்றுப்படை - ஆறுமுகநாவலர் உரை

சங்க இலக்கியங்களான பதினெண் மேற்கணக்கு நூல்களை, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இருபெரும் பகுதிகளாகக் கொள்வது மரபு. நெடும்பாட்டு நூல்களான பத்துப்பாட்டுள், ஐந்து நூல்கள் ஆற்றுப்படை இலக்கியங்கள். இவற்றுள்ளே ஏனைய பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய நான்கையும் விட, பல தன்மைகளிலே வேறுபட்டு, தனிச்சிறப்பு வாய்ந்த நூலாகத் திருமுருகாற்றுப்படை விளங்குகின்றது. முறைசெய்து கோலோச்சும் இறைவர்களைப் பாடும் சங்க இலக்கியப் பெருமரபைப் பேணுவனவாக, ஏனைய ஆற்றுப்படைகள் இருக்கும்போது, முருகாற்றுப்படை மட்டும்தான், 'அந்தமில் இன்பத்து வீட்டினைத்' தரும் நெறியைச் சுட்டுவதாய், தெய்வத்துக்கெனப் பாடப்பெற்ற ஒரே சங்க நெடும் பாடலாய் விளங்குகின்றது. அதாவது, பிற ஆற்றுப்படைகள் இம்மைப் பயனை மட்டும் நூற்பயனாகக் கொள்ள முருகோ, அத்தோடு மறுமை மற்றும் வீட்டுப் பயன்களையும் தரும் நூலாக உள்ளது. இது, இந்நூலின் முக்கியமான தனித்துவமாகும்.

'சொல்லுக்குக் கீரன்' எனப் புகழப்படுகிற நக்கீரர் என்னும் சங்கப் புலவராலே இயற்றப்பெற்று, 317 அடிகளில் இலங்கும் இந்நூல், திருமுருகன் அருள் பெற்ற ஒருவன், அவ்வருள் பெற விழையும் பிறரை முருகனை நோக்கி ஆற்றுப்படுத்துவதாக அமைந்து,இயற்கை நவிற்சி, உவமைப்புனைவு முதலிய அணிகளைக் கொண்டமைந்த சிறந்ததோர் இலக்கியமாகத் திகழ்கிறது. அதேவேளை,மந்திரமாகக் கொள்ளப்பெற்று, பலராலும்சமய ஓதப்பெற்றுவரும் நூலாகவும் உள்ளது. பாராயண நூலாகையால் சைவத் திருமுறையுள் தொகுக்கப்பெற்று, பதினொராந் திருமுறை நூல்களுள் ஒன்றாகவும் இது வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, பதினெண் மேற்கணக்கு நூல்களுள் ஒன்றாகவும் திருமுறைத் தொகுப்பு நூல்களுள் ஒன்றாகவும் காணப்படுவது திருமுருகாற்றுப்படை மட்டும்தான்.

புலவராற்றுப்படை எனவும் மிகச்சிறுபான்மை வழங்கப்படும் இந்நூலுக்கு, பெருவழக்காக இருக்கும் திருமுருகாற்றுப்படை எனும் பெயர், இதன் பிறிதொரு தனித்துவத்தை உணர்த்துகின்றது. மற்றை ஆற்றுப்படைகள், ஆற்றுப்படுத்தப்படும் மக்கள் கூட்டத்தாரின் பெயரிலேயே - கூத்தராற்றுப்படை போல - வழங்குகின்றன. ஆனால், இந்த ஆற்றுப்படைதான் பாட்டுடைத் தலைவன் முருகன் பெயரில் வழங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, குறிப்பிடத்தக்க தனித்தன்மைகளைக் கொண்டமைந்த திருமுருகாற்றுப்படை, பல புதிய விடயங்களின் தொடக்கமாக இலக்கியங்களுக்கு வழிகாட்டியாக அமைந்து உள்ளது. இந்நூலிற் காணப்பெறும் விடயங்கள் மற்றும் வெளிப்பாட்டு உத்திகள் பலவும் பின்வந்த தமிழ்ப் புலவர்கள் பலராலும் தொடர்ந்து கையாளப்பெற்றுள்ளன. பின்வந்த இலக்கியங்களுக்கு வழிகாட்டியாக அமைந்து இந்நூல், பல வழிகளிலும் புதிய மரபின் தொடக்கமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, பக்திமையின் மொழி தமிழ் எனப் போற்றப்படும் அளவுக்குத் தமிழிற் பெருவாரியாகத் தோன்றிய பக்தி இலக்கியங்களுக்கு, சில தன்மைகளை வழங்கியது என்ற வகையில், இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகிறது.

இந்நூலிலிருந்து, பின்னைய நூல்கள் பெற்றுக்கொண்ட தன்மைகள் சிலவற்றை இவ்விடத்துச் சுட்டிச் செல்லுதல் கடன். தமிழ் நூல்களை மங்கலச் சொற்களாலே தொடக்கி வைப்பதே புலவர் மரபு. சிறந்த மங்கலச்சொல்லாகவும், பிரணவத்தை உணர்த்தும் சொல்லாகவும் விளங்கும் 'உலகம்...' என்பதனைத் தொடக்கமாகக்கொண்டு நூலாக்கும் மரபை *'உலகம் உவப்ப வலனேர்பு'* எனத் தொடக்கி வைத்தது திருமுருகாற்றுப்படையேயாகும்.

அடுத்து, தமிழ்ப் பக்தியிலக்கியங்களின் முக்கிய இயல்புகளுள் ஒன்றாக இறைத்தலங்கள் குறித்த வருணனையைக் குறிப்பிடலாம். இயற்கை வருணனையோடு இணைத்து, தலத்தை உணர்த்துகின்ற இந் நெறியின் தொடக்கமாகவும் *"கருங்கோட்டுஆமா நல்ஏறு சிலைப்ப, சேண் நின்று இழுமென இழிதரும் அருவி பழமுதிர்ச்சோலை,....."* எனப்பாடும் திருமுருகாற்றுப்படை விளங்குகிறது.

கடவுளைப் பலபெயர்கள் கூறித்துதித்து வணங்குதல், கடவுளின் தோற்றப்பொலிவை வருணித்தல் என்பன தமிழ்ப் பக்தி இலக்கியங்களில் அடுத்துச் சிறப்பிடம் பெறும் விடயங்களாகும். இவ்வாறு காணப்பெறும் துதிகள், தமிழ் அருச்சனை வழிபாட்டுக்கு மிகவும் உதவிவருகின்றன என்பதும் கருதத்தக்கது. திருமுருகாற்றுப்படையில் *'அறுவர் பயந்த ஆறமர் செல்வ, ஆல்கெழு கடவுட் புதல்வ, மால்வரை மலைமகள் மகனே, மாற்றோர் கூற்றே, வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ'* என முருகனது பலபெயர்கள் வரிசையாக விளிக்கப்பெறுகின்றன. பலரும் பாராயண நூலாகத் தினமும் திருமுருகாற்றுப்படையினை ஓதுதற்கு இதுவே காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். இந்நெறியின் தொடர்ச்சியாகவே, கீர்த்தித்திருவகவல், போற்றித்திருவகவல் முதலிய திருவாசகப் பகுதிகளைக் கொள்ளமுடியும்.கடவுளின் தோற்றப்பொலிவை வருணித்தல் என்னும் அடுத்த அம்சமும், பின்னை பக்தி இலக்கியங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில் திருமுருகாற்றுப்படையில்*'மா இருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம் ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக் காதலின் உவந்து வரங் கொடுத்தன்றே"* முதலாகக் காணப்படுகின்றது. இவ்வாறு, திருமுருகாற்றுப்படையின் பாதிப்போடு நூல்கள் பலவும் காலந்தோறும் தோற்றம்பெற்று வந்துள்ளன. ஆதலால், தமிழிலக்கியப் பெரும் புலத்துள் வளம்மிக்கசமய இலக்கியமாக திருமுருகாற்றுப்படை மீளமீளவும் தன்னை நினைப்பித்து வந்துள்ளது.

காலத்துக்குக் காலம் இத்திருமுருகாற்றுப்படை அறிவுலகில் பொருள்கொள்ளப்பட்டும் வந்துள்ளது. குறிப்பாக, இடைக்காலத்தில் எழுந்த உரைகள் இவ்விடத்திற் சுட்டத்தக்கன. எந்தவொரு பத்துப்பாட்டு நூலைக் காட்டிலும் அதிக உரைகளைப் பெற்ற நூலாக அக்காலத்தில் திருமுருகாற்றுப்படை இருந்தது. சங்க இலக்கியப் பிரதிகள் பலவாயிருக்க அவற்றுள் திருமுருகாற்றுப்படைக்கு மட்டும் ஏன் அதிக உரைகள் இடைக்காலத்தில் எழுந்தன என்பது குறித்துக் காணுதல் பொருத்தமானதாகும்.இது சமயம் சார்ந்த பிரதியாக – சைவச்சார்பினதாக - இருப்பதுதான் இதற்குக் காரணம் என்று ஆய்வாளரிற் சிலர் கருதுவர். எனினும், வைணவரான பரிமேலழகர் முதலியோரும் உரை எழுதியிருப்பதை நோக்குகையில், இக் கருத்துப் பொருந்துமோ என்பது ஆய்வுக்குரியது. திருமுருகாற்றுப்படையானது அக்காலத்திலியங்கிய குருகுலங்கள் பலவற்றிலும் பாடநூலாக இருந்திருக்குமாதலால், கற்பித்த அறிஞர் பலரும் உரை எழுதியிருப்பரென எதிர்பார்க்கலாம்.

எவ்வாறெனினும், இடைக்காலத்தில் பின்வரும் ஐந்து உரைகள் திருமுருகாற்றுப்படைக்கு எழுந்தன:

- நச்சினார்க்கினியர் உரை
- பரிமேலழகர் உரை
- உரையாசிரியர் உரை
- கவிப்பெருமாள் உரை (பரிப்பெருமாள் உரை)
- பரிதியார் உரை

இங்கு சுட்டப்பெற்றுள்ள ஐவரும், தமிழ்ச்சூழலில் பிரபலமான உரையாசிரியர்களாக அறியப்படுபவர்கள். இவர்களுள் நச்சினார்க்கினியருடைய உரையைத் தவிர, ஏனைய உரையாசிரியர்களது உரைகள் உண்மையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடையனதாமோ என்பது உறுதிபடத் தெரியவில்லை கிடைக்கப்பெற்ற உரைகளுக்கு ஏலவே புகழ் பெற்ற உரையாசிரியர்களது பெயர்கள் இடப்பட்டனவா என்பது குறித்து ஐயம் உள்ளது. இவற்றுள் உரையாசிரியர் உரை எனச் சுட்டப்பெறும் உரையானது, அப்பெயராலே பெரிதும் அறியப்படும் இளம்பூரணராலே எழுதப்பட்டதன்று என்பதை, நடை முதலியவற்றை எடுத்துக்காட்டி ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். ஏனைய உரைகள் பற்றி அவ்வாறு அறுதியிட்டுக் கூறுமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறாக, உரையாசிரியர் காலகட்டத்தில் பல உரைகளைக் கண்ட திருமுருகாற்றுப்படைப் பிரதியானது,பத்தொன்பதாம் நூற்றாண்டில் பதிப்புச் செயற்பாடுகள் முனைப்புற்ற காலனிய காலப்பகுதியிலும் தன் செல்வாக்கை மீளவும் நிறுவுகின்றது. சங்க இலக்கியப் பிரதிகளுள் அச்சுவாகனம் கண்ட மிக மூத்த பிரதியாக அது உள்ளது. சங்க இலக்கியங்கள் முதன்முதல் அச்சான விபரங்களைத் தரும் பட்டியல் ஒன்றில், 1851இல் வெளிவந்த ஆறுமுகநாவலர் பதிப்புத்தான் திருமுருகாற்றுப்படைக்கான முதற்பதிப்பாகச் சுட்டப்பட்டுள்ளபோதும், இன்று, அதற்கும் மூத்த பதிப்பாக திருத்தணிகை விசாகப்பெருமாளையர் பதிப்பு அறியப்படுகின்றது. விசாகப்பெருமாளையர், ஆறுமுகநாவலர் முதலிய அக்கால அறிஞர்கள் ஏனைய சங்கஇலக்கிய ஏடுகள் இருந்தபோதும், திருமுருகாற்றுப்படையைப் பதிப்பித்தமைக்கு, அவர்களது சைவசமயச்சார்பே காரணம் என, ஆய்வாளர்கள் சுட்டியுள்ளனர். சைவமரபில் பாராயண நூலாகத் திருமுருகாற்றுப்படை உள்ளமையை யாவருமறிந்தவர். நாவலரும் இதனைப்பாராயணம் பண்ணி வந்தமையை அவர் வாழ்க்கை வரலாறு தெரிவிக்கின்றது.

காலனிய ஆதிக்க காலகட்டத்தில், அச்சுப்பொறியானது தொடக்கத்தில் அரச ஆவணங்களையும், மிஷனரிகளுடைய சமயத்துண்டுப் பிரசுரங்கள் மற்றும் குறுநூல்களையுமே வெளியிட்டு வந்தது. 1835ஆம் ஆண்டு சுதேசியரும் அச்சியந்திரம் வைத்திருப்பதற்கான அனுமதி வழங்கப்பட அச்சுப்பண்பாட்டில் புதியமாற்றம் நிகழ்ந்தது. தமது சமயத்தையும், மொழியையும் மீட்டெடுக்கவல்ல பிரதிகளை அச்சின்வழி உருவாக்க சுதேசியர் விழைந்தனர். இவர்களுள் சமய மீட்டெடுப்புக்காக தமது வாழ்க்கையைப் பரித்தியாகம் செய்த நாவலர் மிக முதன்மையானவர். சைவ சமயத்தையும் கருவியாகிய தமிழ்க்கல்வியையும் காக்கவெனப் புறப்பட்ட அவர், திருமுருகாற்றுப்படையைப் பதிப்பிக்க எண்ணினார். முன்பு கூறப்பெற்றது போல, திருமுருகாற்றுப்படையானது சைவர்களது பெருந்தொகுப்புள் அடங்குமொரு திருமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாகும். அதேவேளை மிகப்பழைமையான செவ்விலக்கியப் பிரதியுமாகும். சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனக் கொண்டிருந்த நாவலர், சைவசமயமும் தமிழிலக்கியமும் இணையும் புள்ளியாகிய இப்பிரதியைப் பதிப்பிக்க விழைந்ததில் வியப்பில்லை.

இதன்மூலம், தமிழ்ச்சமூகத்தின் மிகத்தொன்மையான சமயம் சைவம் என்பதை, அவர் அப்பொழுது மதம் மாற்றிக் கொண்டும் - மதம் மாறிக் கொண்டும் இருந்தவர்களுக்கு உணர்த்த விழைந்தார். பிராமணருக்கும், குறவருக்கும், கானவருக்கும் அருளிய முருகன் பற்றிய நூலை மீளப்பதிப்பித்து வழங்குவதன் மூலம், சமுதாய அடுக்கில் எந்நிலையில் உள்ளவர்க்கும் சைவசமயம் உயரிய விழுச்செல்வத்தை வழங்கும் என்ற செய்தி அவரால் உரத்துச் சொல்லப்பட்டது. இது அக்காலத்தின் தேவையாக இருந்தது. தமிழர் தொல் கடவுளான முருகனை அச்சின்வழி தூஷித்த கிறித்துவக் கண்டனங்களுக்கான பதில்களுள் ஒன்றாக அவர் இப்பதிப்பை வெளிப்படுத்தினார்.

பதிப்புச் செயற்பாட்டோடு சேர்ந்து காலனியகாலகட்டத்தில் உரைநடை மற்றும் புத்துரைச் செயற்பாடுகளும் முனைப்புற்றன. சாதாரண பொதுமக்களுக்கான பிரதிகளை வழங்கவேண்டிய சூழல் உருவாகியிருந்த நிலையில், பழைய மரபுரையோடு திருமுருகாற்றுப்படையை பதிப்பிப்பது பொருத்தப்பாடுடையதன்று என்பதை புரிந்து கொண்ட நாவலர், அப்பிரதிக்குத் தாமே ஒரு புதிய உரையை எழுதிப்பதிப்பித்தார். சங்க இலக்கியப் பிரதியொன்றுக்கு எழுதிப் பதிப்பிக்கப்பட்ட முதலாவது புத்துரைப் பதிப்பு நாவலருடைய திருமுருகாற்றுப்படை உரைப்பதிப்புத்தான். 1853இல் வெளியான இப்பதிப்பின் மூலம் தமிழ்ச் செவ்விலக்கியப் பதிப்பு மற்றும் உரை வரலாற்றில் அவர் மிக முக்கிய ஆளுமையாகத் தன் பெயரைப் பொறித்துள்ளார்.
நச்சினார்க்கினியர் உரையைப் பின்பற்றி அவர் வரைந்த புத்துரை, அவர்தம் உரையாற்றலின் பல்வேறு பரிமாணங்களையும் உள்ளவாறு வெளிப்படுத்துகின்றது. இவ்வுரை தக்க உரையிற் காணப்படக்கூடிய உரைநெறிகள் பலவற்றையும் கொண்டது. கொண்டுகூட்டிப் பொருள் தருதல், அகராதிப் பொருள் தருதல், இலக்கணக் குறிப்புத் தருதல், மேற்கோள் காட்டல், காரணஞ் சுட்டல், அணியை விளக்கல், பழமரபுக் கதை கூறல் முதலியனவாக அமையும் உரைநெறிகளை மட்டுமன்றி தத்துவ விளக்கம் செய்தல், உட்பொருள் உரைத்தல் முதலியவற்றையும் இது பேணிநிற்கின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகாற்றுப்படை வரிகள் சிலவற்றுக்கு சைவ சித்தாந்த தத்துவ விளக்கம் செய்துள்ளமை, நாவலர் உரையின் தனித்துவ அம்சங்களுள் ஒன்றாகும். மேலும், நச்சருடைய உரையை, பெரிதும் எளிமைப்படுத்தி தன் சமகால வாசகர்களுக்கு வழங்கவே நாவலர் இப்புத்துரையை ஆக்கினார் என்பது தெளிவு. இவ்வெளிமைப்படுத்துதல் பல நிலைகளிலே இடம்பெற்றுள்ளது. இதனை, நச்சரதும் நாவலரதும் பின்வரும் உரைப்பகுதியைக் காண்பதனூடாக, இலகுவிலே புரிந்துகொள்ளலாம்:

"...உருவப் பல்பூத்தூஉய் வெருவரக் குருதிச் செந்தினை பரப்பிக்..."

நச்சர்:- "சிவந்த நிறத்தினையுடைய பல பூக்களையுந் தூவி அச்சம் வரும்படி உதிரமளைந்த சிவந்ததினையையும் பரப்பி..."

நாவலர்:- "உருவப் பல்பூத்தூய் - நிறத்தினையுடைய பல பூக்களையும் தூவி..."

"வெருவரக் குருதிச் செந்தினை பரப்பி – (கண்டவர்களுக்கு) அச்சம் தோன்றும்படி இரத்தம் அளைந்த சிவந்த தினையைப் பரப்பி..."

இங்கு, நச்சர் பொருள் கண்ட நீண்ட செய்யுளடியை வாசகர் நலன்கருதி உடைத்து, சிறு சிறு பகுதிகளாக்கிப் பொருளுரைக்கின்றார் நாவலர். மேலும், செய்யுளடியின் பொருள் தெளிவாக விளக்கமுறும்படியாக மூலத்தில் பேசப்படாத "கண்டவர்களுக்கு" என்பதை அடைப்புக்குறிக்குள் வருவித்து, வாசகர்கள் நேயப் பதிப்பாக இதை வழங்குகின்றார்.

"ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி"

நச்சர்: "கெடாத வலியினையுடைய பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி... பிணிமுகம் மயிலுமாம்."

நாவலர்: "ஓடாப்பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி – (வலிமை) நீங்காத பிணிமுகம் என்னும் பட்டத்தையுடைய யானையை வாழ்த்தி...

'பூட்கைப் பிணிமுகம்' என்பதற்கு யானையையும் மயிலையும் எனப் பொருளுரைப்பினும் பொருந்தும்."

இங்கு சொற்களை மாற்றி இடுவதன் மூலம் பொருள்கோடலை எளிமையாக்குகின்றார் நாவலர். "கெடாத வலியினையுடைய" என நச்சர் கூறியதை நாவலரோ, "வலிமை நீங்காத" என இலகுபடுத்தியுள்ளார். மேலும், "பிணிமுகம் மயிலுமாம்" என்று, கற்றோர்க்கு விளங்கத்தக்க வகையில் சுருக்கமாக உரைத்துச் சென்ற நச்சர் கருத்தை, மற்றோரும் எளிதில் உணரும்படியாகச் சற்றே விரித்து,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பூட்கைப் பிணிமுகம்' என்பதற்கு யானையையும் மயிலையும் எனப் பொருளுரைப்பினும் பொருந்தும்" என்று கூறிச் சென்றுள்ளார்.

மேலும், நச்சினார்க்கினியருடைய உரைப்பகுதிகளை அனுசரித்துச் செல்லும் இடங்களிற்கூட, நிறுத்தக்குறிப் பிரயோகங்களைப் பொருத்தமுறப் பயன்படுத்தல் முதலிய தன்மைகளாலே வாசகர்களுக்கு மேலும் பொருள் விளக்கங்களை இலகுபடுத்தியிருப்பதனைக் காணமுடிகின்றது.
எடுத்துக்காட்டாக பின்வருவதைக் காட்டலாம். "கை புனைந்தியற்றா கவின்பெறு வனப்பு" என்ற வரிக்கு நச்சர், "ஒருவர் கையாற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்கு இயல்பாகப் பெற்ற அழகினையுடையரென்றவாறு" எனப் பொருள் கூறுகின்றார். இதை ஏற்றுத் தாம் உரை எழுதும் நாவலர், "ஒருவர் கையினாலே சிறப்பித்துப் பிறப்பியாத அழகை (த் தமக்கியல்பாக)ப் பெற்ற அழகினையும்" என அடைப்புக்குறிகள் பெய்து எழுதுவதன் மூலமாக, மூலத்தில் இல்லாமல் வருவித்து உரைக்கப்படும் பகுதியை இலகுவாக வாசகருக்கு இனங்காட்டி விடுகின்றார்.

இனி, இவ்வுரையில் வெளிப்படும் நாவலரது உரைநடை நலன் குறித்தும் நோக்குதல் கடன். இவர் நடை ஆற்றொழுக்கானது. எளிமையானது. நிறுத்தக் குறிகளைப் பொருத்தமுற இணைத்திருப்பது. தேவையற்ற விவரிப்புக்களைக் களைந்து இடமறிந்து உரைக்கும் அவர்தம் நடைநலத்துக்கு பின்வரும் பகுதியை ஓர் எடுத்துக்காட்டாகச் சுட்டமுடியும்:

> "பிராமணர்கள், அறிந்து உடுத்து, உச்சரித்து, எடுத்து அருச்சித்து, தம்மைப் புகழ்ந்து துதிக்க மகிழ்ந்து திருவேரகத்தின் கண்ணே எழுந்தருளியிருத்தலும் உரியர்."

சமகால வாசகர் குறித்த இந்தக் கரிசனைதான் நாவலர் பதிப்பின் மையப்புள்ளி. இதன்வழி, தமிழ்ச் செவ்விலக்கியங்களுக்கு, "பழைய உரைகளினுடைய திட்டத்தைப் பாதுகாத்து, பிற்கால வாசகர் எளிதில் அறியக்கூடிய நடையில் அமையும்" புத்துரை எழுதும் பாதையினது தொடக்க ஆளுமையாக தமிழ்ப்பதிப்பு வரலாற்றில் அவர் உருவாகினார். மூலநூலிலும், தமக்கு உசாத்துணையாகவிருந்த உரை நூலிலும் அவருக்கிருந்த தாடனமும், அச்சுப்பொறியின்வழி வாசகர் நேயப்பதிப்பை உருவாக்கவென அவர்கொண்டிருந்த விருப்பும், நிறுத்தக் குறிகளைப் பொருத்தமுறப் பெய்து எழுதக்கூடிய ஆற்றலும், நடைநலத்தில் கொண்டிருந்த ஆளுமையும் ஒருங்கிணைந்த பதிப்பாக இத்திருமுருகாற்றுப்படைப் பதிப்பைக் காணமுடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, சங்க இலக்கியப்பிரதி ஒன்றுக்கு எழுந்த இடைக்கால உரையை ஒட்டி, தன் சமகாலத்தவருக்கு உரியதாக்கும் புத்துரைப் பிரதியை வழங்குகிறார் பதிப்பும் உரையும் உரைநடையும் வல்ல நாவலர்.

**பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்,**
தலைவர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டலாபிஷேக நிகழ்வுகளின் போது...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் இந்து தருமம் நூலானது நாட்டில் நிலவும் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியிலும் சிறப்பான முறையிலே வெளிவர எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனின் திருவருள் கூடியுள்ளது.

இலங்கையில் எமது இந்து தருமம் இதழுக்கு ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களுக்கு முதற்கண் நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் நூலுக்கு அழகுசேர்த்த பேராசிரியர்கள், போதனாசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் மனம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆலய நித்திய, நைமித்திய கிரியைகளை சிறப்பாக ஆற்றிவரும் ஆலய பிரதம குரு க.வரதராஜ குருக்கள் அவர்களுக்கும், ஆலய உற்சவங்கள் மற்றும் விசேட பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடந்தேற உதவிய அனைவருக்கும் ஆலய சிரமதானங்களை நடாத்த முன்னின்று உதவிய அனைத்து பீடமாணவர்களுக்கும் பல்கலைக் கல்விசார், கல்விசாரா ஊழியர்களுக்கும், கிராம மக்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். அத்துடன் எம்மை முன்னிறுத்தி எமக்குப் பின்னால் இருந்து எம்மை பலப்படுத்தும் பல்கலைக்கழக போதனாசிரியர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

அத்துடன் நூல் வடிவமைப்பிற்கு ஆலோசனை வழங்கி உதவிய நல்லுள்ளங்களுக்கும், விளம்பரங்களை தந்து இதழை சிறப்பித்த அனைத்து வர்த்தக பெருந்தகையினருக்கும் நன்றிகள் உரித்தாகுக. ஏனைய நன்றி கூற தவறிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**இ.தனுஜன்**
செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



LINGAN COOL BAR

52,Clock Tower Road,
Jaffna, SriLanka

LINGAN CREAM HOUSE

6055,Steeles Ave E, Toronto,
ONt, M1X OA7, Canada

326,Point Pedro Road,
Nallur, Jaffna, SriLanka
009421 222 4945

119,Kasthuriyar Road,
Jaffna, SriLanka
009421 222 7327









M.M Hall

Mallakam Road,
Chunnakam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


WE PROVIDE BEST QUALITY PRODUCTS
Northway
Family Mart
Save Money. Live Better.
Uppumadam Junction, K.K.S Road, Kondavil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Samuthraa mahal




Maruthanarmadam
~0793883719~


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.



**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SCIENCE WORLD

VICTORY MUST

66வது முறையாக கரங்களில் தவள
காத்திருக்கும் இந்து தர்மம் நாவலுக்கு
"New Science World" சார்பான
எம் வாழ்த்துக்கள்

New Science World

Navalar road -Brown road Junction,Jaffna
021 221 6690 & 077 336 4055

PIRAKANTH

Photo Copy Centre

School & Office
Stationary Items



Photocopy,
Colour print,
Computer typing,
Colour photocopy,
Binding, Laminating

SAINIKA
JEWELLERY

MANUFACTURERS OF GOLD JEWELS



T:P 077 725 1276
021 222 9298

No.239, RMS Building
Kasthuriyar road, Jaffna.

CHITHAMPARAPILLAI BOOK DEPOT



Proprietor
Mr.S.Sivam

Tel: 021 226 3223
Fax:021 226 4145
No:60,64
Mainstreet,
Nelliady.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குன்றெல்லாம் ஆள்பவன்
குகனாக வாழ்பவன் !
குறவள்ளிக் கந்தனவன்
குறிஞ்சிக்கு வேந்தனவன் !

பூவாறு முகங்களிலே
பேரருள் ஒளிவீசும் !
தூயன் அவன் திருவடியை
நாடு தினம் நாடு !!

தமிழ்ப்பூங்கா பதிப்பகம், நெல்லியடி - 021 226 4014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org